கல்கி

குடும்பத்துடன் களிக்க...

KALKI
30.7.2006 ரூ.8.00
80 பக்கங்கள்



போயஸ் தோட்டத்து புதிய செல்லப்பிள்ளை!

ன்? எதற்கு? எப்படி?

74 முதல்வர் வீட்டுக்குப் போகட்டும்!

52 அமெரிக்கா அழைக்குது டோய்!



20 கோடு தாண்டுது கோலிவுட்!

பெண் உயரதிகாரி அழகை வர்ணித்து அரிசி மூலம் அரசின் தரத்தைக் குறைத்து விட்டார் வேலு!

- எல்.மாறன், மேல்பட்டி

இடஒதுக்கீடு இருந்தாலும் பல மக்கள் அது பற்றித் தெரியாமலே வாழ்கிறார்கள். ஆதங்கம் தெளிவாய்த் தெரிந்தது.

- எஸ்.ராஜம், கரூர்

வாசகர் 'விஜயகாந்துடன் எங்களை ஒப்பிடாதீர்கள்' என்று சொல்வதில் நியாயம் இருக்கிறது. ஆம்... விஜயகாந்த் கட்சியில் கோஷ்டிப் பூசல்கள் இல்லையே!

- சி.கார்த்திகேயன், சாத்தூர்

அரிசியால் தரம் குறைந்த அரசு!



'உயிர்' திரைப்பட விமர்சனம் உயிரோட்டத்துடன் திகழ்ந்தது.

- என்.சண்முகம், திருவண்ணாமலை

மதமாற்றம் யாருடைய அனுமதிக்காகவும் காத்திருப்பதில்லை என்று தராசு அளித்த பதில் அருமை.

- பா.அச்சுதன், வயலூர்

உச்சநீதிமன்றம் தெளிவான தீர்ப்பு வழங்கிய பிறகும் மேல் தட்டினருக்கு இடஒதுக்கீடு தொடர்வது சமூக அநீதி மட்டுமல்ல நீதிமன்ற அவமதிப்பும் ஆகும். ஆக தவறைக் களைவதற்கு பதிலாக அது இன்னும் தொடரும் என்று பெரியார்தாசன் கூறுவது முறையற்றது.

- வெ.கல்யாணி, திருநெல்வேலி

- வி வீணா, ஐதராபாத்

மூலநோய் பற்றிய சந்தேகங்களும் விளக்கங்களும் மிகவும் பயனுள்ளதாய் அமைந்திருந்தன.

- வே.ஈஸ்வரன், இராஜபாளையம்

'மறக்காம சாப்பிட வந்துடுப்பா' என்ற கவிதை வரிகளில் 'பெத்த மனசின்'

பூச்செண்டு!

'அள்ளிக் கொடுக்கும் அமுதக் கரைசல்' அரசியல்வாதிகள் மட்டுமல்ல, விவசாயிகளும்கூட படித்துப் பயன்பட வேண்டிய கட்டுரை.

- கே.எஸ்.கோவர்த்தனன், சென்னை

'சுயமரியாதையையும் தன்மானத்தையும் காக்கவே

இலவசங்களை கொடுத்து கணக்குப் போடும் அரசுகளுக்கு தலையங்கம் நல்ல குட்டு!

- ஆர்.நாகராஜன், சென்னை

'உயிர்' படத்தின் கதைக்காக குட்டுவீர்கள் என்று பார்த்தால் சொதப்பிட்டீங்களே!

- த.பரதன், திருவாரூர்

விலைவாசி உயர்வு கார்ட்டூன் படு சூப்பர்! பாவம் மக்கள்!

- வே.முருகேசன், சென்னை

ஒரு பக்கத்தில் வெளிவந்த 'மறுபக்கம்' சிறுகதை சும்மா 'நச்'சென்றிருந்தது.

- முகவை முத்துசாமி, தொண்டி

வகை கெட்டு வழிமாறித் தத்தளிக்கும் மனதைத் திருத்தி மாசு நீக்கம் செய்கிறது 'வாரியார் அமுதம்!'

- எஸ்.ஏ.கேசவன், கு.கழுகாசலபுரம்

அம்மாவின் 'அன்பெனும் மழை'யில் தொடர்ந்து நனைந்து வருகிறேன். எளிமையான பாடத் திட்டங்களைக் கொண்ட ஆன்மிகப் பல்கலைக்கழகம் 'அம்மா'. அம்மாவின் பாதங்களுக்கு என் வந்தனம்.

- இரா.முனீஸ்வர சர்மா, கடலூர்

டாஸ்மாக் மதுக் கடைகளை திறந்த அன்றைய அரசுக்குக் குட்டிய குட்டு 'நச்' என இருந்ததோடு, மதுவைக் கட்டுப்படுத்த இன்றைய அரசு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளையும் கூறியது சிறப்பாக இருந்தது. 'தலையங்கம்' நன்று.

- என்.சங்கரதாஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்

நெய்வேலி புத்தகக் கண்காட்சி கட்டுரை படிக்க வெகு அருமை.

- ஜெ.துரைராஜ், சென்னை

'அ.தி.மு.க.வில் இணைந்தோம்' என்கிற வைகோ எங்களுக்கு வடிவேலுவாகவே தெரிகிறார்.

- து.ஆனந்திராஜா, மணப்பாறை

'கண்டிப்பா லவ் மேரேஜ்தான்!' எனக் கூறும் நடிகை த்ரிஷா, 'தில்லான' நடிகை தான்.

- ஆர்.லட்சுமி, மதுரை

கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.



மிரட்டலான ஆரம்பம்...

பட்டுக்கோட்டை பிரபாகர் எழுதும்

'ம்!'

திகில் கலந்த குடும்பத் தொடர்!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 2006ல்



ரூ. 10,000 பரிச

பெறும் முத்திரைக் கதை!


கல்கி
அடுத்த இதழ்...
நீங்கள் ஆவலோடு எதிர்பார்க்கும்
ஆண்டு மலர்!
இன்னும்...
பக்கத்துக்குப் பக்கம்
புத்தம் புது
பகுதிகளின்
அணிவகுப்பு!
டோன்ட் மிஸ் இட்!

சவாலே சமாளி!

நகர்ப்புற வளர்ச்சி

"வேகமாக வளர்ந்து வந்த சென்னை மாநகரின் தேவைகளை நன்கு உணர்ந்து செயல்பட்டது புரட்சித் தலைவியின் அரசுதான்" என்று சொல்கிறார் கடந்த அ.தி.மு.க. அரசில் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் அமைச்சராக இருந்த அனிதா ராதாகிருஷ்ணன்.

"சென்னை நகரில் ஆங்காங்கே வணிக வளாகங்கள், அலுவலகக் கட்டடங்கள் ஆகியவை வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளைக் மீறிக் கட்டப்பட்டிருந்தன. ஆனால் நடவடிக்கை எடுக்கலாம் என்றால், பெரும்பான்மையோர் நீதிமன்றங்கள் சென்று தடை உத்தரவு வாங்கி வைத்திருந்தார்கள். இந்தியாவில் பல மெட்ரோ நகரங்களில் இதுதான் நிலை. அங்கெல்லாம் வரைமுறைப்படுத்துதல் என்ற திட்டம் கொண்டுவரப்பட்டு, கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்ப கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு, பல மாநில அரசாங்கங்கள் கோடிக்கணக்கில் வசூல் செய்தன.

1996-2001ல் ஆண்ட தி.மு.க. ஆட்சி பல குளறுபடிகளைச் செய்ததன் காரணமாக ஏழு கோடி மட்டுமே இந்தத் திட்டப்படி வசூல் ஆனது. நாங்கள் நடைமுறைகளைச் சீரமைத்ததன் மூலம் தமிழக அரசுக்கு இந்தத் திட்டத்தால் 300 கோடி ரூபாய் வருவாய் வந்தது.

சி.எம்.டி.ஏ. எந்தவிதக் கெடுபிடியுமின்றி கட்டட அனுமதி வழங்கியதால் கட்டுமானத் தொழில் பெரிய அளவில் வளர்ந்தது. சிமெண்ட், மணல், செங்கல் விலைகள் சகாயமாக இருந்ததால் கட்டுமானத் தொழிலில் லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை கிடைத்தது. ஆனால் தி.மு.க. ஆட்சிக்கு வந்த இந்த இரண்டு மாதங்களில் கட்டட அனுமதி மிகவும் தாமதமாவதால், கட்டடத் தொழில் பாதிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து இருக்கிறார்கள்" என்று புகார்ப் பத்திரம் வாசித்தார், அனிதா ராதாகிருஷ்ணன்.

இது பற்றி நகர்ப்புற வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் பரிதி இளம் வழுதியிடம் கேட்டால், "கடந்த ஐந்தாண்டுகால ஜெயலலிதா ஆட்சியில் நகர்ப்புற வளர்ச்சிக்கு ஒன்றுமே செய்யப்படவில்லை" என்று நெத்தியடியாக அடித்தார்.

"முதலில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் வெளிப்படையான நிர்வாகம் நடக்க வேண்டும் என்பது முதல்வரின் ஆசை. கட்டட பிளான் அங்கீகாரத்துக்கு மனு போட்டால் அதன் கதி என்ன என்று தெரியாமல் பொதுஜனம் திண்டாடு



"கலைஞரின் மாஸ்டர் பிளான்!"

றார். இனி அந்த நிலை இருக்காது.
ாமதத்தைத் தவிர்க்க, நிர்வாகம்
ின்னணுமயமாகிறது. டச் ஸ்கிரீன் மூலம்
ருவர் தனது மனு எந்த நிலையில் இருக்
றது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.
சென்னை மற்றும் தமிழ்நாடு முழுவதும்
தொடர்பான வளர்ச்சிக் கட்டுப்பாடு
ிதிகளைத் தமிழில் கொண்டு வரச்
சொல்லி முதல்வர் கட்டளையிட்டிருக்
றார். அதற்கான வேலைகள் நடக்கின்
ன. சி.எம்.டி.ஏ.வில் பொதுமக்கள் புகார்
ளைத் தீர்க்கும் பிரிவு துவங்கப்படும்.
சென்னையில் பல அடுக்குமாடி பார்க்கிங்
வளாகங்கள் கட்டப்படுகின்றன. தமிழக



• பரிதி இளம்வழுதி

மெங்கும் இரண்டரை லட்சம் செலவில்
50 பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன.
ஒன்பது பிரதான நகரங்களின் அடிப்படை
வசதிகளைக் கூட்டி, அழகுபடுத்த
இருக்கிறோம். புதிய லே-அவுட்களில்
கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 50
சதமாக இருந்த மான்யத்தை 75 சதமாக
உயர்த்துகிறோம். பொது மக்களுக்கு
இடைஞ்சலாக உள்ள கட்டடங்கள் மீது
கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

வளர்ந்து வரும் சென்னையின் வேகத்
துக்கு ஈடுகொடுக்கும் வகையில் மாஸ்டர்
பிளான் இரண்டைத் தயாரிக்க முதல்வர்
உத்தரவிட்டிருக்கிறார். இதுதவிர, தேர்தல்
அறிக்கையில் சொல்லப்பட்டதுபோல
சென்னை உட்பட முக்கிய நகரங்களைச்
சுற்றி புதிய புறநகர்களை உருவாக்கும் திட்ட
மும் முதல்வர் அவர்களால் தக்க சமயத்
தில் அறிவிக்கப்படும்" என்கிறார் பரிதி.

- கௌசி


படங்கள் : ராஜன்

அமெரிக்க சரித்திரத்தில் 9/11 மாதிரி மும்பை சரித்திரத்தில் 11/7 ஒரு கறுப்பு தினமாகிவிட்டது. மும்பைப் புறநகர் ரயில்களில் ஏழு இடங்களில் வைக்கப்பட்ட வெடிகுண்டுகள் வெடித்ததில் நூற்றுக்கணக்கானவர்கள் பரிதாப மாக உயிரிழந்தனர். படுகாயமடைந்தவர்களும் ஏராளம். மும்பை போலீசின் துப்புதுலக்கும் பணி யிலும் பெரிய அளவில் முன்னேற்றமில்லை. இந்தத் தீவிரவாத செயல் குறித்து, 26 ஆண்டுகள் இந்திய அரசின் உளவு அமைப்பான RAW என்னும் ரிசர்ச் அண்ட் அனலிசிஸ் விங்கில் பணிபுரிந்தவரும், ஆறு ஆண்டுகள் அதன் தலைவராகப் பதவி வகித் தவருமான பி.ராமனிடம் பேசினோம்.



மும்பை குண்டுவெடிப்பு...

"1993ம் ஆண்டு நடந்த மும்பை தொடர் வெடிகுண்டு சம்பவத்தின்போது, இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் போலீசுக்குத் துப்பு கிடைத்து விட்டது. அதற்கு முக்கிய காரணம் அப்போது வைக்கப்பட்ட குண்டுகளில் ஒரு இடத்தில் மட்டும் வெடிகுண்டு வெடிக்கவில்லை. போலீஸ் அதைக் கைப்பற்றியது. எனவே, எந்தமாதிரி வெடிபொருள் பயன்படுத்தப்பட்டது என்பதைச் சுலபமாகக் கண்டுபிடிக்க முடிந்தது. மேலும், அப்போது குண்டு வைப்பதற்கு தீவிர வாதிகள் வாகனங்களைப் பயன்படுத்தினார்கள். அந்த வாகனங்களின் என்ஜின் மற்றும் சேஸிஸ் எண்கள் மூலமும் துப்பு துலக்க முடிந்தது. வெடிகுண்டு சம்பவம் நடந்ததற்கு முந்தைய தினமும், அடுத்த தினமும் ஒரே குடும்பத்தின் உறுப்பினர்கள் இரு குழுக்களாக துபாய்க்குச் சென்றது, விமான நிலைய ஆவணங்களில் பதிவாகியிருந்தது. அவர்களைப் பற்றிப் புலனாய்வு செய்த போது, அவர்களுக்கும் தாவூத் இப்ராகிமுக்கும் தொடர்பு உண்டு என்பது தெரிய வந்தது.



* பி.ராமன்

ஆனால், இந்த முறை தீவிர வாதிகள் வைத்த எல்லா குண்டு களும் வெடித்து விட்டன. அவர்கள் வாகனங்களில் இல்லாமல், புறநகர் ரயில்களில் குண்டுகளை வைத்துள்ளனர். மேலும், குண்டு விபத்தில் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றும் நோக்கத்தில் நடந்த மீட்பு நடவடிக்கைகள் காரணமாக, குண்டு வெடித்த இடங்களில் தடயவியல் சாட்சியங்கள் அழிந்து விட்டன. இதனால் போலீசாருக்குத் தடயங்கள் கிடைப்பது சிக்கலாகிவிட்டது. ஆகவேதான், புலனாய்வில் பெரிய அளவில் முன்னேற்றமில்லை."

இந்தக் குண்டுவெடிப்புச் சதியில் பாகிஸ்தானியத் தீவிரவாத அமைப்புகளுக்குப் பங்கு இருக்குமென்று நினைக்கிறீர்களா?



உளவுத்துறையின் தோல்வியா?

"லஸ்கர் அய் தோய்பா, ஹர்கத் உல் ஜிகாத் அல் இஸ்லாம் போன்ற தீவிரவாத அமைப்புகளுக்கு நிச்சயம் தொடர்பு இருக்கும். அவை, நம் நாட்டு மதரீதியிலான தீவிரவாத அமைப்புகளின் உதவியுடன்தான் இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றன. அல்கொய்தாவின் நடவடிக்கைகள் காரணமாகத் தற்போது ஆஃப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் அமெரிக்காவின் கண்காணிப்பு அதிகமாகிவிட்டது. அதிநவீன கருவிகள் மூலமாக, தீவிரவாத அமைப்புகளின் செயல்பாடுகளை அமெரிக்கா தீவிரமாகக் கண்காணிக்கிறது. அதன் காரணமாக, பாகிஸ்தானிய தீவிரவாத அமைப்புகள், இப்போது பங்களாதேஷுக்கு இடம்பெயர்ந்துவிட்டன. அங்கே இருந்துகொண்டு இந்தியாவில் நாச வேலைகளில் ஈடுபடுகிறார்கள். எனவே, இந்தியாவில் நடக்கும் எந்த ஒரு தீவிரவாதச் செயலிலும், பாகிஸ்தானிய தீவிரவாத அமைப்புகளுக்குப் பங்கு இல்லாமல் இருக்காது."

மும்பைச் சம்பவத்தை மத்திய, மாநில அரசுகளுடைய உளவுத்துறையின் தோல்வி என்று சொல்லலாமா?

"அமெரிக்காவில் 9/11க்குப் பிறகும், இங்கிலாந்தில், லண்டன் குண்டு வெடிப்புக்குப் பிறகும் விழித்துக்கொண்டு, தீவிரவாத நடவடிக்கைகளைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்துச் செயல்படவும் செய்தார்கள். ஆனால், நாம் எதுவானாலும் பத்துப் பதினைந்து நாட்களுக்கு அதுபற்றிப் பேசுவோம்; கவலைப்படுவோம். அதன்பின் அப்படியே மறந்து விடுவோம். மத்திய மற்றும் மாநில அரசுகளின் உளவுத் துறைகள் எப்போதும் அலர்ட்டாக இருக்க வேண்டும். அதில் நாம் தவறிவிட்டோம் என்பதுதான் உண்மை."

தீவிரவாத நடவடிக்கைகள் அதிகரிப்பதற்கு பலவீனமான மத்திய அரசு இருப்பது ஒரு காரணமா?

"பலவீனமான அரசு என்பதைவிட ஒத்த கருத்து இல்லாத போக்கைத்தான் காரணமாகச் சொல்ல வேண்டும். சிமி என்ற முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்கு இந்தத் தாக்குதலில் பங்கு உண்டு என்பது குறித்து விசாரணை நடக்கும்போதே, முலாயம்சிங் யாதவ், சிமிக்கு 'நல்ல பிள்ளை' சான்றிதழ் வழங்குகிறார். அமெரிக்காவில் தீவிரவாதத்தை ஒடுக்க புஷ் என்ன நடவடிக்கை எடுத்தாலும் எதிர்கட்சியினர் ஆதரவளிக்கிறார்கள். இங்கிலாந்திலும் அப்படியே. ஆனால் இங்கேதான் ஆளுக்கு ஒரு குரலில் பேசுகிறார்கள். இந்தப் போக்கு ஆபத்தானது!"

பொடா சட்டத்தை வாபஸ் பெற்றது தவறு என்று கருதுகிறீர்களா?

"தீவிரவாத நடவடிக்கைகள் உலக அளவில் பெருகிவரும் இந்தக் காலகட்டத்தில் பொடா சட்டம் மிகவும் அவசியம்."

- எஸ்.சந்திரமௌலி

இன்னமும் நீறுபூத்த நெருப்பாகத்தான் இருக்கிறது அகில இந்திய மருத்துவ அறிவியல் கழக (எய்ம்ஸ்) இயக்குநர் வேணுகோபாலுக்கும் மத்திய சுகாதார அமைச்சர் அன்புமணிக்கும் இடையிலான பிரச்னை. சரி, இருவருக்கும் மோதல் துவங்கியது எப்படி?

அன்புமணி பதவியேற்றவுடன் எய்ம்ஸ் விருந்தினர் மாளிகையில் பல நாட்கள் தங்கியிருந்தார். டாக்டர்கள் நியமனம், மாற்றல் உத்தரவுகள், மருந்துகள் வாங்குவது போன்ற விவகாரங்களில் மருத்துவமனையின் சுயாட்சி நிர்வாகத்துக்குச் சவால்விடும் வகையில் மத்திய சுகாதார அமைச்சகம் அவ்வப்போது தலையீடு செய்ததாகச் சொல்கிறார்கள் எய்ம்ஸ் நிர்வாகிகள். இதற்கெல்லாம் உச்சகட்டமாக அமைந்தது மே மாதம் மருத்துவமனை டாக்டர்கள் நடத்திய போராட்டம். "மருத்துவம் உட்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் பிற்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படும்" என்று மனிதவள அமைச்சர் அர்ஜுன்சிங் அறிவிக்க, அதை எதிர்த்து எய்ம்ஸ் டாக்டர்களும், மருத்துவக் கல்லூரி மாணவர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

'இந்த வேலை நிறுத்தத்தை ஊக்குவித்தார் இயக்குநர் வேணுகோபால்' என்பது அமைச்சர் அன்புமணியின் குற்றச்சாட்டு. 'சமூகநீதிக்கெதிராக மாணவர்களைத் தூண்டிவிடுகிறார் இயக்குநர்' என்றார்,



அன்புமணி Vs வேணுகோபால்



அன்புமணியின் தந்தையும் பா.ம.க.வின் நிறுவனருமான டாக்டர் ராமதாஸ். இறுதியில் மக்கள் நலனை முன்னிறுத்தியும், சுப்ரீம் கோர்ட் ஆலோசனைக்கு ஏற்பவும் எய்ம்ஸில் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது. "வேலை நிறுத்தம் செய்த நாட்களுக்குச் சம்பளம் கிடையாது" என்று அன்புமணி அறிவிக்க, ஆனால் உச்சநீதிமன்றமோ, 'ஒரு சில நாட்களைத் தவிர மற்ற

நாட்களுக்குச் சம்பளம் கொடுக்கலாம்' என்று சொல்லிவிட்டது.

நீதிமன்றங்களின் தலையீடு காரணமாக அன்புமணியின் அதிரடிகள் முடக்கப்பட்டிருக்கின்றன. "புகையிலைக்கு எதிரான அவரது போராட்டம் காரணமாக அன்புமணிக்கு அமெரிக்காவில் விருது வழங்கியிருக்கிறார்கள். இதுதவிர, பல மாநிலங்களில் அடிமட்ட கிராமங்களையும் சென்றடையும் நோக்கில் பல சுகாதாரத் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறார் அன்புமணி. இப்படிப் பல நல்ல செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்குமவர் எய்ம்ஸில் தலையிட்டு, தாம் கெட்ட பெயர் வாங்குவதோடு நில்லாமல் மத்திய அரசுக்கும் அவப் பெயர் வாங்கிக் கொடுப்பது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது" என்றார் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய காங்கிரஸ் அமைச்சர் ஒருவர் நம்மிடம்.

இந்த சர்ச்சைகள் தொடர்பாக வேணுகோபாலைத் தொடர்புகொள்ள முயன்றோம். ஆனால் "பத்திரிகையாளர்களிடம் எய்ம்ஸ் சார்பாக டாக்டர் ஷக்திகுப்தா என்பவர் மட்டுமே பேசுவார்" என்றார் அவரது உதவியாளர். டாக்டர் வேணுகோபால் மிகவும் நொந்து போய்விட்டதாகவும், அதனால் ராஜினாமா செய்யப்போகிறார் என்றும் செய்திகள் வருகின்றனவே என்றதற்கு, "டாக்டர் வேணுகோபால் ராஜினாமா செய்வார் என்று வரும் வதந்திகளுக்குப் பதில் சொல்ல முடியாது. இப்போது விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது" என்றார் டாக்டர் ஷக்தி குப்தா.

"இந்த சர்ச்சையால் எய்ம்ஸின் புகழுக்குச் சேதம் ஏற்பட்டு விட்டதே!" என்றபோது "இது குடும்ப விவகாரம். விரைவில் எல்லாம் சுமுகமாய் முடியும்" என்று முடித்துக்கொண்டார்.


- ஸ்ரீநி

மாரடைப்பை உண்டாக்கும் மன அழுத்தம்!



• Dr. ஆர்.ரமேஷ்

கால்சென்டரில் வேலை பார்க்கும் வினீத்துக்கு அடிக்கடி கிடைக்கும் அனுபவம் அது. களைத்துப்போய் வீடு திரும்பி மாடிப்படி ஏறும்போதெல்லாம் லேசான நெஞ்சுவலி. ஆரம்பத்தில் காஸ் பிராப்ளம் என்று அலட்சியமாக இருந்துவிட்டார்கள். அரை டஜன் ஈ.ஸி.ஜி ரிப்போர்ட்டுகளும் நார்மலாக இருப்பதாகவே சொல்லிவிட்டன. ஆஞ்சியோஸ் டெஸ்ட்டுதான் விபரீதத்தை விவரமாகச் சொன்னது. இருபத்துநான்கு வயதே நிரம்பிய வினீத்துக்கு இதயத்தில் அடைப்பு இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.



''சின்ன வயசுக்காரங்களுக்கு ஹார்ட் அட்டாக் வராதுன்னு நிறைய பேர் தப்பா நினைச்சுட்டிருக்காங்க. என்னிடம் வந்த கடைசி பத்து பேஷண்ட்ஸ் எல்லோருமே முப்பது வயசுக்கும் குறைவானவங்கதான்'' என்கிறார் இதயநோய் நிபுணர் டாக்டர் ஆர்.ரமேஷ். இவர் பிரபல மருத்துவர் செரியனின் இதயநோய் ஆராய்ச்சிக் கழகத்தின் இணை இயக்குநர்.

காலை எட்டு மணிக்கு ஆரம்பித்து, இரவு எட்டு வரை கம்ப்யூட்டர் முன்னால் உட்கார்ந்து கடுமையாக வேலை பார்க்கும் இளைய தலைமுறைக்கு இதுவோர் அதிர்ச்சியான செய்தி. இந்தியாவில் ஹார்ட் அட்டாக்கினால் பாதிக்கப்பட்டிருக்கும் முப்பது வயதுக்குட்பட்டவர்கள் மட்டும் 4 மில்லியன் பேராம். அதிகமான வேலைப்பளு, மன அழுத்தம், இறுக்கமான சூழல் தவிர சிகரெட் மற்றும் போதைப் பழக்கமும் மாரடைப்பை சின்ன வயதிலேயே சகஜமாக்கியிருக்கிறது. இதற்கு என்னதான் தீர்வென்றால், "இன்றைக்கு கம்ப்யூட்டர் சார்ந்த தொழில்கள் பெருகிவிட்டன, தவிர்க்க முடியாதவையாகி விட்டன. எனவே வந்தபின் துடிப்பதைவிட வரும்முன் தடுப்பதே சாலச் சிறந்தது" என்கிறார் டாக்டர் ரமேஷ்.



"தொடர்ந்து ஒரே இடத்தில் அமர்ந்திருக்காமல் அவ்வப்போது எழுந்து நடக்க வேண்டும். அலுவலக டென்ஷன்களை மனதுக்குள் போட்டுக் குமையாமல் நண்பர்களிடம் பேசிப் பகிர்ந்து கொள்ள வேண்டும். உடற்பயிற்சி ரொம்ப முக்கியம். உடலுழைப்பு குறையும்போது அதுதான் நம் உடம்பைக் காக்கும். தினமும் நேரம் ஒதுக்கி, தவறாது உடற்பயிற்சி செய்ய வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக கொலஸ்ட்ராலைக் குறைக்க வேண்டும்.

நம் உடலில் ரத்தக் குழாய்களில் கொலஸ்ட்ரால் படிவதைத் தடுக்க முடியாது. இதயம் போன்ற சென்சிட்டிவ் ஏரியாவில் இருக்கும்

ரத்தக்குழாய்களில் கொலஸ்ட்ரால் படிந்துவிடுவதுதான் பிரச்னைக்கு அடிப்படை. இப்படிப் படிந்திருக்கும் கொலஸ்ட்ரால் பிளாக், ரத்த ஓட்டத்தைத் தடுக்காத வரையில் ஆபத்தில்லை. ரத்தம் போக முடியாத அளவுக்கு பிளாக் இருப்பதால் வருவதுதான் கடுமையான நெஞ்சுவலி. இது சாதாரண நெஞ்சுவலிதானே என்று அலட்சியப்படுத்துவதால் வரும்




விபரீதங்கள்தான் அதிகம். ஆரம்ப கட்டத்தில் பிளாக் இருந்தால் கொஞ்சமாகக் கரைத்துவிடலாம். முற்றிப்போன பிளாக் உடைந்து, அதிலிருந்து கொழுப்பு நீர் வந்து ரத்தத்துடன் கலந்துவிட்டாலோ அல்லது ரத்தம் அந்த இடத்தில் கெட்டியாகிவிட்டாலோ பிரச்னை நிச்சயம்.

முன்பெல்லாம் ஜுரம் வந்தால் பிளட் டெஸ்ட் எடுப்பதுபோல இப்போது நெஞ்சுவலி வந்தால் உடனே ஈ.ஸி.ஜி எடுப்பதுதான் நல்லது. இதயத்தில் இருக்கும் பிளாக்கை ஈ.ஸி.ஜி டெஸ்ட்டில் கண்டுபிடிக்கவே முடியாது. அதற்குத்தான் ஆஞ்சியோஸ் செய்தாகணும். ஆஞ்சியோஸ் டெஸ்ட்டில் பாஸிட்டிவ் ரிசல்ட் வந்தால் அதற்காக சர்ஜரி செய்தாக வேண்டும் என்கிற அவசியமில்லை. ஆரம்ப கட்டத்திலேயே பிளாக் இருக்கிறதா, இல்லையாங்கிறதைத் தெரிஞ்சுக்கறது நல்லதுதான்!'' என்கிறார் ரமேஷ்.

ஆஞ்சியோஸ் சோதனை இப்போதெல்லாம் படு சிம்பிளாகியிருக்கிறது. ஒரு சின்ன இன்ஜெக்ஷனைக் கையில் போட்டுக்கொண்டு ஆஸ்பிடலைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பிவிடலாம். ஒரு மணி நேரத்தில் இன்ஜெக்ஷன் மூலம் போடப்பட்ட சாயம் உடம்பில் பரவி கதிட்டரில் பிளாக்கைக் காட்டிக் கொடுத்துவிடும். அதற்குப் பின்னர் ஆஞ்சியோபிளாஸ்டி செய்து அடைப்பை நீக்கிவிடலாம்.

''முடிந்தவரை சாப்பாட்டில் ஆயில் ஐட்டங்களைக் குறைத்துக் கொள்வது நல்லது. புகைபிடிப்பதை அடியோடு நிறுத்த வேண்டும். இப்போ ஹார்ட் அட்டாக்குக்கு வயது வித்தியாசம், ஆண், பெண் வித்தியாசமெல்லாம் கிடையாது. அதோடு அட்டாக், காலம் நேரம் பார்த்தெல்லாம் வர்றது கிடையாது. எப்ப வேணும்னாலும் வரும். நாமதான் ஜாக்கிரதையா இருக்கணும்'' என்கிறார் ரமேஷ்.

- ஜெ.ராம்கி





கல்கி



2006 ஜூலை 30
விய ஆடி 14
மலர் : 64
இதழ் : 52


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்.*


சின்ன விஷயங்களும் பெரிய தலைவர்களும்...

"**சி**ன்ன விஷயங்களைப் பெரிதாக்க வேண்டாம்; பெரிய விஷயங்களில் ஆழ்ந்த கவனம் செலுத்துங்கள்" என்று முதல்வர் கருணாநிதி தமது சக அரசியல்வாதிகளை நோக்கிப் பேசியிருக்கிறார். மிக உயர்ந்த அறிவுரை இது. நாட்டில் கல்வியின்மை, வறுமை, வேலை வாய்ப்பின்மை, அடிப்படை வசதிகளின்மை, பயங்கரவாதம், வன்முறை... என பெரிய பெரிய பிரச்னைகள் காத்திருக்க, அவற்றைப் புறக்கணித்துவிட்டு உப்பு பெறாத விஷயங்களை ஊதிப் பெரிதாக்கி, அரசியல் ஆதாயம் தேடுவதென்பது நமது அரசியல் கலாசாரமாகவே மாறிவிட்டது.

துரதிர்ஷ்டவசமாக, அறிவுரை சொல்லும் முதல்வரும் இந்தக் கலாசாரத்தில் சிக்கியிருக்கிறார். தமது அறிவுரையைத் தாமே கடைபிடிப்பதில் அவர் முனைப்புக் காட்டாததால்தான் இன்று சிவாஜி கணேசன் சிலை நிர்மாணம் சர்ச்சையில் சிக்கி, நீதிமன்றத்தில் அல்லாடிக் கொண்டிருக்கிறது.

சென்னையில் நடிகர் திலகத்துக்குச் சிலை வைக்கத் தகுதியான இடங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை விடுத்து, சாலைப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும் ஏற்கெனவே நிறுவியுள்ள காந்தி சிலையின் தோற்றத்தைப் பாதிக்கும் விதமாகவும் சிவாஜி சிலைக்கு இடம் தேர்வாக, இதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு போடப்பட்டிருக்கிறது. 'வழக்கு விவகாரமெல்லாம் எதற்கு, இது சிறிய விஷயம்; சென்னையில் எத்தனையோ மாற்றிடங்கள் உண்டு' என்று தமிழக அரசு உடனடியாக வேறு இடம் பார்த்திருக்கலாம். வழக்கு ரத்தாகியிருக்கும்; சர்ச்சை ஓய்ந்திருக்கும். ஆனால், அதற்குப் பதில் நீதிமன்றத்தில் மோதலுக்கு வழிவகை செய்துள்ளது தமிழக அரசு!





கோயில்களில் பூர்ண கும்ப மரியாதை செய்வது, பரிவட்டம் கட்டுவது போன்றவை கர்ண பரம்பரையாக விளங்கி வரும் சின்னச் சின்ன பழக்க வழக்கங்கள். உபயதாரர் அல்லது கட்டளைதாரர், நன்கொடையாளர் போன்றவர்களுக்குச் செய்யப்படும் இந்தப் பாரம்பரிய மரியாதையை வர்க்க பேதத்தின் அடையாளமாகக் கருதி, அதனைத் தடை செய்தது அரசு. இந்தச் சின்ன விஷயத்தில் அரசு தலையிட்டதால்தான் இதுவும் பெரிய விவகாரமாகி அனைவர் கவனத்தையும் கவர்ந்தது. சில தினங்களில், முதல்வர் பின்வாங்கி, "மடாதிபதிகள், ஆதீனங்களுக்குப் பூர்ணகும்ப விஷயத்தில் விதி விலக்கு" என்றும் அறிவிக்கச் செய்திருக்கிறார். இதுபோன்ற மதம் சார்ந்த, வழிபாடு சார்ந்த விஷயங்களில் அரசாங்கத்தின் தலையீடு அவசியமற்றது என்பதுடன் நேர விரயமும்கூட. ஆனால், இங்கே அரசியல் ஆதாயம் கருதி சின்ன விஷயத்துக்குப் 'பெரிய' மாயத் தோற்றம் பூசப்படுகிறது.

உண்மையிலேயே கவனம் பெற வேண்டிய மிகப்பெரிய விஷயமோ, மிக அற்பமான விஷயம் போல அலட்சியத்துக்கு உள்ளாகி மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்துகிறது. என்.எல்.ஸி. பங்குகள் விற்பனை குறித்த அமைச்சரவைக் கூட்டத்தில் தி.மு.க. அமைச்சர்கள் யாருமே கலந்து கொள்ளவில்லை. இதனை ஒப்புக்கொண்ட டி.ஆர்.பாலு, "கூட்டத்தின் முடிவை ஏற்பது தவிர எங்களுக்கு வேறு வழியில்லை" என்று பேசியுள்ளார். இந்தப் பெரிய விஷயத்தில் தி.மு.க. தலைவரும் அக்கட்சியின் மத்திய அமைச்சர்களும் கவனம் செலுத்தத் தவறியதால் ஏகப்பட்ட கிளர்ச்சி, குழப்பம். இறுதியில் தி.மு.க. தலைவர் மத்திய அரசை அச்சுறுத்த, பிரதமர்தான் அவமானத்தையும் தலைகுனிவையும் சந்திக்க வேண்டி வந்தது.

'சின்ன விஷயங்களைப் பெரிதுபடுத்த வேண்டாம்' என்று முதல்வர் கூறியதன் பின்னணியையே எடுத்துக் கொண்டாலும், சட்டசபையில் ஆளுங்கட்சி முதல்வரும் எதிர்க்கட்சித் தலைவரும் எதிரெதிராக அமர்வது மரபு. அவ்வாறே எதிர்க்கட்சித் தலைவர்களும் ஆளுங்கட்சி அமைச்சர்களும். திடீரென்று இருக்கைகள் இடம் மாற்றப்படுகின்றன. எதிர்க்கட்சியினர் பலர் முதல்வரைப் பார்க்க முடியாது. ஆளுங்கட்சியினர் பலர் எதிர்க்கட்சித் தலைவரைக் காண முடியாது. "இதில் உள் நோக்கம் இல்லை; சின்ன விஷயம். அவைத் தலைவரின் கட்டுப்பாட்டில் உள்ள விஷயம்" என்று முதல்வர் வாதாடுகிறார். முதல்வர் கூறுவதுபோல் சின்ன விஷயமாயின் 'மரபுகளை மீறி இடமாற்றம் செய்வானேன்...? அம்மாற்றத்துக்கு உள் நோக்கம் கற்பிக்கப்பட இடமளிப்பானேன்?' என்ற கேள்வியும் எழத்தானே செய்கிறது! ●



‘நான் சண்டைக்காரனா?’

‘சண்டக்கோழி’ படத்துக்குப் பிறகு விக்ரம், த்ரிஷா நடிக்கும் ‘பீமா’ படத்தில் பிஸியாக இருக்கிறார் லிங்குசாமி. இதற்கிடையே தயாரிப்பாளர் அவதாரமும் எடுத்திருக்கிறார். ‘தீபாவளி’ என்கிற தலைப்பில் ஜெயம் ரவி, பாவனா நடிக்கும் இவருடைய படத்தை இயக்கவிருக்கிறார் எஸ்.எழில். எடுத்தவுடன் லிங்குசாமி நம்மிடம் பீமா பற்றித்தான் பேசினார்.

‘‘எத்தனை ஆக்ஷன் படங்கள் வந்தாலும் இந்த ‘பீமா’வுக்குப் போஷாக்கு அதிகம். மற்ற ஆக்ஷன் படங்களிலிருந்து கண்டிப்பாக வித்தியாசம் தெரியும். படம் வந்த பிறகு பாருங்கள்’’ என்றவர், அடுத்து தன்னைப் பற்றி ஆரம்பித்தார்...

‘‘நாம எப்பவும் லட்சியப் பாதையிலே ஓடிக்கிட்டே இருக்கணும். ஒரு நிமிஷம்கூட களைத்து சோர்வடைந்து நின்னுடக் கூடாது. அப்படித்தான் ஓடிக்கிட்டு இருக்கேன். ஒவ்வொரு நாளும் புதிதாய்ப் பிறந்ததுபோல் நான் இன்னும் கற்றுக்கொள்கிறேன். நான் இன்னும் இயக்குநர் ஆகவில்லை என்ற எண்ணத்தோடே இருப்பேன். என்னோட படம் தியேட்டர்ல நல்லா ஓடுதுன்னாக்கூட அது என்னோட படம் இல்லை என்று நினைத்தே செயல்படுவேன்; செயல்படுகிறேன்.’’

சரி, ‘தீபாவளி’ படம் பற்றிச் சொல்லுங்கள்’ என்றால், “டைட்டிலுக்கும் கதைக்கும் சம்பந்தம் இருக்குமா என்று தெரியாது. ஒரு தீபாவளியின்போது நாம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருப்போமோ, அதுபோல படத்தைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கலாம். ‘துள்ளாத மனமும் துள்ளும்’ படத்துக்குப் பிறகு இயக்

குநர் எழிலுக்கு இந்தப் படம் ஒரு திருப்புமுனையாக இருக்கும்'' என்றார்.

'அஜீத்துக்கும் உங்களுக்கும்' என்று நாம் பழைய கதையை இழுக்க...

''எனக்கும் அஜீத்துக்கும் எந்தப் பிரச்னையும் இல்லை. என்ன... படம் ஓடவில்லையே என்று அஜீத் ரசிகர்கள் பீர் பாட்டிகளை வைத்துக் கொண்டு நெஞ்சை நிமிர்த்திப் பேசியதில்தான் வருத்தம். ஆனால் கண்டிப்பாக ஒரு நல்ல கதையோடு அஜீத்தை வைத்துப் படம் எடுப்பேன்'' என்கிறார் அடக்கமாக.

நாம் விடாமல் 'சண்டக் கோழி படத்தால் உங்களுக்கும் விஷால் தந்தை ஜி.கே.ரெட்டிக்கும் பிரச்னையாமே...' என்றதற்கு,

''நான் ஒன்றும் சண்டக்காரனல்ல. இருவருக்கும் பிரச்னை இருந்தது உண்மைதான். சண்டக் கோழி 200 நாட்களுக்கு மேல் ஓடிய மகிழ்ச்சி வெள்ளத்தில் கோபம், மனஸ்தாபம், வெறுப்பு என்று எல்லா குப்பைகளும் அடித்துக் கொண்டு போய்விட்டன'' என்று சிரித்தார் லிங்குசாமி.

'உங்கள் சக இயக்குநர்களெல்லாம் ஹீரோவாகி விட்டார்கள்... நீங்கள் எப்போது?'

''முதலில் ஹீரோவுக்கு முக அமைப்பு தேவையில்லை. கதை போதும். நான் ஆரம்பகால கட்டத்தில் இயக்குநராக வேண்டும் என்றுதான் சென்னைக்கு வந்தேன். அதே எண்ணம்தான் இப்போதும் உள்ளது. இப்போதுதான் ஆர்.டி. ராஜசேகர், விக்ரம், சத்யன் என்று நல்ல டீம் அமைந்துள்ளது. அதை வைத்து சிறந்த இயக்குநராகும் என் கனவைத்தான் நனைவாக்க வேண்டும். என்னுடைய 13 வருட சினிமா அனுபவத்தில் என்னோடிருந்து முழு ஒத்துழைப்பு கொடுத்து வரும் என் தம்பி சுபாஷ் சந்திரபோசையும் ஒரு சிறப்பான இயக்குநராக்க வேண்டும் என்பதுதான் ஆசை. ஹீரோவாகும் விருப்பம் எனக்கு எப்போதும் இருந்ததில்லை; இப்போதும் இல்லை''

- மனோன்மனோ

- லிங்குசாமி பளீர்



“அஜீத் ரசிகர்கள் நெஞ்சை நிமிர்த்திப் பேசியதில் எனக்கு வருத்தம் உண்டு!”

பாலிடிக்ஸ் பஜார்

காஞ்சி சங்கரமட வாசலையொட்டி கோபுரம் போன்ற அமைப்பு இருக்கிறது. இப்போது வாஸ்துபடி அந்த அமைப்பு நல்லதல்ல என்று சொல்லப்படவே, அதை இடிக்கும் பணியைத் துவக்கியிருக்கிறார்கள்.

சட்டமன்றத் தேர்தலின்போது ஜெவிடம் கூட்டணியில் சேருவதற்காகக் கெஞ்சு கெஞ்சென்று கெஞ்சினார் கார்த்திக். ஆனால் 'ஒரே இடம்தான் கொடுக்க முடியும்' என்று சொல்லி அவரை உதறினார் ஜெ. பின்னர் சட்டமன்றத் தேர்தலில் பல தொகுதிகளில் கார்த்திக் ஆட்கள் அ.தி.மு.க. தோல்விக்குக் காரணமாக இருந்ததால், உள்ளாட்சித் தேர்தலில் அவரை வளைத்துப் போட முடிவெடுத்துவிட்டார் ஜெ. இதற்குக் கார்த்திக் சற்று தயக்கம் காட்டினாலும் சசிகலா தரப்பினர் ஜாதி அபிமானத்தை வெளிக்காட்டி கார்த்திக்கைச் சம்மதிக்க வைத்துவிட்டார்கள் என்கிறார்கள்.

• அம்மா செல்லம்!



இந்த இரண்டு மாத காலத்தில் அமைச்சர்களின் செயல்பாடுகள் குறித்து முதல்வர் அலுவலக அதிகாரிகள் ஒரு ரகசிய அறிக்கை தயாரித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின்படி, ஸ்டாலின், தங்கம் தென்னரசு, பரிதி இளம்வழுதி, சுப.தங்கவேலன், வேலு, பெரிய கருப்பன் ஆகியோர் கறுகறுப்புடன் பளிச்சிடுகிறார்களாம். துரைமுருகன், கோசி.மணி, வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோரின் செயல்பாடுகள் கொஞ்சம் சுணக்கமாக இருப்பதாகச் சொல்கிறது அந்த அறிக்கை. மற்ற அமைச்சர்களின் செயல்பாட்டில் இன்னமும் வேகம் தேவையாம்!

• அந்த அபிமானம்!



• கூட்டணி ஆசை!



ரகசிய அறிக்கையில்

அம்மாவுக்குச் செல்லப் பிள்ளையாகிவிட்ட சைதை துரைசாமி, தன அறக்கட்டளை சார்பில் இலவச திருமண மண்டபத்தை அம்மா கையால் திறந் வைக்க, 'முறைப்படி திருமண மண்டபத்துக்கான அனுமதி பெறாமல் கட்டட கட்டப்பட்டுள்ளது' என்று அறிக்கை விட்டார் துணை மேயர் கராத்தே தியாராஜன். 'எல்லாம் முறைப்படித்தான் நடந்தது' என்றார் சைதை துரைசாமி. ஆனா கராத்தே அவசரப்பட்டுவிட்டார்' என்கிறது அதிகாரிகள் வட்டாரம். தன் தரப் நியாயங்களை வெளியிட்டால் அதிகாரிகள் சங்கடப்பட்டுப் போவார்கள் என்

சைதையாரும் அடக்கி வாசிக்கிறாராம். இதற்கிடையில் கல்யாண மண்டபம் இலவசம் என்பதால், மக்கள் புக் செயய மொய்க்கிறார்கள். கட்சிப் பாகுபாடு இல்லாமல் யார் முதலில் வருகிறார்களோ அவர்களுக்குக் கொடுத்து வருகிறார்களாம்

- சுறுசுறுப்புத் திலகம்!

உள்ளாட்சித் தேர்தலில் எப்படியும் தி.மு.க. வோடு கூட்டணி சேர்வது என்று முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் டாக்டர் கிருஷ்ண

அமைச்சர்கள்!



சாமி. ஆனால் 'அவரை நமது கூட்டணியில் சேர்க்கக் கூடாது. சேர்த்தால் நமக்குத்தான் பாதிப்பு' என்று கலைஞரிடம் மல்லுக் கட்டுகிறார்கள், தென் மாவட்ட தி.மு.க. பிரமுகர்கள்.

- சஞ்சயன்

படம் : ஸ்ரீஹரி

தமிழ் சினிமாவில் கடந்த சில மாதங்களாகப் பெரும்பாலும் இருவித கதையம்சமுள்ள படங்களே வெளிவருகின்றன. ஒன்று ரௌடிகளுக்கு பட்டாபிஷேகம் சூட்டும் படங்கள். மற்றொன்று - முறைகேடான உறவுகளைப் படம் முழுக்கக் காண்பித்து, கடைசி ரீலை மட்டும் அட்வைஸுக்காக ஒதுக்குவது. கலாபக் காதலன், திருட்டுப் பயலே வரிசையில் முறைகேடான உறவைத் தாங்கிப் பிடிக்கும் இன்னொரு படம் - உயிர்.




கோடு தாண்டும்

ஒன்றன்பின் ஒன்றாக இப்படியே படங்கள் வந்தால் தைரியமாகக் குடும்பத்துடன் தமிழ்ப் படத்துக்கு எப்படிச் செல்வது? ஏன் இப்படியாகி விட்டது தமிழ் சினிமா? அபாயக் கட்டத்தின் ஆரம்பமா இது? கேள்விகளோடு பலதரப்பினரையும் சந்தித்தோம்.

ரேவதி எஸ்.வர்மா *(இயக்குநர்):*

"இன்றைக்கு சினிமாவில் நல்ல படம் எடுத்து நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பதற்குப் பதிலாக நன்றாகக் காசு சம்பாதித்தால் போதும் என்கிற மனப்பான்மை தோன்றிவிட்டது. ஜெயிப்பதற்கு யோசிக்கும்போது இயக்குநர்களுக்கு இதுமாதிரி முறைகேடான உறவுகளைப் பற்றின ஒரு கதையை எடுத்துப் பரபரப்பையும் பேரையும் சம்பாதிப்பது சுலபமாகிவிடுகிறது. மலையாளத்தில் 'லைப் ஈஸ் பியூட்டிஃபுல்' என்பது பாசில் படம். இதுமாதிரியொரு கதையைக் குடும்பத்தோடு அமர்ந்து பார்ப்பதுபோல அவர் படம் எடுத்தார். தம்மை விரும்பும் மைத்துனியை 'நீ என் தங்கைபோல' என்று திருத்துவார் கதாநாயகன் மோகன் லால். ஆனால் தமிழ்ப் படங்கள் இது போல ஒரு நல்ல செய்தியைச் சரிவர போதிப்பதில்லை. தமிழ்நாட்டின் கலாசாரம் ஒன்றும் மும்பைபோல முறைகேடான உறவுகளால் நசுக்கப்படவில்லை. இதனால் சமூகத்தில் நடப்பதைத்தான் காண்பிக்கிறோம் என்று





• சாமி

யாரும் மார் தட்டிவிட முடியாது. அப்படியே நடந்தாலும் - சமுதாயத்தில் மற்ற நல்ல விஷயங்கள் நடப்பதில்லையா? அதைப் படமாக்க வேண்டாம் என யாராவது தடுத்தார்களா?"

கோலிவுட்!

தமிழருவி மணியன் *(தமிழக அரசின் திட்டக்குழு உறுப்பினர்):*

"இன்று சினிமா உலகில் யாரும் கலைச்சேவை செய்ய வரவில்லை என்பது தெளிவு. அப்படியானால் சினிமா அவர்களுக்கு ஒரு தொழிலா என்ற கேள்வி எழுகிறது. சினிமா அவர்களுக்கு ஒரு வியாபாரமாகவே இருந்து தொலையட்டும்; தவறில்லை. நோய் தீர்க்கும் மருந்து விற்பதும், பசி நீக்கும் உணவு தருவதும் வியாபாரம் தான். மனிதர்களை மயக்கத்தில் ஆழ்த்தி, அவர்கள் வாழ்வைச் சீரழிக்கும் மது விற்பனையும் வியாபாரம்தான். இன்று நம தமிழ் சினிமா போதை தரும் லாகிரி வஸ்து வியாபாரமாக, ரகசிய ராத்திரி லேகிய விற்பனைக் கூடமாக மாறி விட்டது. விரசம் ததும்பும் வசனங்கள், காமம் கொப்பளிக்கும் பாடல்கள், மிருக உணர்வைத் தூண்டும் வன்முறைக் காட்சிகள், நெறி தவறிய பாலியல் உறவுகளைப் பச்சையாக வெளிப்படுத்தும் கதைகள் ஆகியவற்றின் கலவையாகி விட்டது இன்றைய சினிமா.

'மனோன்மணி' படத்தில் அன்று பியூசின்னப்பா புலித்தோல் உள்ளாடையும் முண்டா பனியனும் அணிந்து சண்டை போடும் காட்சி குடும்பப் பெண்களைக் கூச வைத்ததாக கல்கி கடுமையாக விமர்சனம் செய்தார். 'வனமோகினி'யில் சிங்கள நடிகை தவமணிதேவி அரை நிர்வாணமாக நடித்து 1940களில் ஆபாசக் காட்சிகளுக்கு அரங்கேற்றம் செய்தார். அன்று தமிழ் சினிமாவைப் பற்றிய காமநோய், கால நடையில் தமிழ்க் கலாசாரத்தை முற்றிலும் சீரழிக்கும் பெருநோயாகப் பற்றிப் படர்ந்துவிட்டது. 'கலாபக் காதல்'லிலிருந்து 'உயிர்' வரை எல்லாமே பண்பாட்டுச் சீரழிவுக்குப் பாதை போடும் படங்கள்.




• தமிழருவி மணியன்

திரைப்பட தணிக்கைக் குழுவில் இருப்பவர்கள் தமிழர்கள் என்றுதான் நம்புகிறேன். அவர்கள் அறிந்து வைத்திருக்கும் தமிழ்ப் பண்பாடு எது என்னும் கேள்வி இப்போது எழுகிறது. ஒன்று, அவர்கள் சீரழிவை உருவாக்கும் சினிமாப் படங்களுக்கு எதிராகக் கையில் கத்திரியை எடுக்க வேண்டும். அல்லது சமூகத்தின் ஆரோக்கியம் காக்க விரும்பும் தமிழர்கள் அவர்களுக்கு எதிராகப் போர்க்கொடியைத் தூக்க வேண்டும்."

பவர்கள், ஏன் ரௌடியிஸத்தைத் தாங்கி வரும் படங்களுக்குத் தங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவிப்பதில்லை?"

சாமி *('உயிர்' இயக்குநர்):*

"காதலர்கள் தற்கொலை செய்ய முயலக்கூடாது என்கிற கருத்தை யொட்டியே கதையை முதலில் அமைத்



● பாபு ராமசாமி

"பெண் உறுப்பினர்களும் படம் பார்த்துத்தான் சம்மதம் தரப்பட்டது."

பாபு ராமசாமி *(தணிக்கைக் குழு தலைமை அதிகாரி):*

"புகழ்பெற்ற பல க்ளாசிக் படங்கள் முறையற்ற பாலியல் சம்பந்தமான கதைக்கருவைக் கொண்டவைதான். இதுமாதிரியான படங்களை எப்படிக் கையாள்கிறார்கள் என்றுதான் பார்க்க வேண்டும். கலாபக் காதலன், உயிர் போன்ற படங்களெல்லாம் பெண்ணின் உணர்வை மிக அற்புதமாகக் கையாண்ட படங்கள். நல்ல ஆன்மா மீது ஒரு பெண்ணுக்கு ஏற்படும் உணர்ச்சிகளைத் தான் கதையாக்கியுள்ளனர். கொஞ்சம் தவறினாலும் விரசம் ஆகியிருக்கக் கூடியவை. இப் படங்களில் பாத்திரம் ஏற்ற நடிகர்களுடைய உடல்மொழி கலையம்சத்துடன் இருந்தது. படத்தில் வரும் கதைகளும் கதாபாத்திரங்களும் சமூகத்தில் நாம் காண்பதுதானே! நாங்கள் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட விதிமுறைகள்படிதான் முடிவு எடுக்க முடியும். தனிப்பட்ட நலன்களை இங்கே நுழைக்க முடியாது. ஐந்து உறுப்பினர்கள் படம் பார்த்து முழு சம்மதம் ஏற்பட்ட பின்புதான் படத்துக்குச் சான்றிதழ் வழங்குவோம். உயிர், கலாபக் காதலன் படங்களை இரண்டு பெண் உறுப்பினர்களும் பார்த்துத்தான் சம்மதம் கொடுக்கப்பட்டது. இந்தப் படங்களுக்குக் கண்டனம் தெரிப்தேன். ஆனால் இந்தக் கதைக்காக மட்டும் எதற்காக ரசிகர்கள் திரையரங்குக்கு வரவேண்டும் என்று கேள்வி எழுந்தது. அந்தச் சமயம் பார்த்து எனக்குத் தெரிந்தவர் ஒருவர் அண்ணியுடனான தகாத உறவால் தற்கொலை செய்து கொண்டார். உடனே கதையில் இந்தச் சம்பவத்தை நுழைத்தேன். அதுதான் இன்று தமிழ்நாடு முழுக்கப் பரபரப்பாகப் பேசப்படுகிறது. இந்தக் கதையை நான்கு வருடங்களாகத் தோளில் தூக்கிச் சுமந்தேன். கே.பாலசந்தர், தாணு போன்றவர்கள் தயாரிக்க ரெடியாக இருந்தும் எந்த இளம் நடிகரும் நடிக்கச் சம்மதிக்கவில்லை. பிறகுதான் ஸ்ரீகாந்த் கதைக்கு உயிர் கொடுத்தார். படம் பார்க்கும் ஒரு பிரிவினர் என்னைத் திட்டத்தான் செய்கின்றனர். விளம்பரங்களும் தவறாகப் போய்விட்டன. பெண்கள் கூட்டமும் மிகக் கம்மி. பி, சி சென்டர்களில் சரியாகப் போகவில்லை. பரபரப்புக்காக இப்படியொரு படம் பண்ணிவிட்டேன். எனக்கும் நல்ல படங்கள் பண்ண ஆசைதான். இந்தப் படத்துக்கான பாவமன்னிப்பாக எனது அடுத்தடுத்த படங்கள் இருக்கும்."

- ச.ந.கண்ணன்

வேதாளபுரி நூலகம்!

"அப்புறம், என்ன புக் படிச்சே?" என்று திடீரென்று பேச ஆரம்பித்தது வேதாளம்.

"மொதல்ல நீ சொல்லு" என்றான் விக்கிரமாதித்தன்.

"கவிஞர் முத்துலிங்கத்தோட 'காற்றில் விதைத்த கருத்து'ங்கிற கட்டுரைத் தொகுதி படிச்சேன். அவரோட அனுபவங்கள்லருந்து மலர்ந்த படைப்பு. நல்ல கனமான பத்துக் கட்டுரைங்க. தமிழ் இசைல ஆரம்பிச்சு, இலங்கை ஈழம் வரைக்கும் எல்லா சப்ஜெக்ட்டையும் தொட்டிருக்கார். வாசிக்க சுவையாயிருக்கு. எம்.ஜி.ஆரைப் பத்தி ஒரு சம்பவம் சொல்லியிருக்கார். 'மீனவ நண்பன்' படத்துல முத்துலிங்கம் பாட்டு எழுதல. எம்.ஜி.ஆர். இவரைப் பயன்படுத்தச் சொல்லியும் பட யூனிட் செய்யல. இது எம்.ஜி.ஆருக்குத் தெரிய வந்ததும் படப்பிடிப்பையே நிறுத்திட்டாரு. முத்துலிங்கத்துக்கு வாய்ப்பு கொடுத்த பிறகுதான் மறுபடி எல்லாமே தொடங்கியிருக்கு. தன்னை நம்பினவங்கள எம்.ஜி.ஆர். என்னைக்குமே கைவிட்டதில்லைங்கறதுக்கு உதாரணமா முத்துலிங்கம் இந்தச் சம்பவத்தைச் சொல்லியிருக்காரு."





"சுவாரஸ்யமா இருக்கே. வேறென்ன படிச்ச?"

"நம்ம 'லாலு' பத்தின பயோகிராஃபி. இந்த புக்கைப் படிச்சா லாலுவைப் பத்தின நம்ம அபிப்பிராயத்தை மாத்திக்க வேண்டியிருக்கும். கிட்டத்தட்ட சர்தார்ஜி ஜோக்ஸ் மாதிரி லாலு ஜோக்ஸ் நிறைய பரவியிருக்கு. ஆனா உண்மையிலே லாலு ரொம்பப் போராடித்தான் அரசியலுக்கு வந்திருக்காரு. பிற்படுத்தப்பட்ட ஜாதியில பொறந்ததால சின்ன வயசுல ஏகப்பட்ட அவமானங்களை, அவமரியாதைகளை லாலு சந்திச்சிருக்காரு. லாலுவோட கண்ணு முன்னாடியே அவரோட அப்பாவை அவரோட ஜாதி பேரைச் சொல்லி எல்லாரும் திட்டும்போது புழு மாதிரி துடிச்சுப் போயிருக்காரு"

"அடப்பாவமே!"

"உண்மையிலேயே பாவம்தான். அவ்வளவா நமக்குத் தெரியாத லாலுவோட இன்னொரு முகத்தை இந்த புக் படிச்சா தெரிஞ்சுக்கலாம்."



காற்றில் விதைத்த கருத்து, கவிஞர் முத்துலிங்கம், குமரன் பதிப்பகம், 3, முத்து கிருஷ்ணன் தெரு, தி.நகர், சென்னை - 17, விலை ரூ 60.

லாலு, ஆர். முத்துக்குமார், கிழக்கு பதிப்பகம், 33/15, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18, விலை ரூ50.

சிவப்புக் கோடு!

“டீச்சரம்மா...” - கடைசி தோசைக்காக மாவை வழித்து, பாதி கையிலும் பாதி தோசைக் கல்லிலுமாக இருந்த நிலையில் சக்கம்மா டீச்சர் வெளியே எட்டிப் பார்த்தாள்.

ராமண்ணா கையில் ஒரு புத்தகத்தோடு நின்றார்.

“வாங்க... வாங்க... என்ன விஷயம்?”

தோசை வேறு கருகி, அதன் அவசரத்தை காட்டுகிறது.

“வந்து... வந்து... என்னோட கதை இந்தப் பத்திரிகையில வந்துருக்கு! படிச்சுப் பார்த்துட்டு, எப்படி இருக்குன்னு சொல்லுங்க டீச்சர். நீங்க ஒரு தமிழ்ப் பண்டிட். ஏதாவது நிறைகுறை இருந்துச்சுன்னா சொல்லுங்க. வளர்ந்து வர்ற எனக்கு அது உபயோகமா இருக்கும்...” பவ்யமாகக் கேட்டார் ராமண்ணா.

சக்கம்மா டீச்சருக்கு படிக்கட்டில் வௌவாலாய் மனிதர்கள் தொங்கிக் கொண்டு வரும் பேருந்தும், கண்ணாடியைத் தூக்கி விட்டுக்கொண்டு வாசலையும் வாட்சையும் பார்க்கும் ஹெட்மாஸ்டரும் கண்முன் நின்றார்கள்.

‘வேளையத்த வேளையில இவரு வேற...!’

மனசுக்குள் பேசிக்கொண்டே, “அப்படியா! ரொம்ப சந்தோஷம்.... படிச்சுட்டு சாயந்தரம் சொல்றேன்.” - அவசரமும் கவலையும் துரத்த புத்தகத்தை வாங்கிக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

இருந்த வேலைப்பளுவில் ராமண்ணாவும் புத்தகமும் காணாமல் போனார்கள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. தலை நிறைய எண்ணெய் தடவி, ஊற வைத்திருந்த துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தபோது, புன்னகையோடு மறுபடியும் ராமண்ணா.

“படிச்சேன்... ரொம்ப நல்லாயிருக்குதுங்க... தொடர்ந்து எழுதுங்க...” அப்பட்டமான பொய்யை அவிழ்த்துவிட்டாள்.

அதன்பின் அவசரமாய் மார்க்கெட்டில் காய்கறி வாங்கிக்கொண்டிருக்கும்போது, மாலையில் களைப்புடன் வீடு திரும்பும்போது, சீரியலைக் கண்ணீர் ததும்பப் பார்த்துக்கொண்டிருக்கும்போது அசட்டுச் சிரிப்புடன் கையில் பத்திரிகையோடு ராமண்ணா வருவது வழக்கமாகிப் போக, படிக்காமல் புத்தகத்தைக் கொடுத்து ‘ரொம்ப நல்லாயிருக்கு’ என்று பொய் சொல்வது சக்கம்மாவுக்கும் பழக்கமாகிப் போனது.

நாளடைவில் ராமண்ணாவின் வருகையும் அடியோடு நின்றுபோக, வராமைக்கான காரணம் தெரியாமலே சக்கம்மா டீச்சரும் ரிடையர்டு ஆகிவிட்டாள்.

அன்று பலசரக்குப் பொட்டலங்களைப் பிரித்துப் போட்டுக் கொண்டிருந்த சக்கம்மா டீச்சர், தற்செயலாகப் பத்திரிகையொன்றில் சிரித்துக் கொண்டிருந்த ராமண்ணாவைப் பார்த்துத் திகைத்துப் போனாள். பிரபல பத்திரிகையில் அவரது படைப்பு முதற்பரிசு பெற்று, படத்துடன் சிறுகதை வெளியாகியிருந்தது.

ராமண்ணாவுக்குள் இத்தனை பெரிய இலக்கிய ஊற்றா? அதன்பின் ராமண்ணாவின் படைப்புகள் எதில் வந்தாலும் விழுந்து விழுந்து படித்தாள் சக்கம்மா டீச்சர். மறக்காமல் பாராட்டுக் கடிதமும் எழுதினாள். இருபது கடிதங்கள் எழுதியும் ‘நன்றி’ என ஒரு வார்த்தைகூட ராமண்ணாவிடம்

இருந்து வரவில்லை.

நேராக அவரது வீட்டுக்கே சென்று பேசிப் பார்த்து விடுவது என்ற முடிவோடு கிளம்பினாள்.

இவள் சென்றபோது பட்டு ஜிப்பா, பருத்திப்பூ வேஷ்டி என முழுசும் ஓர் இலக்கியவாதியாகவே சோஃபாவில் உட்கார்ந்திருந்தார் ராமண்ணா.

"யாரது.., அட... சக்கம்மா டீச்சர்... வாங்க, நல்லாயிருக்கீங்களா...?"

"அதெல்லாம் கிடக்கட்டும்... ஆனாலும் உங்களுக்கு இத்தனை தலைக்கனம் ஆகாது. உங்களோட கதையெல்லாம் படிச்சுட்டு இருபதுக்கு மேல லெட்டர்ஸ் பாராட்டி, விமர்சித்து எழுதினேன். பதிலுக்கு ஒரு கார்டுகூட எழுதலயே நீங்க... ஏன் அந்தளவுக்கு ஆகாதவளா போயிட்டனா நான்..." - சக்கம்மா டீச்சர் ஆதங்கத்தோடு கேட்க...

"டீச்சர், நீங்க வரணும்னுதான் நான் பதில் போடல. ரொம்ப நாளா மனசுலயே கெடந்த ஒரு விஷயத்த உங்கிட்ட கொட்டியே ஆகணும். அதெப்படி டீச்சர் நான் எழுதின ஒரு கதையைக் கூட படிக்காமயே அது நல்லாயிருந்துச்சுன்னு சொன்னீங்க...? எவ்ளோ நம்பிக்கையோட உங்க பதிலுக்குக் காத்திருப்பேன் தெரியுமா? 'படிச்சேன், நல்லாயிருக்கு'ங்கிற உங்க பொய் வார்த்தைய மெய்யா நினைச்சு வானத்துல பறப்பேன். பள்ளிக்கூடத்துல படிக்கிற பசங்க அடிச்சுப் புடிச்சு குண்டு குண்டா எழுதிக் கொடுக்கிற கட்டுரையிலேயே அஞ்சாறு தப்பு கண்டுபிடிச்சு சிவப்புக் கோடு போடுற நீங்க, என் கதையில தப்பு கண்டுபிடிக்காதது எனக்குத் திடீர்னு சந்தேகத்தை ஏற்படுத்துச்சு. கடைசியா நான் உங்ககிட்டே கொடுத்த பத்திரிகையில என்னோட கதையே வரல. ஆனா நீங்க வழக்கம் போல நல்லாயிருந்துச்சுன்னு சொன்னப்பதான் இடிஞ்சு போனேன். அப்புறம் தான் என்னைத் திருத்திக்கிட்டேன். பசியோட இருக்கிறவனுக்கு சோறு கொடுத்தா சாப்பிடுவான். பசியே தெரியாதவனுக்கு அமிர்தம் கொடுத்தாலும் தலையைச் சுத்தி தூரத்துல வீசிடுவான்னு புரிஞ்சுக்கிட்டேன். என்னோட கதை இப்ப உங்களையும் அடைஞ்சுருக்குன்னா உங்களுக்குக்கூட இலக்கியப் பசி வந்துருக்குன்னுதான் அர்த்தம்" என்று ராமண்ணா பேசிக்கொண்டே போக, சக்கம்மா டீச்சர் சிலையாகி நின்றாள்.



செ. செண்பகக்கண்ணு



'இங்கே போணியாகுமா?' என்ற தயக்கத்துடன் மெக்டொனால்ட் இந்தியாவில் கால்பதித்தது. இத்தனைக்கும் ஏற்கெனவே 110க்கும் அதிகமான நாடுகளில் கால்பதித்த நிறுவனம் அது. இந்தத் தயக்கம் பத்து வருடங்களுக்கு முன். இப்போது இந்தியர்களைத் தன் பக்கம் இழுத்துவிட முடியும் என்று நம்பி 400 கோடி ரூபாயை நம் நாட்டில் முதலீடு செய்யவிருக்கிறது மெக்டொனால்ட். தமிழகத்திலும் சுமார் நூறு உணவகங்களைத் திறக்கப் போகிறதாம்!

உலகெங்கிலுமுள்ள மெக்டொனால்ட் உணவகங்களில் தினமும் ஐந்து கோடி வாடிக்கையாளர்கள் பசியாறிச் செல்கிறார்கள். அரோமா கஃபே, போஸ்டன் மார்க்கெட், சிபோடில் மெக்ஸிகன் க்ரில் போன்ற உணவகங்களுடன் இணைந்தும் செயல்படுகிறது.

ராக் அண்ட் ரோல் மட்டுமே இசைக்கப்படும் உணவகம், விளையாட்டுத் திடல்களுடன் கூடிய உணவகம் என்று பலவிதங்களில் வாடிக்கையாளர்களை மயக்குவது மெக்டொனால்டின் வழக்கம்.

டிக் மெக் டொனால்ட், மாக் மெக்டொனால்ட் ஆகிய இரு சகோதரர்களால் கலிஃபோர்னியாவில் தொடங்கப்பட்ட உணவகம்தான் மெக் டொனால்ட். அவர்களது ஹாம்பர்கர் மிக மிக அதிகமாக விற்றுத் தீர்ந்தது. எனவே 1953-ல் அவர்கள் 'ஸ்பீடி சர்வீஸ்' என்ற ஒன்றைத் தொடங்கினர். வேக உணவகங்களைச் சங்கிலித் தொடராய்த் தொடங்கினர். குறைவான விலை காரணமாக அவை விற்றுத் தீர்ந்தன. 1953ல் அவர்களது முதல் ரெஸ்டாரண்ட் தொடங்கப்பட்டது. அதன் வெற்றியையும், வருங்காலத்தில் அதன் பங்கு எந்த அளவுக்கு அதிகமாகலாம் என்பதையும் கணித்த ரே க்ராக் என்ற தொழிலதிபர், பெருந்த தொகை கொடுத்து அதன் ஃப்ரான்சைஸிங் உரிமையையும் பெற்றார். நாளடைவில் சகோதரர்களிடமிருந்து தானே அந்த நிறுவனத்தை வாங்கிக் கொண்டு உலகம் முழுவதும் வியாபாரத்தைப் பரப்பத் தொடங்கினார்.

அதிக வாடிக்கையாளர்களை மட்டுமல்ல, அதிக பிரச்னைகளையும் மெக்டொனால்ட் நிறுவனம் சந்தித்துக் கொண்டு வருகிறது. உலகமயமாக்கலை எதிர்ப்பவர்கள் அனைவரும் மெக்டொனால்டையும் எதிர்க்கின்றனர். பெரும்பாலும் அதன் வெளிநாட்டு ஃப்ரான்சைஸ் உரிமை கொண்டவர்கள் உள்ளூர்க்காரர்களாகவே இருந்தாலும் மெக்டொனால்ட் என்பது ஓர் அமெரிக்க முதலாளித்துவச் சின்னமாகவே பார்க்கப்படுகிறது.

இனி கவனம்

தவிர, மெக்டொனால்ட் உணவுகளைத் தொடர்ந்து உண்டால் உடல் பெருக்கும் என்கிற பரவலான கருத்தும் இருக்கிறது. 2004-ல் மார்கன் ஸ்பர்லாக் என்பவர் ஒரு செய்திப் படத்தை எடுத்தார். 'சூப்பர் சைஸ் மி' என்ற அந்தப் படத்தில் தொடர்ந்து அவர் மெக்டொனால்ட் உணவுப் பொருள்களை மட்டுமே சுமார் ஒரு மாதத்திற்குச் சாப்பிட, அதைத் தொடர்ந்து மயக்க நிலை, உடலுறவில் ஆர்வமின்மை, அதிக எடை ஆகியவற்றில் முடிந்ததாகக் குற்றம் சாட்டினார். சூடான் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது இப்படம். இதன் விளைவாக மெக்டொனால்ட் நிறுவனம் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்த உணவுகளைத் தயாரிக்கத் தொடங்கியதுடன், அவற்றின் மேலுறையில் அந்த உணவுப் பொருளிலுள்ள சத்துக்களின் விவரங்களையும் குறிக்கத் தொடங்கியது.

தன் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் தொடங்குவார்கள் போலிருந்தால் உடனே அந்தக் கிளையை மூடிவிடுவார்கள்; சுற்றுப்புறச் சூழல் குறித்துக் கவலைப்படாதவர்கள்; குழந்தைகளைக் குறிவைத்து பொறுப்பற்ற விளம்பரங்களை வெளியிடுபவர்கள் என்றெல்லாம் மெக்டொனால்டுக்கெதிரான எதிர்மறை விமர்சனங்கள் உண்டு.

சுத்தமான உணவகங்கள், சுத்தமான சமையலகங்கள் என்ற நற்பெரும் மெக்டொனால்டுக்கு உண்டு. தான் போகுமிடமெல்லாம் அந்தந்த ஊரின் மரபினை உடைக்கும் சிறப்பும் மெக் டொனால்டுக்கு உண்டு. நின்றுகொண்டும் நடந்துகொண்டும் சாப்பிடுவது ஜப்பானில் அவமரியாதையாகக் கருதப்பட்டது. இன்று மெக்டொனால்ட் அதை சகஜமாக்கிவிட்டது.

எனினும் நடுவே தனது ஃப்ரெஞ்ச் ஃப்ரைஸ், மாட்டிறைச்சியின் திரவத்தில் பொறிக்கப்பட்டதாக அது அறிவித்தபோது, அது முஸ்லிம், யூத மற்றும் இந்து மதத்தினரை - குறிப்பாக, சைவ உணவுக்காரர்களைப் பாதித்தது.


தன் உணவகம் உள்ள நாட்டில் 'மாக்' அல்லது 'மெக்' என்ற பெயரில் எந்தப் பெரிய உணவகம் இருந்தாலும் அதன்மீது (காப்புரிமை) வழக்கு தொடுப்பதைத் தவறாமல் செய்து வருகிறது மெக்டொனால்ட்.

சில வருடங்களுக்கு முன் இங்கு தன் வியாபாரத்தை அது தொடங்கியபோது, முதலில் கிழக்கிந்தியாவில் கால்பதித்தது. பிறகு நகரங்களில் (மாநகரங்களில் அல்ல). அமிர்தஸரஸ், பாடியாலா, நொய்டா போன்றவை அவற்றில் சில. தென்னிந்தியாவில் பெங்களூரிலும் ஹைதராபாத்திலும் மெக்டொனால்ட் உணவகங்கள் தொடங்கப்பட்டன. விரைவில் தமிழகத்திலும் ஒரு நூறு மெக்டொனால்ட் உணவகங்களைப் பார்க்க முடியும்.

ஒவ்வொரு வருடமும் மெக் டொனால்ட் உணவகங்களின் இந்திய விற்பனை 40 சதவிகிதம் என்கிற கணக்கில் அதிகரித்துக்கொண்டு போகிறதாம். ஏன் அதிகமாகாது? இந்திய நடுத்தர மக்கள் வாரம் இருமுறையாவது குடும்பத்தோடு ஹோட்டலுக்குச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நண்பர்களோடு செல்வது தனி. மென்பொருள் நிறுவனங்கள், கால்சென்டர்கள் ஆகியவற்றின் காரணமாகப் பணப்புழக்கமும் அதிகமாகிறது. இதையெல்லாம் புரிந்துகொண்டுதான் இந்தியர்களின் வயிற்றுப் பசியைத் தீர்த்து, தங்களது பணப் பசியையும் தீர்த்துக்கொள்ள மெக்டொனால்ட் களத்தில் குதித்திருக்கிறது.

- ஜி.எஸ்.எஸ்

இந்தியாவில்!



போயஸ் தோட்டத்து

ஜெயலலிதாவால் அதிரடியாக தென்சென்னை மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டிருப்பவர் வி.பி.கலைராஜன். தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினரான இவர், முதல் சட்டமன்ற கூட்டத்திலேயே சற்று 'கலகலப்பை' ஏற்படுத்தியவர். கட்சியில் மற்றொரு கோஷ்டி கொஞ்சம் பலமாகவே இவருக்கு சவால் விட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் போயஸ் தோட்டத்துப் புதிய செல்லப் பிள்ளை இவர் என்கிறார்கள் கட்சிப் பிரமுகர்கள் சிலர். கலைராஜன் என்ன சொல்கிறார்?

"தஞ்சை ஒரத்தநாடுதான் என் ஊர். தமிழ் மற்றும் திராவிட இயக்க உணர்வுகளின் தொட்டில் என்று தஞ்சை மண்ணைச் சொல்லலாம். 1987-ல் புரட்சித் தலைவர் மறைவுக்குப் பிறகு உறுதியான மற்றும் உன்னதமான புரட்சித் தலைவியின் பின்னால் அணி திரண்ட லட்சக்கணக்கான தொண்டர்களில் நானும் ஒருவன். சென்னை சட்டக் கல்லூரியில் படிக்கும்போது பத்து மாணவர்களுடன் தீபச்சுடர் ஏந்தி வேலூர் வரை தொடர் ஓட்டம் சென்று புரட்சித் தலைவியின் கையில் ஒப்படைத்தேன். அம்மா அவர்கள் என்னை மாணவர் அணி இணைச் செயலாளராகவும் பின்னர் செயலாளராகவும் நியமித்தார்கள். அவர் மாணவர் சமுதாயத்துக்கு செய்த நல்ல பணிகள் காரணமாக கடந்த ஐந்தாண்டுகளில் நான்கு லட்சத்துக்கும் அதிகமான மாணவ, மாணவிகளைக் கழகத்தில் இணைப்பது சுலபமாயிற்று."

சென்னை அதுவும் தென் சென்னை தி.மு.கவின் கோட்டை என்பார்கள். இப்படியிருக்க, தி.நகர் தொகுதியில் எந்த தைரியத்தில் போட்டியிட்டீர்கள்?

சென்னை தி.மு.க கோட்டை என்பதெல்லாம் ரொம்ப அதிகபட்சமான கருத்து. வேண்டுமானால் மண் கோட்டையாக



புதிய செல்லப்பிள்ளை!

இருக்கலாம். "சென்னையில் நான்கு தொகுதிகளில் போட்டியிட விருப்பம் தெரிவித்து மனு கொடுத்தேன். பெயருக்கு நான் நின்றாலும் அம்மாதானே உண்மையான வேட்பாளர். ஆனால் திநகரில் வென்ற நான் இப்போது வருத்தப்படுவது ஆயிரம் விளக்கில் நின்று ஸ்டாலினைத் தோற்கடிக்கும் வாய்ப்பை இழந்துவிட்டோமே என்பதுதான்."

மாவட்டச் செயலாளராக சர்வ பலத்துடன் இருந்தவர் உங்களால் தோற்கடிக்கப்பட்ட அன்பழகன். அப்படியிருக்க உங்கள் வெற்றி எப்படிச் சாத்தியமாற்று?

"சட்டசபையில் அம்மா அவர்கள் அன்பழகனிடம் 'இதுதான் உனக்குக் கடைசி சட்டமன்றம்' என்று சொல்லிவிட்டார்கள். அந்தச் சொல் உண்மையாக வேண்டுமே என்று வெறியுடன் உழைத்தேன். களப்பணி, அம்மா சாதனை மற்றும் மக்கள் நல்லாதரவு கை கொடுத்தது."

உங்கள் கட்சிக்காரர்களே உங்களுக்கு உழைக்காமல் அடுத்த தொகுதியான ஆயிரம் விளக்குக்குச் சென்று விட்டதாகவும், தேர்தல் நெருக்கத்தில் உங்கள் கட்சிப் பகுதிச் செயலாளர் தற்கொலை செய்துகொண்டதற்கும் நீங்கள் தான் காரணம் என்றும் உங்கள் கட்சிக்காரர்களாலேயே செய்தி பரப்பப்பட்டதே...!

எங்கள் தொண்டர்கள் வேலை செய்தார்கள். இறந்து போன தொகுதிச் செயலாளர் வரதை பாபு எனக்காக நன்றாகவே உழைத்தார். ஆனால் அவர் தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் தெரியவில்லை. என் அரசியல் எதிரிகள், ஆதிக்கச் சக்திகள், என் வளர்ச்சியைப் பிடிக்காதவர்கள் இதுபோன்ற வதந்தியைக் கிளப்பி விட்டார்கள். இதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட டிவிஷனில் எனக்கு வோட்டு குறைந்தாலும், 16,000 வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயித்தேன். எல்லாம் அம்மாவின் ஆசிதான். என் அரசியல் எதிரிகள், சொந்த கட்சியா, எதிர்கட்சியா என்று தயவுசெய்து கேட்காதீர்கள்."

நீங்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர். அப்படியிருக்க, உங்கள் முதல் சட்டமன்ற கூட்டத்திலேயே கொஞ்சம் வில்லங்கமாக நடந்துகொண்டது உங்கள் தலைவியிடம் நல்ல பெயர் வாங்கலாம் என்பதற்காகத்தானே?

"எந்த இரண்டாம் கட்டத் தலைவரும் சிபாரிசு செய்து இதுவரை நான் அரசியலில் முன்னேறவில்லை. என் 25 ஆண்டு கால உழைப்பைப் பார்த்து அம்மாவே கொடுத்ததுதான் பதவிகள். அம்மாவிடம் நல்ல பெயர் வாங்கியவன்தான் நான். புதியதாக



எதுவும் - அதுவும் விவ்லங்கமாகச் செய்து நல்ல பெயர் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. மாற்றுக் கட்சியைச் சேர்ந்த நபர் எங்கள் தலைவியை விமர்சிக்கும்போது, எதிர்ப்புத் தெரிவிப்பது ரோஷமுள்ள தொண்டனுக்கு இயல்புதானே. அன்று நான் கட்டுப்பாட்டுடன் ஒரு வரம்புக்குள் தான் நடந்து கொண்டேன்.'

வரும் சட்டமன்ற கூட்டத் தொடரில் உங்கள் தலைவியும் பங்குபெற இருக்கும் நிலையில் உங்கள் செயல்பாடு எப்படி இருக்கும்?

"என் இருக்கையை கடைசி வரிசைக்கு மாற்றிவிட்டார்களாம் (சிரிக்கிறார்). அம்மா அனுமதியோடு என் வாதத் திறமையை வெளிப்படுத்துவேன். சிறந்த சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டு, என் தொகுதி மக்களுக்குப் பெருமை சேர்ப்பேன்."

தென் சென்னையில் அ.தி.மு.க. நான்கு தொகுதிகளில் வெற்றி பெற்றும் மாவட்டச் செயலாளரை மாற்றக் காரணம், நீங்கள் போயஸ் தோட்டத்தின் செல்லப் பிள்ளையாகிவிட்டதால்தான் என்கிறார்களே..?





''பதற்றப்படாதீங்க அத்தான்... நீங்க மேடைப் பேச்சாளர் இல்லையா, அதான் பாலுக்குப் பதில் உங்களுக்கு சோடா கொண்டு வந்திருக்கேன்!''

- உ.ராஜாஜி

"நான்கு தொகுதிகளில் வெற்றி பெற்றதற்குக் காரணம் மாவட்டச் செயலாளரல்ல. அம்மாவின் செல்வாக்குதான். வேறு யார் மாவட்டச் செயலாளராக இருந்திருந்தாலும், அம்மா சாதனைகளின் காரணமாக இந்த வெற்றி கிடைத்திருக்கும். மற்றபடி என்னை 'செல்லப் பிள்ளை' என்று சொல்வதெல்லாம் அதிகப்படியான விமர்சனம். கட்சியின் தொண்டர்கள் அனைவரும் அம்மாவின் சொந்த, செல்லப் பிள்ளைகளே!"

நீங்கள் மாவட்டச் செயலாளரான பிறகு உங்களைத் தவிர வேறு யாரும் பேனர், கட்அவுட் வைக்கக்கூடாது என்று சொல்லுகிறீர்களாமே!

தவறான தகவல். புதுக்கோட்டையைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ. விஜயபாஸ்கர் சென்னையில் பேனர் வைப்பது எந்த வகையில் சரி? அம்மா புதுக்கோட்டைக்குச் சென்றால் அவர் அங்கு பேனர் வைக்கலாம். மற்றபடி அந்தந்த இடங்களில் அந்தந்த மாவட்டக் கழகம் வைப்பது தானே முறை."

ஒருவர் புதியதாக மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டதும், முன்னாள் மாவட்டச் செயலாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து புதிய செயலாளருக்கு எதிர் கோஷ்டியாகி விடுகிறார்களே!

"நான் அம்மாவின் விசுவாசி. அவரால் நேரடியாக அடையாளம் காணப்பட்டவன். கோஷ்டிகளில் எனக்கு நம்பிக்கையில்லை. தன்மீது நம்பிக்கை இல்லாதவனே கோஷ்டி சேர்ப்பான். எந்த கோஷ்டியைக் கண்டும் எனக்குப் பயமும் இல்லை. எல்லோரையும் அரவணைத்துச் செல்லவே ஆசைப்படுகிறேன்.

தி.நகர் தொகுதிக்கு என்ன செய்வதாக திட்டம்?

''மக்கள் எந்தக் குறைகளைச் சொன்னாலும் உடனுக்குடன் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சரி செய்வேன்."

- ப்ரியன்

படங்கள் : **ராஜன்**

மை டியர் கோனி!

PCO STD ISD

PCO

ஆசைப்பட்டதெல்லாம் நடந்துடுதா என்ன? நடிகர் விக்னேஷுக்கும் ரொம்ப வருஷமா முன்னணி நடிகராணும்னு ஆசை. சூரி படத்துல கொஞ்சம் திறமையை நிரூபிச்சாரு. அடுத்ததா 'ஆச்சார்யா' படம் ஆச்சர்யப் படுத்துற விதத்துல விக்னேஷைத் திரும்பிப் பார்க்க வைச்சிருக்கு. இப்போ விக்னேஷ் ஊர் ஊரா படம் ஓடுற தியேட்டர்களுக்குப் போய் ரசிகர்களைச் சந்திச்சுக்கிட்டிருக்காரு. 'அடிதடி, வல்கர் படங்களுக்குக் கொடுக்குற முக்கியத்துவத்தை, இந்த மாதிரி நல்ல படங்களுக்குத் தமிழ்த் திரையுலகம் தர்றதில்லை. நடிகர்களோட வாரிசு, இயக்குநர்களோட வாரிசுகளுக்குக் கிடைக்குற வாய்ப்புகள், என்னை மாதிரி கிராமத்திலிருந்து வர்ற திறமையான ஆட்களுக்குக் கிடைக்கற தில்லை'ன்னு தன்னோட ஆதங்கத்தை வெளிப்படுத்திட்டு வாராரு. ஸ்லோவா பிக்-அப் ஆகிட்டு இருக்குற ஆச்சார்யா, எந்தளவுக்கு விக்னேஷோட ஆசையை நிறைவேத்துதுன்னு பார்ப்போம்.

STD

என்னதான் கறுப்புக் கொடி பிடிச்சாலும், மகளிர் அமைப்புகள் ஆர்ப்பாட்டம் நடத்தினாலும் அழகிப் போட்டிங்க விடாம நடந்துக்கிட்டேதான் இருக்கு. இதோ அதுக்குள்ள அடுத்த மிஸ் யுனிவர்ஸ் போட்டி வர்ற 23ம் தேதி லாஸ் ஏஞ்சல்ஸ்ல நடக்கப்போகுது. இந்தியாவில இருந்து அதுக்கு ஒரு அழகி போயாகணுமே! அதுக்காக செலக்ட் ஆகியிருக்கறவங்க நேகா கபூர். தலைநகரப் பொண்ணு. இந்தியாவும் அழகிப் பட்டம் வாங்கி சில பல வருஷங்கள் ஆயிருச்சு. 'கண்டிப்பா நான் பட்டத்தை வெல்வேன்'னு நேகாவும் ஆசை ஆசையா ஸ்டேட்மெண்ட் விட்டிருக்காங்க. சரிசரி இந்தியாவுல ஏதாவது கோயிலுக்குப் போய்க் கும்பிட்டுட்டுப் போட்டிக்குப் போங்க. அப்பத்தான் பட்டம் கிடைக்காட்டி கூட, பரபரன்னு சர்ச்சையாவது கிளம்பும்.



• நேகா கபூர்

ISD

'கோனி மேல எனக்கு ஆசையோ ஆசை. ஆனா ஸ்லிம்மா த்ரிஷா மாதிரி இருந்த மை டியர் கோனி, இப்போ குண்டா குஷ்பு மாதிரி ஆயிருச்சு. எட்டுக் குட்டிக்கு அம்மாவா வேற ஆயிட்டுது. இதுக்கு மேல நான் ரொம்ப கண்டிப்பா நடந்துக்கப் போறேன். இனிமே என் மாளிகைக்கு வர்றவங்க, கோனிக்குக் கொடுக்கறதுக்காக சாப்பிடுற பொருள் எதுவுமே கொண்டு வரக்கூடாது. இது என் ஆர்டர்'னு ரஷ்ய அதிபர் புடின் சொல்லிட்டாரு. கோனி அவர் ஆசையா வளர்க்குற பெண் நாய். ரொம்ப செல்லம். புடினைக் காக்கா புடிக்கறதுக்காகவே, கோனியைப் பலர் கொஞ்சுவாங்க. புடின்கூட பல சர்வதேச சந்திப்புகளுக்கெல்லாம்கூட கோனி போகுமாம். ம், ஓ.கே. இனிமேலாவது கோனியோட மேனி இளைக்குதான்னு பார்ப்போம்!

- முகில்



காதலா... கடமையா?

யோசித்து யோசித்து வேறு வழி தெரியாததால் அந்தப் பெண் தைரியமாக 911க்கு டயல் செய்திருக்கிறாள். இது வாஷிங்டன் காவல்துறையின் அவசர உதவி எண்.

''ஹலோ என் பேரு துதாஷ். எனக்கு ஒரு அவசர உதவி வேண்டும்.''

''சொல்லுங்க மேடம்'' என்றார், ரிசீவரை எடுத்த தாம்சன் என்னும் அதிகாரி.

''போன வாரம் எங்க வீட்டுக்குப் பக்கத்துல ஒரு சின்ன பிரச்னை. அதை சரி பண்ண உங்க டிபார்ட்மெண்ட்ல இருந்து ஒரு இன்ஸ்பெக்டர் வந்திருந்தாரு.''

''என்ன பிரச்னை மேடம்?''

''இல்லை, பிரச்னை சரியாயிடுச்சு. ஆனா எனக்கு இப்ப வேற ஒரு உதவி வேண்டும்.''

''என்ன உதவின்னு சொல்லுங்க.''

''அந்த இன்ஸ்பெக்டரை நான் மீண்டும் பார்க்கணும். அவரோட பேரு என்னன்னு எனக்குத் தெரியணும்.''

''மேடம், இது எமெர்ஜென்சி லைன். இந்த மாதிரி விஷயங்களை எல்லாம் இங்கே செக் பண்ண முடியாது.''

''தெரியும். ஆனா எனக்கு வேற வழி தெரியலை. நீங்கதான் எப்படியாவது எனக்கு உதவி செய்யணும், ப்ளீஸ்.''

''எதுக்காக அவரோட பேரு தெரியணும்?''

''உங்ககிட்ட உண்மையைச் சொல்லிடறேன். எனக்கு அவரை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. இது வரைக்கும் அந்த மாதிரி ஒரு ஸ்மார்ட்டான ஆளை நான் பார்த்தது கிடையாது. மறுபடியும் அவரைப் பார்க்கணும்னு ஆசையா இருக்கு. நீங்க என்னோட நம்பரை நோட் பண்ணி அவரை விட்டு பேசச் சொன்னீங்கன்னா போதும். ரொம்ப உதவியா இருக்கும்.''

தொலைபேசியைக் கீழே வைத்துவிட்டு நேராக அந்தப் பெண்மணியின் வீட்டுக்குச் சென்றார், தாம்சன்.

''வாங்க வாங்க, அவரு பேரு தெரிஞ்சுதா?'' என்று ஆவலுடன் கதவைத் திறந்த அந்தப் பெண்ணை அப்படியே தூக்கிக்கொண்டு போய் உள்ளே தள்ளிவிட்டார்கள்.

''அவசர உதவி என்று நாங்கள் சொன்னது உண்மைதான். ஆனால் சாட்டிங், டேட்டிங் எல்லாம் அவசர உதவியின் கீழ் வராது'' என்கிறார் தாம்சன்.

அந்தப் பெண் பாவம் என்று நீங்கள் நினைத்தால் உங்களுக்குக் காதல் பிடிக்கும். தாம்சன் செய்தது சரி என்று நினைத்தால் உங்களுக்குக் கடமை உணர்வு அநியாயத்துக்கு அதிகம்.

- மருதன்

நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்



• படம்: ஸ்ரீஹரி

மேஷம்: எடுத்த காரியம் வெற்றி வாகை சூடும் வாரம். எண்ணங்கள் யாவும் ஈடேறும். தனம், குடும்பம், வாக்கு மேலோங்கும். பணக்கஷ்டம் இருக்காது. ஆடை, ஆபரண அலங்காரப் பொருட்கள் சேரும். உத்தியோகத்தில் பதவி உயர்வு, நற்பெயர் கிட்டும். வியாபாரம் சுறுசுறுப்புடன் முன்னேற்றப் பாதையில் செல்லும். குழந்தைகளால் மன சந்தோஷம் ஏற்படும். அண்டை நாட்டுத் தொழில் நற்பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படாது. சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபட்டு குஷ்டரோகிகளுக்குத் தானம் செய்யவும். நற்பலன் கிடைக்கும்.

ரிஷபம்: முன்னேற்றமான வாரம். முயற்சி செய்யும் காரியம் பலிதமாகும். நெருங்கிய சகாக்கள் விலக நேரிடும். பூர்வீகச் சொத்தில் பாகப்பிரிவினை ஏற்படும். குழந்தைகளைப் பற்றிய கவலை வந்து போகும். திருமணக் காரியம் கைகூடும். வேலைப்பளு அதிகரிக்கும். சிலருக்கு இடமாற்றம் ரெடி. தொழில் துறையில் இருந்து வந்த நெருக்கடிகள் விலகும். மனக்கிலேசம் விலகும். எதிரியை வெல்வீர். கணவன் - மனைவி அனுசரித்தல் நலம். ராகு/கேது/ குரு வழிபாடு நற்பலனை அளிக்கும்.

மிதுனம்: நல்ல யோகமான வாரம். வேலை மாற்றம், இடமாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். பொறுப்புள்ள பதவி கிட்டும். குழந்தைகள் வழியில் சுபநிகழ்ச்சி கைகூடும். வீடு/வாசல் வாங்க நல்ல தருணம். நண்பர்/ உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். உடல் நிலை பாதிக்கப்படாது. தாயார் உடல்நலத்தில் நலிவு ஏற்பட்டு விலகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். நீண்டகால எண்ணம் ஈடேறும். ராகு/கேது வழிபாடு நற்பலனை அளிக்கும்.

கடகம்: தெய்வ அனுகூலம் மிகுந்த வாரம். மகான் சந்திப்பு கிட்டும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் மிகுந்த லாபம் ஏற்படும். புதிய தொழில் துவங்க நல்ல காலம். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பத்திரிகைகளில் பெயர் வரும். கணவன்- மனைவி உறவு நற்பலனைத் தரும். சுபநிகழ்ச்சி கைகூடும். குழந்தைகளால் மன சந்தோஷம் கிட்டும். தேர்வில் அதிக மதிப்பெண் கிட்டும். நீண்ட தூரப் பிரயாண வாய்ப்பு வந்து



சேரும். சனி/குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

சிம்மம்: வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். கைப்பொருள் மீது கவனம் தேவை. நெருங்கிய கூட்டாளிகளுடன் மனக்கசப்பு வரும். வேலைப்பளு அதிகரிக்கும். வேலை செய்யும் இடத்தில் எதிர்ப்பு இருக்கும். வியாபாரத்தில் சற்று மந்தமான போக்கு ஏற்படும். உடல்நிலையில் கவனம் தேவை. திருமணத் தடை விலகித் திருமணம் கைகூடும். கணவன் - மனைவி உறவு மன சலசலப்பை ஏற்படுத்தும். கொடுக்கல் வாங்கலில் கவனம் அவசியம். யாருக்கும் ஜாமீன் போடக்கூடாது. ராகு/கேது/குரு/ சனி வழிபட்டு வருதல் நற் பலனை அளிக்கும்.

கன்னி: பொறுமை, நிதானம், விட்டுக் கொடுக்கும் சுபாவம் இருந்தால் எதிலும் வெற்றி வாகை சூடலாம். வீடு/வாகனம் வாங்க நல்ல தருணம். கணவன் - மனைவி விட்டுக் கொடுத்து அனுசரணையுடன் நடந்துகொள்வது நல்லது. தொழில் துறையில் அபரிமிதமான லாபம் கிட்டும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். வழக்கு, வியாபாரம் வெற்றி அளிக்கும். நண்பர்/ உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். ராகு/ கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

துலாம்: தீராத சிக்கல்கள் தீரும். எதிர்ப்பு, தொல்லை விலகும். வழக்கு வெற்றி வாகை சூடும். வெளியூர்ப் பிரயாணம் செல்ல நேரிடும். மனசலனம் தீரும். பூமி மூலம் ஆதாயம் கிட்டும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். குழந்தைகளால் மனசந்தோஷம் ஏற்படும். வேலையில் மாற்றம் ஏற்படும். சிலருக்கு வீடு வாங்கும் யோகம் கிட்டும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கனவுகள் ஜெயம் அளிக்கும். வேறு வேலைவாய்ப்பு வந்து அணுகும். பத்திரிகைகளில் பெயர் வரும். குரு/சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

விருச்சிகம்: நல்ல முன்னேற்றமான வாரம். மனமகிழ்ச்சி கிட்டும். சுபக் காரியம் கைகூடும். பத்திரிகைகளில் பெயர் வரும். குழந்தைகள் இடம்மாறிப் போவார்கள். தூர தேச அழைப்பு வந்து சேரும். நெருங்கிய சகாக்கள் இடம் மாறி விலகிச் செல்வார்கள். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை செய்ய நேரிடும். வழக்கு, வியாபாரம் வெற்றி அளிக்கும். ஆரோக்கியம் பாதிக்கப்படாது. வராத பாக்கிகள் வசூலாகும். புதிய தொழில் முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் மாறுதல் ஏற்படும். பதவி உயர்வு ஏற்படும். ராகு/கேது வழிபட்டு வருதல் நற்பலனை அளிக்கும்.

பரத்வாஜ்...

மணமாகி இருபது ஆண்டுகளாகியும் குழந்தை பிறக்கவில்லை. எங்களுக்குக் குழந்தை பாக்கியம் இருக்கிறதா? வேலையில் ஏதேனும் பிரச்னை ஏற்படுமா?

- பி. சபா, மறைமலைநகர்

தங்களுக்கு சுவீகாரப் புத்திரயோகம்தான் இருக்கிறது. குழந்தை பிறக்க வாய்ப்பு இல்லை. குழந்தை தத்து எடுத்தால் நலம் கிட்டும். வேலைப்பளு அதிகம் இருக்கலாம். கவலைப்படும்படி எதுவும் நடக்காது.

என்னுடைய பெண்ணுக்கு, பையனுக்கு எப்போது திருமணம் நடக்கும்? நல்ல குணமுள்ள வரனாக அமையுமா?

- டி.கிருஷ்ணன், லால்குடி

தங்கள் பெண்ணுக்குத் தற்போது திருமண காலம். வெளிநாட்டில் வேலை செய்யும் வரன் அமையும். பிறந்த ஊருக்குத் தென்திசையில் பிறந்த, உறவினரல்லாத பையன், ஆறுமுகன் பெயர் உடையவன். தங்கள் பையனுக்கு புதன்தசை நடக்கிறது. 2007-ல் திருமணம் முடியும். கர்ப்பதோஷம் உள்ள வரனைப் பார்க்கவும். உறவினரல்லாத, படித்த,

தனுசு: மனசந்தோஷமான வாரம். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பணக் கஷ்டம் இராது. உல்லாசப் பிரயாணம் செய்ய நேரிடும். திருமணக் காரியம் கைகூடும். சிலருக்கு வியாபாரத்தில் இடம் மாற்றம் ஏற்படலாம். வேலைப்பளு அதிகரிக்கும். பகைமைகள் விலகும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி கிட்டும். செலவுகள் சுபமானதாக இருக்கும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள். மகான் சந்திப்பு கிட்டும். புதிய தொழில் முயற்சியில் அனுகூலம் ஏற்படும். ராகு/கேது/சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

மகரம்: சிறப்பான வாரம். பூமி/வாகனம் வாங்கப்படும். குடும்பம், தனம், கல்வி மேலோங்கும். உடல்நிலை பாதிக்கப்படாது. பொருளாதாரக் கஷ்டம் விலகும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். வராத நிலுவைகள் வந்து சேரும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். சத்ரு தொல்லை விலகும். தெய்வ அனுகூலம் ஏற்படும். சாதுக்கள் தரிசனம் கைகூடும். உத்தியோகத்தில் இடம் மாற்றம் ஏற்பட்டுப் புதிய வேலை கிடைக்கும். வெளியூர்ப் பிரயாணம் வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல லாபம் ஏற்படும். வெளிநாட்டு மனிதர்கள் அனுகூலம் ஏற்படும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். சனி/ குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

கும்பம்: எதிரிகள் சரண் அடையும் காலம். உடல்நிலையில் போதிய முன்னேற்றம் ஏற்படும். பூமி/வீடு/வாகனம் வாங்க நல்ல தருணம். மாணவர்கள் கல்வியில் அக்கறையுடன் படிக்கவும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். வாழ்க்கையில் விட்டுக் கொடுத்து நடந்து கொள்வது நற்பலனை அளிக்கும். வெளிநாட்டு அழைப்பு வரும். பணக் கஷ்டம் விலகும். திருமணக் காரியம் கைகூடும். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். செலவுகள் சுபமானதாக இருக்கும். ராகு/ கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

மீனம்: மன இறுக்கம் விலகும் வாரம். கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நற்பயனைத் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி/இறக்குமதித் தொழில் நல்ல லாபத்தை அளிக்கும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வீட்டுக் கதவைத் தட்டும். திருமணத் தடை விலகும். வாக்கு, நாணயம் காப்பாற்றப்படும். புதிய முயற்சி பலன் அளிக்கும். பணப்பற்றாக்குறை தீரும். வழக்கு வெற்றி அளிக்கும். ராகு/ கேது/ சனி/ குரு வழிபாடு நற்பலன் உண்டாகும். ●

வேலையில் உள்ள வரன் அமையும்.

என் மகனுக்குப் பல ஜாதகங்களைப் பார்த்தும் பலன் இல்லை. பொருந்தி வருகிற ஜாதகத்திலும் தடங்கல் ஏற்படுகிறது. எப்போது என் மகனுடைய திருமணம் நடக்கும்?

- எஸ். நாராயணன், சென்னை - 101

தங்கள் பையனுக்கு 20.09.2006க்குப் பிறகு திருமணம் கைகூடும். சர்ப்பதோஷம் உள்ள வரனைப் பார்க்கவும். பிறந்த ஊருக்குத் தென்திசையில் ஓரே பெண் உள்ள இடத்தில் திருமணம் கூடும்.

என் தங்கை சுகமில்லாமல் இருக்கிறாள். அவளுக்குக் குணமாகித் திருமணம் நடக்குமா?

- மீனாட்சி சீனிவாசன், பெங்களூர்-1

நாற்பது வயதாகும் தங்கள் தங்கைக்கு தற்போது சுக்ரதசை நடக்கிறது. 42 வயது 8 மாதங்களுக்குப் பிறகு 6 வருடங்கள் வரை சூரிய தசை நடக்கும். இந்த ஜாதகருக்குத் திருமணம் நற்பலனைத் தராது. லலிதா சகஸ்ரநாமம் படித்து வருதல் பூரண மனவளர்ச்சியை உண்டாகும்.

...பதில்கள்

மாமன் மகள்!

என் கல்யாணக் கதையைச் சொன்னா சிரிப்பாத்தான் இருக்கும். கதையைக் கேட்டு நல்லா சிரிப்பாங்க. பிறகு, 'நல்லா கதை விடுடா, பையா...' என்று நம்பாமப் போவாங்க.

சொந்தத்தை அண்டவிடாத சொந்தக்காரன் என் மாமன். எட்டு வயசில மாமனுக்குப் பயந்தவன் நான். வாலிபனாகி பெரிசா மீசை வெச்சும் பயம் மட்டும் போகவேயில்லை. ஆனாலும் கல்யாணியப் பாக்கும்போது மனசுக்குப் பிடிச்சிப் போயி கள்ளத்தனமா எப்பவுமே சிரிச்சு வெப்பேன்.

அவளும் சும்மாயில்ல. போறப்போ ஒரு சிரிப்பு; வர்றப்போ ஒரு சிரிப்பு, வீட்டுப் படியேறுறப்ப 'வெடுக்'குன்னு ஒரு பார்வை; இப்படியே என்னைச் சாவடிச்சா கல்யாணி.

என் மாமன் வீட்டுக்குப் பக்கத்துல பாட்டி ஒருத்தி இருந்தா. பாக்கு இடிக்கிற ஒரல்ல என் தலையப் போட்டு இடிக்கிற மாதிரி ஒரு விஷயத்தைச் சொன்னா பாட்டி. கல்யாணிக்கு உள்ளூரில் மாப்பிள்ளை கிடையாதாம். வெளியூர்ப் பையன்தான் மாப்பிள்ளையாம். உள்ளூரில் கட்டினால் அத்தைக்குப் புருஷன் செத்து, மொட்டைக் கழுத்தி ஆவாளாம். அப்படி ஒரு கனவு வந்துச்சாம் அத்தைக்கு. வீட்டுக்கு நடுவே ஒரு செடி முளைச்சு பூ வெச்சா அதை வந்து புழு திங்கிற மாதிரி ஒரு கனவாம்.

அதன் பிறகு எனக்குத் துக்கம் பெருக்கெடுத்து நித்திரை முழுசும் போச்சு. என் அலங்கோலத்தைப் பாத்து விஷயத்தைக் கேட்டான் ஒருத்தன். அவன் என் பெரியப்பன் மகன். கல்யாணமாகி இரண்டு குழந்தை பெத்து இப்பொழுது கருங்குரங்காட்டம் இருக்கிறவன். நான் அத்தை கண்ட கனவைச் சொல்லி அழுறமாதிரி பாத்தேன். பெரியப்பன் மகன் சிரிச்சுக்கிட்டே, "உன் நெலமை புரியுது. வசிய மையின்னு ஒண்ணிருக்கு. அதை வாங்கிப் போகிற போக்கில கையில பூசிட்டா நீ நெனைச்ச மாதிரி காரியம் நடக்கும்" என்று சொன்னான்.

"அத்தைக்கு வசிய மை பூசறது தப்பில்லையா"ன்னு நான் கேட்டேன். அவன் தலை தலையா அடிச்சுக்கிட்டு "அத்தைக்குப் பூசாதடா. அது அக்கிரமம் ஆயிடும். உனக்குப் புடிச்ச மோகினிக்குப் பூசு"ன்னு சொல்லி, வசிய மை செய்பவன் எங்கிருப்பான் என்றும் சொல்லிப் போனான்.

கல்யாணிக்கு மாப்பிள்ளை பாக்கிறதா தகவல் வந்ததும்தான் பதறிப் போனேன். சரி ஆனது ஆச்சு, வசிய மையை ஒரு கை பாக்க வேண்டியதுன்னு ஒரு குடுகுடுப்பைக்காரனைத் தேடிப் போனேன். எட்டு மைலு தள்ளி ஒரு இலுப்பைத் தோப்பு நிழல்ல ஒரு குடுகுடுப்பைக்காரன் உறங்கிக்கிட்டு இருக்கிறதைப் பாத்தேன். அவனைத் தட்டி எழுப்பி "எனக்கு ஒரு காரியம் ஆகணும், செய்வியா?"னு கேட்டேன்.

"என்ன செய்யணும்? யாரையாச்சும் ரத்தம் கக்கிச் சாகடிக்கட்டா? கை கால் இழுத்துக்கிட்டுப் படுக்க வெக்கட்டா... யாரை? ஆளைக் காட்டு. காலடி மண்ணெடுத்துக் கணக்கை முடிக்கிறேன்" என்று பெரிசாய் உதார் விட்டான்.

நான் அவனை அடக்கிவிட்டு, "நீ கடையில ஒத்தை ரூபாய்க்கு மை வாங்கி வசிய மையின்னு விக்கிற கதை எனக்குத் தெரியும். அதெல்லாம் வேணாம். ஒரு வீட்டு முன்னாடி நான் சொல்றதை உன் ஜக்கம்மா சொன்னதா சொன்னாப் போதும்" என்றேன்.

"ஐயய்யோ நான் பொய் சொல்ல மாட்டேன், சாமி. பொய் சொன்னா ஜக்கம்மா என்



எழில்வரதன்

வாயில, மூக்குல ரத்தம் வரப் பண்ணிடுவா" என்று சொல்லி பதறி ஓடப் பார்த்தான். அவனைத் தடுத்து நிறுத்தி பெரிய தொகை தருகிறேன்னு சொன்னதும் கொஞ்சமாக எறங்கி வந்தான்.

''சரி, இன்னைக்கே சுடுகாட்டுல போய் பூஜை செஞ்சிட்டு, சாமத்தில வாக்குச் சொல்ல உன் ஊருக்கு வரேன். அதுக்குக் கருப்புக் கோழியும், பழைய புடைவை ரெண்டும், பச்சரிசி ஒரு வல்லம், சாராய பாட்டில் ஒண்ணு...'' என்று நீட்டிக்கொண்டே போனான்.

"யோவ், நான் பரிகாரம் பண்ணச் சொல்லலை. சும்மா பொய்தான் சொல்லச் சொன்னேன். இந்தக் காசை வாங்கிக்கோ. மீதிக் காசை நாளைக்கு வாங்கிக்கோ" என்றேன். அவனை ஊருக்குக் கூட்டிக்கொண்டு போய் வீதியைக் காட்டி "அதோ கரண்டு கம்பம் தெரியுதே அதுக்குப் பக்கத்து வீடு" என்று அடையாளம் காட்டினேன்.

மறுநாள் குடுகுடுப்பைக்காரனிடம் போய் மீதிக் காசைக் கொடுத்து ''வாசலிலே என்ன சொன்னே?'' என்று கேட்டேன்.

அவன் சிரிச்சுகிட்டே, "இந்த வீட்டுல இருக்கிற கன்னிப் பொண்ணுக்கு உள்ளூர் மாப்பிள்ளையக் கட்டி வெச்சா பத்துபுள்ளை பெத்து சுகமாயிருப்பா. வெளியூர் மாப்பிள்ளையக் கட்டிவெச்சா, ஜக்கம்மா குடும்பத்தோட ரத்தம் கக்க வெப்பான்னு சொல்லிட்டு வந்தேன்'' என்றான். எனக்கு சந்தோசமானது. அவனை வீட்டுக்குப் போகச் சொன்னேன். 'இல்ல அந்த வீட்டுக்குப் பரிகாரம் பண்ணா காசு வரும்; அதைத் தடுக்காதே'ன்னு சொன்னான்.

அவன் பரிகாரம் செய்யப் போனான், நான் தள்ளி நின்னு பாத்தேன். அவன் அத்தை வீட்டுக்குப் போகாம அந்தப் பக்கத்து வீட்டுப்



பாட்டி வாசலில் நின்று "இந்த வீட்டுல இருக்கிற கன்னிப் பொண்ணுக்குக் கல்யாணம் ஆகுமுன்னு ஜக்கம்மா சொல்லுறா" என்றான்.

எதிர்த்திண்ணையில் உட்கார்ந்திருந்த நாலைந்து ஆம்பளைங்க வந்து, "எந்த வீட்டுப் பொண்ணு சரியா சொல்லு" என்றார்கள். அவர்களே அத்தை வீட்டையும் காட்டி அந்த வீடா என்றும் கேட்டார்கள். அவனுக்குக் கெட்டகாலம் பாட்டி வீட்டைக் காட்டி "இந்த வீட்டுக் கன்னிப் பொண்ணுக்கு" என்றான்.

"டேய், கெழவிக்காடா கல்யாணம்? உன் ஜக்கம்மா சொன்னாளா? அவளுக்குப் பத்துப் புள்ளை பொறக்குமா?" என்று கேட்டுக்கொண்டே அவன் கட்டியிருந்த எட்டுப் புடைவை, இரண்டு லுங்கி, கையில் இருந்த பை, அதிலிருந்து துணிமணி எல்லாம் கந்தல் கந்தலாகக் காற்றில் பறக்க, 'அடி அடி' என்று அடித்து கரண்ட் கம்பத்தில் கட்டினார்கள். கரண்ட் கம்பத்துக்குப் பக்கத்து வீடென்று அடையாளம் சொன்னேன். 'இடது பக்கமா வலது பக்கமா'னு சொல்லாமல் விட்டேன். பொய் சொன்னால் ஜக்கம்மா மூக்குல வாயில ரத்தம் வர வெப்பான்னு அவன் சொன்னது நெசம்தான். அவனுக்கு ரத்தம் வந்தது.

அடி உதைக்குப் பயந்து குடுகுடுப்பைக்காரன் "உயரமான கருத்த பையன் ஒருத்தன் சொல்லச் சொன்னான்" என்று ஒப்பாரி வைத்தான். நான் பதுங்கி வந்தேன். கருங்குரங்காட்டம் இருக்கிற என் பெரியப்பா பையன் என்னை அடையாளம் காட்டிவிட்டான். மானம் போச்சு.

"மாமன் மகமேல ஒருத்தனுக்கு ஆசை வந்தா சித்தப்பன்கிட்ட சொல்லுவான், சிநேகிதன்கிட்ட சொல்லுவான். மானம் ஈனம் கெட்டு அத்தைகிட்டேயும் சொல்லுவான். போயும் போயும் ஒருத்தன் குடுகுடுப்பைக்காரன்கிட்ட சொல்லுவானா?" என்று ஆளுக்கொரு வாய் சிரித்துத் தொலைத்தார்கள். நான் அவமானம் தாங்காமல் பழனிக்கும், பழனி சுத்தி இருக்கிற கோயிலுக்கும் ஒன்பது நாள் போய் ராத்திரியில் திரும்பிவந்தேன்.

அதுக்குள்ள என் அத்தையும் அம்மாவும் பேசி முடிச்சு எனக்கும் கல்யாணிக்கும் கல்யாணத்தை முடிச்சாங்க.


இப்படிக் கல்யாணக் கதையைச் சொன்னா இப்பவும் சிரிப்பு வரும். ஒண்ணு சொல்லியே ஆகணும். அடி வாங்கிக் கொண்டு ரணகளமாய் ஓடிப் போன குடுகுடுப்பைக்காரனை நான் என் கல்யாணம் முடிந்து ஏழாம் மாசம் டவுன் பக்கம் போகிற மணல் லாரியில் போகிறதைப் பாத்தேன். மணல் அள்ளிய அலுப்புல வெயில்கூட தெரியாம மணல் மேல அவன் மல்லாந்து படுத்து உறங்கிக்கிட்டே போனான் அவன். ●

"நீங்க போட்டுத் தந்த கணக்குக்கு மிஸ் ரெண்டு முட்டை போட்டிருக்காங்கப்பா!"

"ரெண்டு எதுக்குடா?"

"உனக்கொண்ணு, எனக்கொண்ணு!"

- தமிழ்நாயகி



ஃபேக்ஸ் ஃப்ரம் டெல்லி



வெளவால்களுக்கு வந்த வாழ்வு!

டெல்லி முதலமைச்சர் ஷீலா தீக்ஷித். அவங்களோட தோட்டத்துல ஏகப்பட்ட வெளவால்கள் குடியிருக்கின்றன. உலா வரும் வெளவால்களைத் துரத்தி விடும்படி ஜோதிடர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்களும் எவ்வளவோ முறை சொல்லிப் பார்த்தும், அதையெல்லாம் அம்மணி காதுலேயே போட்டுக்கறதில்லையாம். "வெளவால்கள் என்னைத் தொந்தரவு செய்யறதே இல்லை. பின் நான் ஏன் அதைத் தொந்தரவு செய்து வெளில துரத்தணும்"னு திருப்பிக் கேட்கறாங்களாம். வெளவால்களுக்கு நல்ல காலம், யாராவது அசைவப் பிரியர் முதல்வராயிருந்து, வளைத்துப் பிடிச்சுப் பிரியாணி பண்ணச் சொல்லியிருந்தால் என்னாவது?

தலைநகர மக்கள் இனி பருப்பு வாங்க கடை கண்ணியைத் தேடிப் போக வேண்டாம். அவங்க இருக்கிற இடம் தேடி அரசு வேன்களே பருப்புகளைச் சுமந்துக்கிட்டு உலா வர ஆரம்பிச்சிருக்கு. விலைவாசி சுமையைக் குறைக்க டெல்லி அரசு கொண்டு வந்திருக்குற புதுத் திட்டமாம் இது. பயத்தம் பருப்பும் உளுத்தம் பருப்பும் கிலோ 38 ரூபாய்க்கே கிடைக்குது.

நம்மூர்லயும் ரேஷன் பொருட்களை வீட்டுக்குக் கொண்டு வந்து சப்ளை பண்ணுவோம்னு அண்ணன் விஜயகாந்த் சொன்னாரு. ஆனா அவரு எப்ப முதல்வராகறது... எப்போ வீடு தேடி எல்லாம் வர்றது...ம்... வாங்க அடுத்த நியூஸைப் படிப்போம்..

டெல்லில ஒரு இடத்துல ஷூட்டிங் நடந்துக்கிட்டிருக்குறப்போ, டைரக்டர் 'கட்' சொல்வதற்கு முன்னால, வேடிக்கை பார்த்துக்கிட்டு இருந்தவங்க 'கட்' சொல்லி படத்தோட ஷூட்டிங்கை நிறுத்திட்டாங்க. அது 'டில்லி ஹைட்ஸ்'ங்கற படம். அந்தப் படத்தோட ஷூட்டிங்கை நடத்த விடாம 'செலப்ரிட்டி ஹோம்ஸ்'ங்கற குடியிருப்பில இருந்தவங்க குய்யோ, முய்யோன்னு சத்தம் போட்டு, போலீஸைக் கூப்பிட்டு அமர்க்களப் படுத்திட்டாங்க. அப்புறமென்ன, 'ஆளை விடுங்க சாமி, நாங்க வேற இடத்துல ஷூட்டிங்கைப் பார்த்துக்கறோம்'னு சொல்லி சினிமாக்காரங்க 'ஜூட்' விட்டுட்டுப் போய்ட்டாங்களாம். விஷயம் தெரியுமா, அந்த ஹிந்திப் படத்தோட தயாரிப்பாளர் நம்ம பிரபுவாமில்ல!

தலைநகரமே திடீர்னு கல்யாணகளை கட்டி இருக்கு தெரியுமா? நம்பர் 7, ஸப்தர்ஜங் சாலைங்கற முகவரியை அவ்வளவு சீக்கிரமா யாராலும் மறந்துட முடியாது. ஏன்னா ராகுல் மஹாஜன் பேர்ல போதை மருந்து வழக்கு சமாசாரம் நடந்தது அங்கதானே. திரும்பவும், அதே வீட்ல ராகுல் இப்போ 'புது மாப்பிள்ளையாக' ஸ்வேதா சிங்குகிட்ட மாட்டிக்கிட்டாரு. ராகுலுக்கும், குர்காவுனைச் சேர்ந்த ஸ்வேதா சிங்குக்கும் ஜூலை 10-ம் தேதி இந்த வீட்ல தான் நிச்சயதார்த்தம் நடந்தது. ஸ்வேதா ஒரு விமான ஓட்டி (பைலட்). ப்ரமோத் மஹாஜனின் மகனுக்கு விரைவில் விவாகம்ங்கறதுதான் தலைநகரத்தோட லேட்டஸ்ட் தலையங்கம்.

- நளினி சம்பத்குமார்

• ராகுல்மகாஜன், ஷ்வேதாசிங்



"ஸ்னேகாவா இப்படி?" - புதுப் பேட்டையில் அவர் பாலியல் தொழிலாளி யாக வலம் வந்தபோது, பார்த்தவர்களின் கண்கள் இப்படித்தான் ஆச்சர்யத்தில் விரிந்தன. ஆனால், இந்தப் படத்திலிருந்து ஸ்னேகாவின் முகம் மாறியிருக்கிறது. காதல் படங்களுக்கு மட்டுமே என்றிருந்தவர், இப் போது எந்தப் பந்தை வீசினாலும் சிக்ஸர் அடிக்கத் தயாராகிவிட்டார்.

"இதுல என்னங்க இருக்கு. எல்லாமே நடிப்புதானே. செல்வராகவன் தமிழ் சினிமாவுல எல்லோரும் மதிக்கிற ஒரு இயக்குனர். அவர் கதை சொன்ன விதமும் என் கதாபாத்திரத்தை அமைச்ச விதமும் ரொம்பப் பிடிச்சிருந்தது. ஓ.கே. சொல்லிட் டேன். ஸ்னேகாங்கிற கண்ணாடியைக் கழட்டி வைச்சிட்டு கிருஷ்ணவேணியா பார்த்தவங் களுக்கு பெரிய சர்ப்ரைஸ் கொடுத்திருக் கேன். பாராட்டுகள் தொடர்ந்து குவிஞ்சிட்டு இருக்கு. 'ஐய்யோ நான் மாட்டேன்'னு அந்த வேடத்துக்குக் கதவைச் சாத்தியிருந்தா இந் நேரத்துக்கு எல்லா சந்தோஷங்களையும் இழந்திருப்பேன்."

ஆனாலும் ஸ்னேகாவை கோடம்பாக்கத் தில் அடிக்கடி தேட வேண்டியிருக்கிறதே... என்றால், 'விஷ்க்'கென கையைக் காற்றில் விமானம்போல் பறக்கவிடுகிறார். "நான் தான் கேரளாவுக்கு அடிக்கடி பறந்துட்டு இருந்தேனே. இப்பவும் மூணு தெலுங்குப் படங்கள்லயும் ஒரு மலையாளப் படத்துலயும் நடிச்சிட்டு வர்றேன். நான் முதன்முதலா அறிமுகமானது மலையாளப் படத்துலதான். மறுபடியும் இப்போதான் அங்கே நுழையறேன். சூப்பர் ஸ்டார் மம்முட்டியோட நடிச்ச படம் சூப்பர் ஹிட். ஒரு தமிழ்ப் பெண்ணா நான் அங்கே ஜெயிக்கிறது ஆரோக்கியமான விஷயம்தானே. 'புதுப்பேட்டை' எனக்கு திறந்திருக்கு. இப்போ ஹிந்தியிலிருந் வந்திருக்கு. இனிமேல்தான் புது பார்க்கப் போறீங்க" என்ற ஸ்னேகாவின் உற்சாகம்.

நாக் ரவியுடனான காதல் விவகா அடிக்கடி ஏதாவதொரு சர்ச்சையில் வி

"சர்ச்சைக்கு யாராவது ஆசைப்படு விதி. ஆனாலும் எந்தப் பிரச்னையும் வாழ்க்கையைப் பாதிக்கறதில்லை." முடித்துக் கொள்கிறார்.

ஸ்னேகா கிளாமர் பக்கம் தப்பித் த எட்டிப் பார்ப்பதில்லை. "கிளாமர் என் எனக்குப் பொருந்தாது. தமிழ்நாட்டி லாக் குடும்பங்களுக்கும் என் மே பாசமிருக்கு. எந்த போட்டோ ஸ்டுடியே தாலும் அங்கே என் போட்டோ மாட் இவ்வளவு மதிப்பும் நான் கண்ணி கள்ல மட்டும் நடிக்கிறதாலதானே."

சந்திரமுகியில் ஜோதிகா வேடத் முதலில் அழைத்தது ஸ்னேகாவைத்த கால்ஷீட் கைவசம் இல்லை. ரஜினி வந்தும் கைநழுவிப் போகுதேன் துடிக்கத்தான் செஞ்சேன். 'இன்னாருக் என்று எழுதி வைத்தானே தேவன் அ கையிலே எதுவுமே இல்லைங்க!" எ

'புதுப்பேட்டை' மாதிரியான வித்தி கதாபாத்திரங்கள் செய்யும்போது ந மிருந்தும் ஆதரவு கோருகிறார். குறிப்ப விடமிருந்து. இதுபற்றி மிகுந்த ஆதங் பேசுகிறார் : "தமிழ் சினிமாவுல சாதி வொரு நடிகர் நடிகையும் பல எதிர்ப் களைத் தாண்டித்தான் சாதிக்கிறோ மீடியா ரொம்பக் கேள்விகள் கேட்குது முயற்சிகளுக்கு உடனே அங்கீகாரம் தில்லை. இந்தப் போக்கு மாறினா உங்களுக்கு இதைவிட அதிக கொடுப்பேன்."

"திறந்தாச்சு புது வாசல்!"

வாசலை
ாய்ப்புகள்
ாவைப்
ில் புது

ட்பட
ரன்?
ளா?
மா
ாடு

ட
மே
எல்
ளிப்
ார்த்
கும்.
ரோல்

பி.வாசு
அப்போ
ாய்ப்பு
னும்
ளார்
மை

ன
கு
பா
டு
வ்
வி
கே
ன
ற
ா

ன்





பேச்சின் பத்துக்கு முதலாவது இன்றியமையாத சாதனம் என்னவென்றால், உங்களுடன் பேசுவதற்குத் தயாராயிருக்கும் மனிதர்கள்தான்.


தனக்குத்தானே சம்பாஷித்துக் கொள்வதில் இன்பமில்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால், அத்தகையவர்கள் விரைவில் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள பிரசித்தமான சர்க்கார் விடுதிக்குப் போய்ச் சேர நேரிடும். இந்த விடுதியில் மட்டும், தனக்குத்தானே பேசிக்கொள்ள எல்லோருக்கும் பூரண பாத்யதை உண்டு. மற்ற இடங்களில் சகோதர மனிதர்களுடனே சம்பாஷிப்பதுதான் மரபு.

சகோதர மனிதர்களிலுங்கூட நாம் நினைத்தவர்களோடெல்லாம் பேச முடியாது. உதாரணமாக, முஸோலினி பெரியாருடனும், மகாத்மாவுடனும் சர்ச்சிலுடனும், ஸ்ரீமான் ஹிட்லர்ஜியுடனும், திருவாளர் ரூஸ்வெல்ட்டுடனும் அநேக விஷயங்கள் நமக்குப் பேசுவதற்கு இருக்கலாம். ஆனால், அவர்கள் நம்முடன் பேச வருவார்களா? ஒரு நாளும் முடியாத காரியம். அவர்கள் பேசாமல் நாம் மட்டும் ஒரு தரப்பான சம்பாஷணை நடத்துவதும் உசிதமன்று. இந்தப் பாத்தியதை பத்திரிகாசிரியர்களுக்குத்தான் உண்டு. 'அடே சர்ச்சிலே!' 'ஓ மாக்டனால்டே!', 'ஏ ஹிண்டன்பர்க்கே!', 'டேய்! கண்டூர் ராஜாவே!' என்றெல்லாம் பத்திரிகாசிரியர்கள் கூப்பிட்டு எதிரிகள் பதில் சொல்ல இடமின்றி ஒரு தரப்பாகப் பேசிக்கொண்டு போகலாம். சாதாரண ஜனங்களுக்கு இது எடுத்ததல்ல.

அது போலவே, அடுத்தாத்து சேஷிப் பாட்டியும், எதிர்வீட்டு இருமல் தாத்தாவும் இரவு பகல் இருபத்து நான்கு மணி நேரமும் உங்களுடன் சம்பாஷிக்க விரும்பலாம். ஆனால், உங்களுக்கு அது விருப்பமாயிராது. ஆகவே, நாம் சம்பாஷிப்பதற்குரிய மனிதர்கள் யார் என்பதை முதலில் கண்டு பிடிக்க வேண்டும். இப்பொழுதுதான் பேச்சிலும் எந்த விஷயத்தைப் பற்றிய பேச்சில் உங்களுக்குப் பிரியம் அதிகம் என்னும் கேள்வி எழுகின்றது. அதே விதமான ருசியுள்ள மனிதர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஒரே ஒரு விஷயத்தைப் பற்றிய பேச்சு மட்டும் எல்லோருக்கும் சமமாக ருசிப்பதாகும். இதுதான் சாப்பாட்டையும் சிற்றுண்டியையும் பற்றிய பேச்சு மகாத்மாக்கள் முதல் சாதாரண மனிதர்கள் வரையில், பரம பாகவதர்கள் முதல் உலகாயதர்கள் வரையில், ஸ்திரிகள், புருஷர்கள், வாலிபர்கள், வயோதிகர்கள் அனைவருக்கும் ருசிகரமான விஷயம் பிரஸாத மகிமைதான்.

வேறு விஷயங்களுக்குப் போகும்



அரட்டைக்கு



போது, நமக்குள் ருசி மாறுவதைக் காண்கிறோம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விஷயத்தில் ருசி. சுப்பண்ணாவுக்கு அரசியல் சமாசாரங்களைப் பற்றிப் பேசுவதென்றால் பிடிக்கும். "என்ன ஸார்! இன்று பத்திரிகையில் விட்டல்பாய் படேல் என்ன போடு போட்டிருக்கிறார் பார்த்தீர்களா?" என்று கேட்பதற்காக, அவர் சுப்பண்ணாவைத் தேடிக்கொண்டு செல்கிறார். சுப்பண்ணாவுக்கோ அவரைக் கண்டதும் பரம சந்தோஷம். "ஆமாம், மிஸ்டர் சுப்பண்ணா! இந்த சாஸ்திரியும், சாப்ருவும் வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கக்கூடாதோ? ஏன் இப்படி உளறு உளறு என்று உளறிக் கொட்டுகிறார்கள்?" என்பதாக ஆரம்பித்து விடுகிறார். இவ்விருவரும் பேச்சில் புகுந்துவிட்டால், வாயில் ஈ புகுவது தெரிவதில்லை.

ரங்கசாமிக்கு இலக்கியங்களில் பிரேமை. பொன்னுசாமிக்கும் அப்படியே. இருவரும் சந்தித்து விட்டால் போதும்; கம்பனுடைய பாட்டில் ஓர் அடியில் ஒரு சொல்லின் சுவையைப் பற்றிப் பேசத் தொடங்குவார்கள். அவ்வளவுதான்; புயல், பூகம்பம் இரண்டும் சேர்ந்தால்கூட அவர்களை அந்தப் பேச்சிலிருந்து வேறு விஷயத்துக்குத் திருப்ப முடியாது.

கிரிக்கெட் அபிமானிகள், ரஞ்சி, நாயுடு, படோடி முதலிய திருநாமங்களையும், சினிமா பிரேமிகள் சார்லி, நெவாரோ, ஃபேர்பாங்ஸ் பிக்போர்டு, கோஹர் முதலிய பெயர்களையும் ஜபம் செய்து கொண்டிருப்பார்கள்.

இந்தக் கோஷ்டிகளில், அவரவர்களும் தத்தமக்குரியதைத் தேர்ந்துகொள்ள வேண்டும். இடமில்லாத இடத்துக்குப் போய்ச் சேர்ந்தால் ஆபத்துதான். உதாரணமாக, நீங்கள் இலக்கிய கோஷ்டியைச் சேர்ந்தவரென்று வைத்துக் கொள்வோம். கலிங்கத்து பரணியின் கவிதை இன்பத்தில் நீங்கள் கழுத்து வரை இறங்கி நீந்திக் கொண்டிருக்கும் போது, திடீரென்று ஒருவர், "ஏன், ஸார்! மலையாளத்திலே மிளகு என்ன விலை?" என்று கேட்டால் உங்களுக்குக் கோபம் வருமா வராதா?

பேச்சின்பத்தின் முக்கியமான முதல் விதியை இப்போது அறிந்துகொண்டு விட்டீர்கள். மற்ற விதிகளை இன்னொரு சமயம் பார்த்துக்கொள்ளலாம். என் விதிகளின் உதவியில்லாமலே பேச்சின்பத்தை நீங்கள் அநுபவிப்பதாயிருந்தாலும், எனக்குச் சம்மதந்தான்.

- **'அதிர்ஷ்ட கவசம்' நூலிலிருந்து...**
வானதி பதிப்பகம்

உண்டோ அடைக்கும்தாழ்...?

நாட்டில் வாய்ச்சொல் வீரர்கள் நிறையப் பேர் உண்டு. ஆனால், வெறும் பிரசங்கத்தால் மட்டுமே ஒருவர் சொல்லும் கருத்துகளை மக்கள் ஏற்றுக்கொண்டுவிட மாட்டார்கள். தத்துவங்களுக்கு ஏற்ப வாழ்ந்து காட்டுவதன் மூலமே, ஒருவரது கருத்துகளுக்குச் சமூதாயத்தில் செல்வாக்கு ஏற்படும். பேசி வீணாக்கும் நேரத்தில், பேசுவதைச் செயலில் கொண்டு வரலாம்.

உலகில் உள்ள சாதாரணமான மனிதர்கள், சமூகத்தில் புகழ் பெற்ற மனிதர்களைப் பின்பற்றி நடக்கிறார்கள். அதனால், உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களும், சமூகத்தில் அந்தஸ்து மிகுந்தவர்களும் எப்போதும், பிறருக்கு நல்ல முன் உதாரணமாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

மந்திரி காட்டிய வழி!

ஒரு மந்திரி, தன் நாட்டில் உள்ள ஒரு கிராமத்துக்குப் போனார். அந்தக் கிராமத்தின் தலைவரது வீட்டில் சிறப்பு விருந்தினராகத் தங்கினார். மாலையில் அந்த ஊரைச் சுற்றிப் பார்வையிட்டார். ஊரின் தெருக்களிலும் நாற்சந்திகளிலும் குப்பை கூளங்கள் குன்றுபோல் குவிந்திருந்தன. தெருவெங்கும் சாக்கடைகளில் அசுத்த நீர் ஓடிக்கொண்டிருந்தது. எங்குத் திரும்பினாலும் துர்நாற்றம்!

"ஏன் இந்த ஊர் இவ்வளவு அசுத்தமாக இருக்கிறது?" என்று மந்திரி, அந்தக் கிராமத்துத் தலைவரைக் கேட்டார். அதற்கு அந்தக் கிராமத்தின் தலைவர், "இங்குள்ள மக்கள் நாகரிகம் இல்லாதவர்கள். சுற்றுப்புறம் தூய்மையாக இருக்க வேண்டும் என்று எவ்வளவு வலியுறுத்திச் சொன்னாலும், அவர்கள் காதில் அது ஏறுவதே இல்லை. இந்தச் சோம்பேறிகளுக்குச் சுத்தம் குறித்துப் பாடம் நடத்தி எனக்குப் போதும், போதும் என்றாகிவிட்டது" என்று விளக்கம் அளித்தார். மந்திரி ஒன்றும் பேசவில்லை. இரவு சாப்பாட்டை முடித்துவிட்டு உறங்கச் சென்றுவிட்டார்.

அன்பெனும் மழையிலே...

மறுநாள் அதிகாலை கிராமத்தலைவர் எழுந்தபோது, வேலைக்காரர், "ஐயா! மந்திரியைக் காணவில்லை. வீடு முழுக்கத் தேடிப் பார்த்து விட்டோம்" என்றார். உடனே கிராமத் தலைவர், ஆட்களை அனுப்பி மற்ற இடங்களில் தேடிப் பார்க்கும்படிச் சொன்னார். கொஞ்ச நேரம் கழித்து மந்திரி ஒரு நாற்சந்தியில் குப்பை கூளங்களைக் கூட்டிக் குவித்து வைத்து எரித்துக்கொண்டு இருப்பதாகத் தகவல் வந்தது. கிராமத்தின் தலைவர்

உடனே அங்கு விரைந்தார்.

மந்திரி நாற்சந்தியில் குப்பைகளைக் கூட்டி வைத்து நெருப்பு வைத்து எரித்துக் கொண்டிருந்ததைக் கண்டார். மந்திரி குப்பை கூட்டுவதைப் பார்த்துக்கொண்டு கிராமத்துத் தலைவரால் சும்மா இருக்க முடியுமா? கிராமத் தலைவரும் மந்திரியுடன் சேர்ந்து குப்பையைக் கூட்ட ஆரம்பித்தார். அங்கே கூடி இருந்த மக்கள், நாட்டின் மந்திரியும், கிராமத்தின் தலைவரும் தெருவில் இறங்கி குப்பையைக் கூட்டுவதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். அவர்களுடன் ஊர் மக்களும் சேர்ந்து ஊரைச்

16



மாதா அமிர்தானந்தமயி

சுத்தம் செய்ய ஆரம்பித்தனர். சாக்கடைகள் சுத்தமாயின; துர்நாற்றம் அகன்றது. தெருக்களிலிருந்து குப்பைகள் மறைந்தன; ஊர் சுத்தமானது. அடுத்த சில நாட்களில் மந்திரி காட்டிய வழியில் அந்த ஊரே அடியோடு மாறிவிட்டது. மற்ற ஊர்களுக்கு ஒரு மாதிரி கிராமம் ஆனது.

மந்திரி ஒருவர், தெருவில் இறங்கி வேலை செய்ய ஆரம்பித்தவுடன், அதுவரை குறை சொல்வதையே வழக்கமாகக் கொண்டிருந்த கிராமத்தின்

தலைவரும் வேலை செய்யத் தயங்கவில்லை. மந்திரியும், கிராமத் தலைவரும் வேலை செய்வதைக் கண்டபோது, நேற்று வரை தெருவில் கிடந்த குப்பையை அகற்றுவதில் சிரத்தை காட்டாமல், நமக்கென்ன என்று இருந்த கிராம மக்களும் தெருவில் இறங்கி வேலை செய்ய முன்வந்தனர். இது எத்தகைய மன மாற்றம்!

ஊர் அசுத்தமாக இருப்பதைக் கண்ட மந்திரி, ஊர்த் தலைவரைக் கண்டித்துவிட்டு, இத்தனை நாட்களுக்குள் ஊரைச் சுத்தமாக்கி விட வேண்டும் என்று உத்தரவு போட்டு விட்டுப் புறப்பட்டுப் போயிருக்கலாம். அல்லது, ஊரில் ஒரு பொதுக்கூட்டம் போட்டு, தூய்மையின் மேன்மை பற்றி உபதேசம் செய்து விட்டுப் போயிருக்கலாம். ஆனால், அந்த மந்திரி அப்படிச் செய்யவில்லை. மாறாக, தானே களமிறங்கி, முன்னுதாரணமாகச் செய்து காட்டினார். அந்தச் செயல்தான் ஊர் மக்களிடையே மனமாற்றம் வருவதற்கு முக்கிய காரணம் என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

குழந்தைகளே! பிறரிடம் சொல்லி அவர்களைச் செய்ய வைக்க முயற்சி செய்யும் நேரத்தில், நாம் முன் வந்து வேலை செய்து முன் மாதிரியாக இருக்க வேண்டும். பிறர் வேலை செய்கிறார்களா என்று பார்த்துக் கொண்டிருக்காமல் நாம் முன்னின்று வேலை செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். அப்போது நம்மை முன் உதாரணமாகக் கொண்டு, நமக்கு உதவுவதற்குப் பலரும் முன் வருவார்கள்.

அப்படியில்லாமல், குற்றம் குறைகளைக் கூறிக் கொண்டே இருந்தால், நம்முடைய மனம் மட்டுமின்றி, மற்றவர்களுடைய மனங்களும் அசுத்தமாகும். அதனால் எந்தவிதமான நற்பலனும் விளையப் போவது இல்லை. எனவே குழந்தைகளே! நாட்டுக்குத் தேவை சொல் அன்று; செயல்தான். அதன் மூலம் மட்டுமே மாற்றங்கள் சாத்தியம்.

(அன்பு பெருகும்)

அம்மா!



அம்மாவின் அன்பாலும், கருணையாலும் ஈர்க்கப்பட்ட சில பிரம்மச்சாரிகள், அம்மாவின் சீடர்களாகி அம்மாவுடனேயே தங்கினார்கள். மிகவும் வசதிகள் குறைந்த அந்தச் சூழ்நிலையை அவர்கள் யாரும் பொருட்படுத்தவில்லை. பாய், தலையணை இன்றி வெறுந்தரையில் படுத்து உறங்கினார்கள். கிடைத்த உணவைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர். வெளியூர்களுக்குப் போகிறபோது பஸ் கட்டணத்துக்கு வழியில்லாமல் நடந்தே சென்று வந்தனர்.

ஒரு பிரம்மச்சாரியின் ஒரே உடையும் மிகவும் பழையதாகிக் கிழியும் நிலையில் இருந்தது. அதனால் அவர் மிகவும் வருத்தமாக இருந்தார். அம்மா, 'மகனே! இது போன்ற அற்ப விஷயங்களுக்காக நீ வருத்தப்படக்கூடாது. நீ இறைவனிடம் சரணாகதி அடைந்துவிடு. அவர் உன்னைப் பார்த்துக் கொள்வார். உனக்கு என்ன தேவையோ அதனை அளிப்பார்' என்று ஆறுதல் கூறினார் அம்மா.

மறுநாள், ஆசிரமத்துக்கு வந்த ஒரு பக்தர், அம்மாவின் பாதங்களில் ஒரு சிறு மூட்டையைச் சமர்ப்பித்தார். அதனுள்ளே பிரம்மச்சாரிகளுக்கான புதிய வேட்டி, துண்டுகள் இருந்தன.

- மௌலி

அஹங்காரம் வேண்டாம்!

அருள்வாக்கு

காருண்யம் - கருணை காட்டுவது - என்றால் இப்படிக் கருணை காட்டுகிறவர் ஒரு படி உயர நிற்கிற மாதிரியும், கருணைக்குப் பாத்திரமாகிறவர் ஒரு படி கீழே நிற்கிற மாதிரியும் தொக்கி நிற்கிறது.



"நாம் உசந்த ஸ்தானத்தில் இருக்கிறோம். நம் உதவியைப் பெறுகிறவர் நம்மை விடத் தாழ்த்தியாக இருக்கிறார். நாம் 'கருணை' காட்டுகிறோம்" என்று நினைக்கிறபோதே நாம் செய்கிற உபகாரம் அசுத்தமாகிவிடுகிறது. உபகாரம் செய்வதன் பயனாக நமக்கு எளிமை, அடக்கம், அஹங்கார நீக்கம் ஆகியன உண்டாக வேண்டும். மாறாக, நாம் உபகாரம் பண்ணும்போது போனால் போகிறது என்று யாருக்கோ கருணை காட்டுகிற மாதிரி நினைத்தோமானால், இது ஆணவ அஹங்காரங்களுக்கு இடமாகி விடுகிறது. உபகாரத்தால் நம் ஆத்மாவை உயர்த்திக் கொள்வதற்கு நேர்மாறாக ஆத்மஹானியே உண்டாகி விடும்.

கருணை, காருண்யம் என்கிற வார்த்தையைச் சொல்வதைவிட அன்பு என்று சொல்லிவிட்டால் இந்த ஏற்றத் தாழ்வு தொனிக்காமல் இருக்கும். அன்பு என்பது நம்மவர்களிடமே நாம் ஸ்வபாவமாகச் செய்கிற காரியம். இதிலே போனால் போகிறதென்று யாரோ அந்நியருக்கு இரக்கம் காட்டுகிற மாதிரியான அஹங்கார எண்ணம் இல்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

புன்னகை மன்னன்!



''வெரிகுட், சரியான நேரத்துக்கு பேஷண்டைக் கிளினிக்குக் கொண்டு வந்துட்டீங்க.''

''டாக்டர், கொஞ்சம் லேட்டாகி இருந்தால்..''

''இதையே கொஞ்சம் லேட்டா சொல்லியிருப்பேன்.''

- பா.விஜயசாரதி



''என்ன மன்னா இது கூடை நிறைய குப்பையைத் தருகிறீர்கள்''

''என் பாடலின் தரத்திற்கேற்ப பரிசு தாருங்கள் என்று நீர்தானே புலவரே சொன்னீர்!''

- ஜோசப் காமராஜ்



''தளபதியாரே... காலாட் படையை கிழக்குல நிறுத்து. யானைப் படையை மேற்கிலே நிறுத்து. குதிரைப் படையை வடக்கிலே நிறுத்து. நிறுத்திவிட்டு ஒரு விசில் கொடு...''

''உடனே நீங்கள் போருக்கு வருவீர்களா மன்னா?''

''இல்ல...தெற்கிலே ஓடிப் போயிடுவேன்.''

-பி.ஜோதிரஞ்சன்



''முடில இளநரை விழுந்துச்சுனு வந்த பேஷண்டை, டாக்டர் எதுக்கு விரட்டி விட்டுட்டாரு?''


''விளையாடாதீங்க. வந்த வருக்கு 65 வயது ஆகுது.''

- சென்னிமலை செந்தில்குமார்


க்ரிஷ்
அசத்தல் போஸ்டர்
+
பரிசுப் போட்டி
சூப்பர்மேன்
பூமராங் பூதம்
- அதிசய சிறுகதை
முதல் பரிசுக் கதை
1000/-ரூபாய் பரிசுப் போட்டி
படக்கதைகள், புதிர்கள், விளையாட்டு, இன்னும் பல...
கோகுலம்
குழந்தைகளின் குதூகலம்!
ஆகஸ்ட் 2006 ரூ.6/- மட்டுமே

சவுதி to அரியகுளம்

"ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து குறைந்தது பதினைந்து லட்ச ரூபாய் வரை லாபம்!"



பேரீச்சை என்றாலே பாலைவனப் பயிர் என்றுதான் இதுவரையில் நாம் எல்லோரும் அறிந்திருப்போம். சோலை வனத்திலும் அதனை வளர்த்தெடுக்கலாம் என்று நிரூபித்திருக்கின்றனர், தமிழக விவசாயிகள். அவர்களில் முன்னிலையில் இருப்பவர், தர்மபுரி நிஜாமுதீன். அரபு நாடுகளுக்கு வேலை தேடிச் சென்ற இந்திய இளைஞர்களில் இவரும் ஒருவர். சவுதி அரேபியாவில் ஒரு ரிக் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தவர், இரண்டு மாதத்தில் அதனைவிட்டு வெளியே வந்தார். வெளியேறியவரை விவசாயப் பண்ணை ஒன்று நிழல் தந்து ஆதரித்தது. பேரீச்சையும், ஆரஞ்சுப் பழமும் அங்கு விளைந்தன. 'இங்கே மட்டும்தான் பேரீச்சை விளையுமா? நம்மூரிலும் முயற்சி செய்து பார்க்கலாமே' என நினைத்தார். சவுதியிலிருந்து ஒரு தடவை தர்மபுரிக்கு வந்தபோது, கொஞ்சமாக பேரீச்சம் கொட்டைகளைக் கொண்டு வந்திருக்கிறார். தர்மபுரி அருகே அரியகுளம் கிராமத்தில் அவரது தரிசுக் காட்டில் அவற்றை ஏதோ 'விளையாட்டாக' விதைத்துவிட்டு, விடுமுறை முடிந்து விமானம் ஏறிப் போனார் நிஜாமுதீன்.

ஏழு ஆண்டுகள் கழித்து, சொந்த மண்ணுக்குத் திரும்பி வந்து பார்த்தவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அரேபியப் பாலைவனங்களையும் கடந்து எல்லை மீறிய ஆனந்தம். என்ன ஆச்சர்யம்! அவை அத்தனையும் வளர்ந்து மரமாகி, பேரீச்சை பழுத்து ஒவ்வொரு மரங்களிலும் குலை குலையாகத் தொங்கிக் கொண்டிருந்தன. பிறகு, ஏன் அவர் சவுதிக்குப் போகிறார்? சொந்த மண்ணிலேயே நன்றாகச் சம்பாதிக்கத் துவங்கிவிட்டார். "தமிழ்நாட்டில் தற்போது ஆயிரம் ஏக்கரில் பேரீச்சை சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதுகுறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருபவர் திருச்சி வேளாண் அதிகாரி அக்ரி. நாசர்!" எனக் குறிப்பிடுகிறார் நிஜாமுதீன்.

திருச்சியில் அக்ரி. நாசர் அவர்களைச் சந்தித்தோம்.

"**இ**ந்த மரம் தொடர்ந்து வறட்சியைத் தாங்கும் என்றாலும், ஈரம் இருந்

நால் மிக அதிக மகசூலை அள்ளித்தரும் தன்மை படைத்தது.

அஜ்வா, மக்தூரமியான், மஸ்கட், சுக்ரி போன்ற ரக பேரீச்சை மரக் கன்றுகள் தமிழ்நாட்டில் நடப்பட்டுள்ளன. விதைக்கன்று, பக்கக் கன்று மற்றும் திசு வளர்ப்புக்கன்று போன்ற வகைகளில் இவற்றைப் பயிரிடலாம்.



• அக்ரி. நாசர்

இரண்டு பேரீச்சை மரக்கன்றுகளுக்கிடையே குறைந்தபட்சம் இருபது அடி தூரம் இடைவெளி இருக்க வேண்டும். ஒரு ஏக்கரில் சுமார் நூற்றுப்பத்துக் கன்றுகளை நடலாம். தொழு உரம் அல்லது மண்புழு உரம் போதுமானது. நட்ட முதல் ஆண்டு, வாரம் 2 முறை தண்ணீர். அதன் பின்னர் மாதம் ஒரு முறை. சொட்டுநீர்ப் பாசனம் சாலச் சிறந்தது.

தென்னையை நட்டவர்களுக்கு மூன்று தலைமுறைகளுக்குப் பஞ்சமே கிடையாது. பேரீச்சையைப் பயிரிட்டவர்களுக்கு ஐந்து தலைமுறைகளுக்கு வறுமை வராது. ஆம், பேரீச்சை மரங்களின் குறைந்தபட்ச ஆயுள் நூற்று ஐம்பது ஆண்டுகள்.

உலக நாடுகளிலிருந்து ஏற்றுமதி ஆகும் பேரீச்சையில் ஐம்பது சதவிதம், இந்தியாவில்தான் இறக்குமதி ஆகிறது. ஆண்டொன்றுக்கு சராசரியாக சுமார் இரண்டாயிரம் கோடி ரூபாய்க்கு பேரீச்சையை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறோம் நாம். இனி, நம் தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்ளலாம்.

பாரசீகப் பேரீச்சையின் ருசி, பாரதத்துப் பேரீச்சையில் இருக்கிறதா? அதிலும் வென்றுவிட்டது நம் தமிழக பேரீச்சையின் ருசி.

மிகக் குறைந்த அளவாக ஆண்டுக்கு இருநூறு மி.மீ. மழை பெய்தாலே போதும். அனல் காற்றுதான் பழங்களைப் பழுக்க வைக்கும். தமிழகத்தின் அக்னி வெயில் நமக்கு மிகவும் சாதகமானது. அதற்கேற்றாற்போல மே, ஜூன் மாதங்களில்தான் பேரீச்சை பழமாகிறது.

நல்ல திறனான பழம் ஒரு கிலோ ஐம்பது ரூபாய்வரை போகும். வருடம் ஒன்றுக்கு, ஒரு மரத்திலிருந்து பத்தாயிரம் ரூபாயிலிருந்து பதினைந்தாயிரம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு நூற்றுப் பத்து மரங்கள் என்றால், ஆண்டொன்றுக்கு ஒரு ஏக்கர் நிலத்தில் குறைந்தது பத்து லட்சம் ரூபாயிலிருந்து பதினைந்து லட்ச ரூபாய் வரை வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது!'' என்று பேரீச்சம் பழங்களைக் காட்டிலும் இனிப்பான தகவல்களைத் தருகிறார் திருச்சி வேளாண் அதிகாரி அக்ரி. நாசர்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

அழைக்குது

இது நர்ஸ்களுக்குப் பொற்காலம். ஆம், அவர்களை ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்கிறது அமெரிக்கா. அங்கு சுமார் ஒன்றரை லட்சம் நர்ஸ்களுக்கு வேலைவாய்ப்பு காத்திருக்கிறது. போகப் போக இந்தத் தேவை மேலும் அதிகரிக்குமாம்.

இதனால் அமெரிக்க நாடாளுமன்றத்தில் சமீபத்தில் ஒரு மசோதாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதன்படி வெளிநாடுகளிலிருந்து அனுமதிக்கப்படும் செவிலியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய நர்ஸ்களில் பலரும் தங்களைத் தயார் செய்துகொண்டு வருகிறார்கள். முக்கியமாக கேரளாவில். இப்போது தமிழகத்திலும்.

திடீரென்று அங்கே இவ்வளவு நர்ஸ்கள் ஏன் தேவைப்படுகிறார்கள்? பல காரணங்கள். இவ்வளவு நோயாளிகளுக்கு ஒரு நர்ஸ் என்று இருக்கும் விகிதம் மேலும் குறைந்து வருகிறது. (இப்போது மூன்று பேருக்கு ஒரு நர்ஸாம்) தங்களுக்கு சிறப்பான சேவை தேவை என எண்ணுகிற நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. முதியவர்கள் அங்கு அதிகமாகி வருவதும் ஒரு காரணம். தவிர அமெரிக்காவில் இளம்பெண்கள் நர்ஸாகப் பணிபுரியத் தயக்கம் காட்டுகிறார்கள்.

அதனால்தான் பல சிறப்புச் சலுகைள் கொடுத்து வரவழைக்கிறார்கள். உடனடி விசா மற்றும் கணவன், இரண்டு குழந்தைகள் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கும் அமெரிக்க வாசத்திற்கு அனுமதி.

முன்பு வளைகுடா நாடுகளுக்குத்தான் நர்ஸ்கள் இந்தியாவிலிருந்து சென்றுகொண்டிருந்தார்கள். இப்போது அமெரிக்காவுக்கு.

பள்ளியிறுதிப் படிப்பு, அதற்குப் பின் மூன்றரை வருட நர்ஸிங் டிப்ளமோ அல்லது நான்கு வருட பி.எஸ்.சி. நர்ஸிங் பட்டப் படிப்பு, பிறகு 'நர்ஸிங் கௌன்சில் அண்ட் ரெஜிஸ்டர்' என்ற அமைப்பில் பதிவு. இவை போதும் நம் நாட்டில் நர்ஸாகப் பணியாற்ற. ஆனால், அமெரிக்காவில் நர்ஸாகப் பணிபுரிய இவை மட்டும் போதாது. International English in Training Systems (IELTS) எனப்படும் சரளமான ஆங்கில அறிவுக்கான தேர்வை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும்.

பிறகு Commission of Graduate Foreign Nursing Services என்ற தேர்வு. உலகிலேயே ஐம்பது இடங்களில்தான் இந்தத் தேர்வு நடைபெறுகிறது. நம்நாட்டில் கொச்சினிலும் பெங்களூரிலும்.

இந்தத் தேர்வுகளில் வெற்றிபெற பயிற்சி கொடுக்கும் நிறுவனங்களும் அங்கங்கே முளைக்கத் தொடங்கிவிட்டன. அப்படி சமீபத்தில் சென்னையில் GS3 என்ற நிறுவனம் தொடங்கப்பட்டிருக்கிறது. அதில் நர்ஸிங் பயிற்சியாளராக இருக்கும் க்வென்டோலின் ஜீவன்ராஜ் என்பவரிடம் பயிற்சிகள் குறித்த விவரங்களைக் கேட்டோம். ஸ்டான்லி மருத்துவமனையில் இருந்து அப்போலோ வரை சுமார் முப்பது வருட நர்ஸிங் அனுபவம் கொண்டவர் இவர்.

"IELTS தேர்வுக்கான பயிற்சியை நான்கு பகுதிகளாகப் பிரித்துக் கொள்கிறோம். ஆங்கிலம் பேசுவது, படிப்பது, எழுதுவது, கேட்பது என்று. இந்தத் தேர்வை பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் ஆஸ்திரேலிய நிறுவனமான IDB ஆகியவை நடத்துகின்றன. இது எட்டு வாரகாலப் பயிற்சி.

மற்றொரு தேர்வான CGFNS-க்கும் பயிற்சிக்கு மொத்தம் மூன்று மாதங்கள் தேவைப்படும். மருத்துவம்,- அறுவை

* க்வெண்டோ லின் ஜீவன்ராஜ்





அமெரிக்கா!

சிகிச்சை, குழந்தை சிகிச்சை, பிரசவம், மனவியல் ஆகிய ஐந்து பிரிவுகளில் நாங்கள் முக்கிய கவனம் செலுத்துகிறோம்.

மேலே கூறிய இரண்டு தேர்வுகளை வெற்றிகரமாக முடித்த பிறகு அமெரிக்காவில் உள்ள தேசிய கவுன்சில் அனுமதி தேர்வில் வெற்றி பெற வேண்டும். இது சிரமமானது அல்ல.

இந்த நேர்முகத் தேர்வை அமெரிக்காவுக்குச் சென்று எழுத வேண்டும். ஆனால் தொலைபேசியிலே இந்த நேர்முகத் தேர்வை முடிக்கவும் வழி உண்டு.

பொதுவாக, இருபத்தைந்து வயதில் நர்ஸ்கள் அமெரிக்காவுக்குச் செல்கிறார்கள். என்றாலும் ஐம்பது வயதாக இருந்தாலும் அமெரிக்காவில் தடையில்லை.

ஊதியத்தைத் தவிர வேறு சில கவர்ச்சிகளும் கூட அமெரிக்காவில் உண்டு. நம்மூரில் அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் நர்ஸ்கள் மிகவும் சோதனையான பின்னணியில், குறைவான சுகாதாரச் சூழலில் வேலை செய்ய வேண்டியிருக்கும். பெரும்பாலும் பன்னிரண்டு மணி நேர ஷிப்ட். அமெரிக்காவில் எட்டு மணி நேர வேலைதான். அதற்கு மேல் வேலை செய்தால் இரு மடங்கு ஓவர்டைம் கிடைக்கிறது. அங்கு வேலையில் சேரும் நர்ஸுக்குக் குடும்ப விசாவையும் அளிக்கிறது அமெரிக்கா. கணவர், இரண்டு குழந்தைகள் இந்த விசாவில் அடங்குவார்கள்.

நாங்கள் வேலை தேடித் தரும் நிறுவனம் அல்ல. ஆனால் அமெரிக்காவில் உள்ள "ப்ருக்வுட்" எனும் பிரபல நிறுவனத்துடன் 'டை அப்' வைத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் உரிய வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவார்கள்" என்றார் க்வென்டோலின்.

அமெரிக்காவின் இந்த 'தாராளமயமாக்கல்' பிலிப்பைன்ஸை மிக அதிக அளவில் பாதிக்கக் கூடும். பல்லாயிரக்கணக்கான பிலிப்பைன்ஸ் நர்ஸ்கள் ஏற்கெனவே அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் பிலிப்பைன்ஸில் உள்ள பல டாக்டர்கள், ஊதியம் போதாமல அமெரிக்காவில் நர்ஸ்களாகப் பணிபுரியச் சென்றுவிட்டார்கள்.

ஏற்கெனவே அமெரிக்காவில் உள்ள நர்ஸ்கள் கூட்டமைப்பு (சுமார் 1,55,000 அமெரிக்க நர்ஸ்களை உறுப்பினர்களாகக் கொண்டது.) அமெரிக்க அரசின் இந்தத் தாராளமயமாக்கலை எதிர்த்திருக்கிறது.

- ஜி.எஸ்.எஸ்.

எல்லோரும் சாமிதான்!

“எனக்குக் கடவுள் பக்தி அதிகம். சிறு வயதில் தவறாமல் கோயிலுக்குச் செல்வேன். அப்போது என் அப்பா சொல்வார், கோயிலில் மட்டும் சாமி இல்லைம்மா, வெளியே இருக்கிற மனிதர்கள் எல்லோருமே சாமிதான்'னு. அவருடைய அந்த வார்த்தைகள் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன. இப்போதும் நான மக்களுக்குச் செய்யும் சேவையை இறைவனுக்குச் செய்யும் சேவையாகவே



• அறம் விருதளிப்பு விழாவில்...

கருதுகிறேன்'' என்றார் திண்டுக்கல் காந்தி கிராம அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் ஏ.கௌசல்யா தேவி.

ஸ்ரீராம் இலக்கியக் கழகம் கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த 'அறம்' விருதையும் ஒரு லட்சம் ரூபாய் தொகையையும் வழங்கி வருகிறது. விழாவில் பேசிய ஸ்ரீராம் குழுமத்தின் தலைவர் ஆர்.தியாகராஜன் “திருக்குறளை மக்கள் மத்தியில் பரப்புபவர்களுக்கு பல்வேறு விருதுகள் வழங்கப்படுகின்றன. அந்தத் திருக்குறளின் கருத்துகளையே வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்பவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தால் என்ன என்று தோன்றியது. அதன் விளைவுதான் இந்த அறம் விருதளிப்பு என்று தெரிவித்தார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பரிசினை அளித்த தமிழ்நாடு அரசின் நிதியமைச்சர் க.அன்பழகன் “இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே மனிதனைப் பற்றி பேசிய நூல் திருக்குறள். மனிதன் வாழ வேண்டிய நெறிமுறைகளைச் சொன்னது. அதன்படி வாழ்ந்து மக்களுக்கு சேவை செய்து வரும் கௌசல்யா தேவி பாராட்டப்பட வேண்டியவர்'' என்றார்.

இந்த காந்தி கிராம அறக்கட்டளை 1947-ல் சவுந்தர்யம் ராமச்சந்திரன் என்பவரால் காந்தியின் ஆசியுடன் தொடங்கப்பட்டது. இதில் உள்ள கஸ்தூரிபா மருத்துவமனைக்கு தமிழ்நாடு அரசின் மருத்துவப் பிரதிநிதியாகப் பணியாற்ற வந்த டாக்டர் கௌசல்யாதேவி, மக்கள் சேவையில் ஈடுபாடு கொண்டு தனது அரசுப் பணியி விருந்து விருப்ப ஓய்வு பெற்று அங்கேயே தங்கி சேவை புரியத் தொடங்கி விட்டார்.

விருதினைப் பெற்றுப் பேசிய கௌசல்யா தேவி, ''சவுந்தர்யம் அம்மா எனக்குச் சொன்ன அறிவுரைகளில் ஒன்று- மக்களுக்கு என்ன தேவை என்பதை தெரிந்துகொண்டு சேவை புரிய வேண்டும்; அப்போதுதான் அந்தச் சேவை முழுமை பெறும் என்பது. அதனால் வருடத்தில் பதினொரு மாதங்கள் மருத்துவமனையில் இருந்தால், ஒரு மாதம் கிராமங்களுக்குச் சென்று மக்களுடன் தங்கி அவர்களின் தேவைகள், குறைகள் என்னென்ன என்று அறிந்து கொள்கிறேன். கிராம மக்களின் கல்வி, ஆரோக்கியம் வளர காந்தி கிராம அறக்கட்டளையின் சேவை தொடரும்'' என்றார்.

''விழாவில் திருக்குறள் பேச்சுப் போட்டியில் வென்ற மாணவ, மாணவிருக்கும் பரிசு வழங்கப்பட்டது.

- யுவராஜ்

பரிமாற்றம்



ரொம்ப மகிழ்ச்சி
உணவுக் கடைக்கார
குழந்தைக்கு

இரண்டு நிமிட
மூச்சுக் காற்றைப்
பிடித்து வைத்திருந்த
ஒற்றை வண்ண பலூனை
வாங்கிக் கொண்டதால்

எல்லா மூச்சையும்
விற்று வாங்கிய
உணவுப் பொட்டலத்துடன்
வீடு சென்றதால்
ரொம்பவும் மகிழ்ச்சி
பலூன்காரர் குழந்தைக்கு!

சகா


'சீனிகம்' - இதுதான் அந்தப் படத்தின் பெயர். அமிதாப் - தபு நடிக்கும் இந்திப் படம். டைரக்ஷன் பால்கி, ஒளிப்பதிவு - நம்மூர் பி.சி.ஸ்ரீராம்.

"எது மாதிரியும் இல்லாத புது மாதிரியான அனுபவம் இது" என்கிறார் பி.சி. அடுத்து அமீர்கான் படம் பண்ணவிருக்கிறாராம். 'டைரக்ஷன் பண்ணி நீண்ட நாட்களாயிற்றே...' என்றால்,

"உடல், பொருள், ஆவி எல்லாமே எனக்கு ஒளிப்பதிவுதான். டைரக்ஷன் என்பது எனது ஆசை. அந்த ஆசை வரும்போது கண்டிப்பாக டைரக்ட் செய்வேன். இரண்டாயிரத்துப் பத்தில்தான் மறுபடி டைரக்ட் செய்ய வேண்டும் என்னும் ஆசை உள்ளது. தற்போது அதைப்பற்றிச் சிந்திக்கக்கூட நேரமில்லை" என்கிறார்.



"எனக்கு சிஷ்யர்கள்



"அவர் பர்ஃபெக்ட் ஜென்டில்மேன்!"

தமிழ் சினிமாவில் சிறந்த ஒளிப்பதிவாளர்களை உருவாக்கிய பெருமை பி.சி.க்கு உண்டு. ஆனால் அந்த எண்ணம் துளியும் அவரிடம் இல்லை.

"எனக்கு சிஷ்யர்கள் என்று யாரும் இல்லை. என்னோடு பணிபுரிந்த அனைவரும் எனது நண்பர்களே. அவர்கள் என்னிடம் வரும்போதே நல்ல தொழில்நுட்ப அறிவோடுதான் வந்தார்கள். வந்து அதை மேலும் மெருகேற்றிக்கொண்டு இன்று சிறந்து விளங்குகிறார்கள். இதில் எனது பங்கென்று


எதுவுமில்லை.'

'அமிதாப்?'

"அவர் ஒரு பாஃபெக்ட ஜென்டில்மேன். படப்பிடிப்புக்கு நேரத்துக்கு வந்துவிடுவார். அவரிருக்கும் இடம் எப்போதும் கலகலப்பாக இருக்கும். எனக்கு அவரைப் பார்க்கும்போதெல்லாம் சிவாஜி சாரின் ஞாபகம்தான் வரும்."

'மணிரத்னத்திடம் ஆசை தீர பணிபுரிந்தீர்கள். ஏன் ஷங்கருடன் இயங்கவில்லை?' என்றால், மெலிதாகச் சிரிக்கிறார்.

"இந்தியன் படத்துக்கு என்னைத்தான் அழைத்தார்.



யாரும் இல்லை!"

ஆனால், அப்போது வேறு ஒரு படம் கமிட்மெண்டில் இருந்தால் என்னால் செய்ய முடியவில்லை. மற்றபடி பணிபுரியக் கூடாதென்கிற எண்ணமில்லை. நேரம் வரும்போது நாங்கள் இணையத்தான் போகிறோம்."

"மறக்க முடியாத அனுபவம் ஏதேனும் உண்டா?" என்றால், நீண்ட நேரம் யோசனையில் ஆழ்ந்துவிட்டுத் தீர்க்கமாகப் பேசுகிறார்.

"நான், எனது மனைவி மற்றும் நண்பர்கள் மதுரை திருக்கழுங்கன்னூர் கோயிலுக்கு ஒரு திருமணத்துக்காகச் சென்றிருந்தோம். திருமணம் நடக்கப் போகிற நேரத்தில், வரவேண்டிய புகைப்படக் கலைஞர் வரவில்லை. நான் எப்போதும் கையில் கேமராவோடுதான் இருப்பேன். நான் யாரென்று அவர்களுக்குத் தெரியாத நிலையில், கையில் கேமரா இருப்பதைப் பார்த்து என்னை போட்டோ எடுக்கச் சொல்லிப் பணிவாகக் கேட்டுக் கொண்டார்கள். சந்தோஷமாக அந்தப் பணியைச் செய்து முடித்தேன்."

'சமீபகால ஒளிப்பதிவில் தாங்கள் மிகவும் ரசித்தது?'

"எல்லோருமே சிறப்பாகத்தான் செய்கிறார்கள். ஆனால் 'காதல்' படத்தின் ஒளிப்பதிவை நான் மிகமிக இரசித்தேன். ஒளிப்பதிவாளர் யார் என்பதைவிட அந்த ஒளிப்பதிவில் உண்மை இருந்தது என்னை மிகவும் நேசிக்க வைத்தது."

'ஒளிப்பதிவாளராக ஆசைப்படுபவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?'

"கலை ஆர்வம் மட்டும் இருந்தால் போதாது. விஞ்ஞான அறிவும் இருக்க வேண்டும். டாக்டருக்கு, இன்ஜினீயருக்குப் படிக்கிற மாதிரிதான் ஒளிப்பதிவும். சிரத்தையோடு இருந்தால்தான் நிலைக்க முடியும்!"

- **ம.மனோன்மனோ**

படம்: **பொள்ளாச்சி சுந்தரம்**

ஆன்மிகத் தமிழ்!

வேணுக்குடி கிருஷ்ணன் ஆன்மிக உபன்யாசம் செய்பவர்களில் சிறப்பானவர். சாதாரணமாக உபன்யாசம் செய்பவர்கள் இடை இடையே ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவார்கள். சிலர் அதை பெருமையாகக் கூட நினைப்பர். ஆனால் சமஸ்கிருதம், தமிழ் தவிர்த்த வேறு எந்த மொழிச் சொல்லும் கலக்கா வண்ணம் கவனமாக உபன்யாசம் செய்பவர் கிருஷ்ணன். சரளமாகப் பேச்சுடன் கலந்துவிட்ட ஆங்கிலச் சொற்களான பெஸ்ட், ஃபர்ஸ்ட், லாண்ட், ரேடியோ, டீ.வி., காபி, டீ ஆகியவற்றைக்கூட தமது உபன்யாசத்தில் நுழைத்துவிடாமல் கவனமாக அவற்றுக்குரிய தமிழ்ச் சொற்களையே பயன்படுத்துகிறார். ஒருவேளை அவருக்கு ஆங்கிலம் தெரியாது என எண்ணலாம்... அப்படியல்ல அவர் ஆங்கிலத்தில் முது நிலைப் பட்டதாரி. ஆடிட்டராகப் பணியாற்றியவர்.

- அ.சம்பத்,
திருவரங்கம்



செய்யுமா அரசு?

அரசின் எல்லா நியாய விலைக் கடைகளிலும் வழங்கப்படும் சர்க்கரை, அரிசி, கோதுமை போன்றவை எடை குறைவாகவே வழங்கப்படுகின்றன. இதற்குக் காரணம் பயன்படுத்தப்படும் சமநிலைத் தராசில் செய்யப்படும் வித விதமான தகிடுதத்தங்கள். இதைத் தவிர்க்க அரசு எல்லா கடைகளிலும் மின்னணு தராசுகள் பயன்படுத்த உத்தரவிட வேண்டும். ஒரு நபருக்கு 450 கிராம், இரு நபர்களுக்கு 900 கிராம் என்ற அளவில் சர்க்கரையை முன்பே பாக்கிங் செய்து வழங்கலாம். அப்படி வழங்கும்போது வாங்குபவர்களே மின்னணு தராசில் எடை போட்டு சரி பார்த்துக் கொள்ளும்படியும் செய்தால் முறைகேடுகளைத் தவிர்க்கலாமே?

- க. இராமகார்த்திகேயன், இராணிப்பேட்டை

இது எங்க பக்கம்!

முயற்சி!

மதுரை நாகமலை புதுக்கோட்டை ஆதம் நினைவுப்பள்ளி நோட்டீஸ் போர்டில் நான் கண்டு ரசித்த வாசகம்:

'முயற்சிகள் தவறலாம். ஆனால் முயற்சி செய்யத் தவறக்கூடாது.'

- எஸ். கௌரி மீனாட்சி, மதுரை - 19

புத்திரேகை!

எஸ்.சீதாராமன்

ருத்ரன் வீட்டுக்குள் நுழைந்தபோது அவன் அக்கா மகள் நிர்மலா அழுதுகொண்டிருந்தாள்.

பதற்றத்துடன் "ஏன் நிர்மலா அழறே?" என்று கேட்டான்.

"மாமா, அம்மா என்னை அடிச்சுட்டாங்க" என்று கூறி இன்னும் பலமாக அழுதாள்.

"அழாதே, அழாதே. உன்னை மாதிரி புத்திசாலிப் பொண்ணு அழலாமா?" என்று கூறி, சிறுமியின் கண்ணீரைத் துடைத்தான்.

"நீங்க புத்திசாலிப் பொண்ணுன்னு சொல்றீங்க. அம்மா அறிவில்லாத பொண்ணுன்னு அடிக்கிறாங்களே" என்றாள் அழுகையின் ஊடே.

"நீ அறிவில்லாத பொண்ணா? யாரு சொன்னா? ஆமாம், உன்னை எதுக்காக அம்மா அடிச்சாங்க?"

"நான் நல்லா படிக்கலைன்னு அம்மா அடிச்சுட்டாங்க மாமா."

"அப்படியா? உன் கையைக் காட்டு, நீ படிப்பியா இல்லையான்னு பார்த்து சொல்லிடுறேன்"

"கையில் எப்படி மாமா தெரியும்?"



"நான் ரேகை சாஸ்திரம் படிச்சிருக்கேன். நீ நீட்டு கையை."

சிறுமி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கையை நீட்டினாள்.


சிறுமியின் இடக்கையைப் பற்றினான். உள்ளங்கையைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தான்.

"உனக்குப் படிப்பு பிரமாதமா வருமே!"

"வரலையே மாமா. நல்ல மார்க் எடுத்தா அம்மா என்னை அடிக்கமாட்டாங்களே மாமா..."

"கையில் புத்தி ரேகை பிரமாதமா ஓடுதே. நீ பிள்ளையாருக்கு பூ, அருகம்புல் வைத்து நாற்பத்தெட்டு நாள் வணங்கினால் நல்லா படிப்பே. உடனே ஓடிப் போய்க் குளிச்சுட்டு வா. நான் உன்னை பிள்ளையார் கோயிலுக்கு அழைச்சுட்டுப் போயி, 'இந்தக் குழந்தைக்கு ரேகைபடி நல்ல படிப்பைக் கொடு பிள்ளையாரே'ன்னு வேண்டிக்கிறேன். 'நான் நல்லா படிக்கணும் பிள்ளையாரே'ன்னு நீயும் வேண்டிக்க. அப்புறம் பாரு உனக்குத் தன்னால படிப்பில் நாட்டம் வரும். நல்லா படிப்பே. ஓடு, ஓடு. சீக்கிரம் குளிச்சுட்டு வா" என்று

ருத்ரன் சொன்னதும் நிர்மலா சந்தோஷத்துடன் ஓடினாள் குளிக்க. கொஞ்ச தூரத்தில் நின்று கொண்டு நிர்மலாவின் அன்னை ஆச்சர்யத்துடன் இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ●



ஓடாத படம் எப்படி ஓடும்?

கு.ஞானசம்பந்தன்

"தம்பி எனக்கொரு ஆச்சரியம் என்ன தெரியுமா? இந்த 'டபுள் ஆக்ட்' படம் எடுக்கிறாங்க பாருங்க, அது இப்ப ஒண்ணும் பெரிசில்ல. அந்தக் காலத்தில் (அவர் சொல்லும் அந்தக்காலம் 1940, 50ஆம் ஆண்டுகளுக்கு முன்) பி.யூ.சின்னப்பா செய்யாத சாதனை இல்லை, தம்பி. 'உத்தமபுத்திரன்' படத்தில் ரெண்டு பேரா வருவாரு. மங்கையர்க்கரசி படத்தில தாத்தா, அப்பா, மகன் என்று மூணு பேரா வருவாரு. 'ஜெகதலப்பிரதாபன்' படத்தில ஒரே சீன்ல ஆறு பேரா வந்து, பாடி, மிருதங்கம் வாசிச்சு, கொன்னக்கோல் சொல்லி அமர்க்களப்படுத்துவாரு. அதுனாலதான் அவரை 'தவநடிகபூபதி' அப்படின்னு சொல்லுவாங்க...'' என்று முத்துராக்கு சொல்லிக்கொண்டு வந்தார். எவ்வளவு ரசனை உடைய ரசிகப் பெருமக்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள் பாருங்கள். முத்துராக்கு ரசிகர் மட்டுமல்லர், நல்ல சினிமா விமர்சகரும்கூட.

மணி தொடர்ந்தான், "நீங்க சொன்ன அதே காட்சியத்தான் 'திருவிளையாடல்' படத்தில சிவாஜி ஆறு பேரா இருந்து 'பாட்டும் நானே'ன்னு பாடுற மாதிரி ஏ.பி.நாகராஜன் எடுத்திருப்பாரு.''

''தம்பி, இப்ப இருக்காரு பாருங்க நகைச்சுவை நடிகர் காக்கா ராதாகிருஷ்ணன், அவருக்கு அந்தப் பேரு எப்படி வந்தது தெரியுமா? உண்மையிலேயே அவரு பேரு ராதாகிருஷ்ணன்தான். திருச்சிக்காரரு. சின்னப் பிள்ளையில இருந்து நாடகத்தில நடிச்சுப் பிறகு சினிமாவுக்கு வந்தவரு. கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் குழுவிலதான் ரொம்ப நாளா இருந்தாரு. மங்கையர்க்கரசி படத்தில அரண்மனையில வேலை கிடைக்கணும்னா 'காக்கா பிடிச்சாத்தான் முடியும்'னு என்.எஸ்.கிருஷ்ணனும், டி.ஏ.மதுரமும் பேசிக்கிட்டு இருப்பாங்க. அதைக் கேட்டுக்கிட்டு இருந்த சின்னப் பையனான ராதாகிருஷ்ணன், உண்மையிலேயே அஞ்சாறு காக்காங்களைப் புடிச்சுக்கிட்டு வந்து 'அம்மா, காக்கா புடிச்சுட்டேன்; இனி அரண்மனையில வேலை கிடைச்சிடும்' என்பார். அதுல இருந்து அவருக்குக் காக்கா ராதாகிருஷ்ணன்னு பேர் வந்திருச்சு'' என்று ஒரு பெரிய வரலாற்றுச் செய்தியைச் சொல்லி முடித்தார்.

"தமிழ்த்திரை வரலாற்றில் மிகச் சிறந்த காமெடி நடிகர்கள்ல ஒருத்தர் காக்கா ராதாகிருஷ்ணன்னு அப்பவே சொல்லுவாங்க'' என்று சொன்ன மணி, 'ரம்பையின் காதல்'னு ஒரு பழைய படத்தில நம்ப 'டணால்' தங்கவேலுவும், காக்கா ராதாகிருஷ்ணனும் சேர்ந்து பிச்

சைக்காரங்களா வந்து அப்படி ஒரு கலக்கு கலக்குவாங்க" என்றான்.

'தம்பி அதுல ஒரு சீனை எனக்கு எப்ப நெனச்சாலும் சிரிப்பு வந்திரும். பைத்தியமாயிப்போன தங்கவேலுவும் காக்கா ராதாகிருஷ்ணனும் ஒரு வீட்டுக்குப் பிச்சை கேட்டுப் போயி நிப்பாங்க. 'அம்மா தாயி, இராப்பிச்சை போடுங்கம்மா'ன்னு காக்கா ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டிருப்பார். உள்ள இருந்து 'இதோ வரேம்பா'ன்னு சத்தம் மட்டும் வரும். அப்ப, அந்த வீட்டுச் சொந்தக்காரன் வெளியில இருந்து வந்து, 'ஏய், ஏன் இங்க நிக்கிறீங்க? சோறு போடாதே, நிறுத்து அபி'ன்னு கோபமாச் சத்தம் குடுத்துத் 'தாம்தூம்'னு குதிப்பான். அப்ப காக்கா ராதாகிருஷ்ணன் அமைதியா, "இருய்யா... உனக்கும் போடுவாங்க, வாங்கிக்கோ"ன்னு சொல்லும்போது அப்படி ஒரு சிரிப்புச் சத்தம் தியேட்டர்ல கிளம்பும் பாருங்க" என்றார் முத்துராக்கு.



அந்த முன்னிரவு நேரத்தில் வைகை யாற்றங்கரையில் உட்கார்ந்து ரசித்து ரசித்துப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த நான், காக்கா ராதாகிருஷ்ணன் அவர்களோடு சேர்ந்து ஒரு படத்தில் நடிப்பேன் என்று எங்கள் ஊர் ஏடு சோதிடம் சொல்லியிருந்தால்கூட நம்பியிருக்க மாட்டேன்.

அந்த வாய்ப்புத் தந்து என்னைப் பெருமைப்படுத்தியவர் இயக்குநர் சரண் அவர்கள்தான்.


சரண் அவர்களை நான் முதன் முதலில் மதுரையில்தான் சந்தித்தேன். கவிஞர் வைரமுத்துவும் அவரும் கொடைக்கானல் சென்றுவிட்டு மதுரைக்கு வந்திருந்தார்கள்.

கவிஞர் அவர்கள் எனது நெடு நாளைய நண்பர். நாங்கள் சந்திக்கும்போதெல்லாம் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டேயிருப்போம். சாப்பிடும்போது, பிரயாணம் செய்யும்போது என்று பேச்சுத் தொடர்ந்து கொண்டே இருக்கும். கவிஞர் அவர்கள் என்னை இயக்குநர் சரணிடத்தில் மகிழ்ச்சியுடன் அறிமுகம் செய்து வைத்தார். அப்போது நாங்கள் அதிகம் பேசிக் கொள்ளவில்லை.

ஒருநாள் நான் கல்லூரியில் இருந்த

போது, 'சரண் அவர்கள் மதுரை வந்துள்ளார். உங்களைப் பார்க்க விரும்புகிறார்' என்று நண்பர் நிகில் முருகன் தொலைபேசியில் சொல்ல, மாலையில் நாங்கள் சந்தித்தோம். முதன்முறையாக நான் மதுரையில் சந்தித்த சரண் அவர்களுக்கும் இப்போது சந்திக்கும் சரணுக்கும் இடையில் எவ்வளவு மாற்றம். கூச்ச சுபாவமும் குறைவான பேச்சுமாக அன்றைக்கு அவரைப் பார்த்த ஞாபகம்.

இப்போதோ கலகலப்பான பேச்சும், கனிவான பார்வையுமாக நெடுநாள் பழகிய நண்பரைக் காணும் ஆர்வத்தோடு என்னை அவர் வரவேற்றார். பிறகு தான் இயக்கப்போகும் 'இதயத் திருடன்' படம் குறித்து என்னிடத்தில் பேசத் தொடங்கினார். அப்படத்தில் என்னை நடிக்கச் சொல்லி எனது பாத்திரம் குறித்து விளக்கிச் சொன்னார். குறிப்பாக, முதுபெரும் நடிகர் காக்கா ராதாகிருஷ்ணன் அவர்களும் அந்தப் படத்தில் நடிப்பதாகக் கூறினார். எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது.



"பிச்சை எடுக்கிறியே... உனக்கு வெட்கமா இல்ல?"

"இதிலென்ன சார் வெட்கம்? நம்ம வாழ்க்கை நம்ம கையிலதான் இருக்குன்னு பெரியவங்களே சொல்லியிருக்காங்களே!"

- சாயம்.வெ. ராஜாராமன்

சென்னை அருகே மாமல்லபுரம் சாலையில், கடற்கரை ஓரத்திலுள்ள பங்களா ஒன்றில் படப்பிடிப்பு நடந்தது. காக்கா ராதாகிருஷ்ணன் அவர்கள் முதுமை காரணமாகச் சக்கர நாற்காலியில் வந்து சேர்ந்தார். அவரது கண்களில் குறும்பும், பேச்சில் நகைச்சுவையும் சற்றும் குறையவில்லை. என்னைப் பார்த்தவர் 'ஐயா, நல்லா இருக்கீங்களா?' என்று அன்புடன் என் கைகளைப் பிடித்தபடி பேசத் தொடங்கினார். 'என்.எஸ்.கே. அவர்கள் தான் நடிக்கும் படங்களில் எல்லாம் தானே நகைச்சுவைக் காட்சிகளை எல்லாம் அமைத்துக் கொள்வார் என்று சொல்கிறார்களே' என்று நான் அவரிடம் ஒருநாள் கேட்டேன்.

'ஆமாங்க, அவரோட எப்பவுமே ஒரு குழு இருந்துக்கிட்டு இருக்கும். நான், புளிமூட்டை ராமசாமி, சி.எஸ்.பாண்டியன் கவிராயர், உடுமலை நாராயணசாமி எல்லோரும் இருப்போம். கலைவாணரின் துணைவியார் டி.ஏ.மதுரமும் கூட இருப்பார். பேச்சு, வசனம், பாட்டு எல்லாம் ஒரே நேரத்தில் உருவாக, அதை அப்படியே ஒத்திகை பார்த்துப் படத்தில் கொண்டு வந்திடுவோம். ஓடாத படம் எல்லாம் கலைவாணர் பேருக்காகவும் அவரோட நகைச்சுவைக்காகவும் ஓடியிருக்குன்னா பாத்துக்குங்களேன்!' என்றார் பெருமையோடு.


'ஓடாத படம் எப்படி ஓடும்?' என்று நான் சந்தேகத்தோடு கேட்டேன்.

'நம்ம சிவாஜி நடிச்ச படத்தில் நகைச்சுவைக் காட்சியே இல்லை. படமும் ரிலீசாகி சரியா ஓடலை. உடனே கலைவாணர் பார்த்தார். அந்த முதலாளிகளோடு பேசி, படத்தைத் திரும்ப வாங்கச் சொல்லி, சில நகைச்சுவைக் காட்சிகளைச் சேர்த்து, கவிராயர் உடுமலை நாராயணன்கிட்ட ஒரு பாட்டை வாங்கி 'ஒண்ணுல இருந்து இருபதுவரையில் கொண்டாட்டம்', அப்படீன்னு தானே பாடி, படமாக்கி அந்தப் படத்தோடு சேர்த்து வெளியிட வச்சாரு. படம் நஷ்டமாகாமத் தப்பிச் சிருச்சு' என்றார் சிரித்தபடி.

(ரீல் சுற்றும்)

படம் : புதூர் சரவணன்

"வெள்ளை அடிக்க வந்த இடத்துல ஏன் திருடினே?"
"சுத்தமா அடிச்சிட்டுப் போங்கன்னு அவங்கதான் சாமி சொன்னாங்க!"
- ஜெயந்தி சிவக்குமார்





"என்னால சமைக்க முடியாதுன்னு என் மனைவிகிட்டே சொன்னேன். உடனே கோபம் வந்து டைவர்ஸ் பண்றதா சொல்லிட்டா..."
"அப்போ உன் குடும்ப வாழ்க்கைக்கு நீயே 'உலை' வச்சுட்டேன்னு சொல்லு..."
- கே. ஆனந்தன்

"மிருகங்களோட பரிணாம வளர்ச்சியிலேயே உச்சமான வளர்ச்சி எது?"
"ஒட்டகச்சிவிங்கிதான் சார்"
- ஆர்.எஸ். பிரபு





"உங்ககிட்டே புதுப் புடைவை கேட்டு எத்தனை நாளாச்சு!"
"கணக்கு வெச்சுக்கலையே கமலா!"
- ஞா. ஞானமுத்து

குறையொன்றுமில்லை

ஸ்ரீ மட்டபல்லி மங்களாஷ்டகம்

மட்டபல்லிநிவாஸாய மதுராநந்தரூபிணே
        மஹாயஜ்ஞஸ்வரூபாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம்
க்ருஷ்ணவேணீ தடஸ்தாய ஸர்வாபீஷ்டப்ரதாயிதே
        ப்ரஹ்லாதப்ரியரூபாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம்
கர்தஸ்திதாய தீராய கம்பீராய மஹாத்மநே
        ஸர்வாரிஷ்டவிநாசாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம்
ருக்யஜுஸ்ஸாமரூபாய மந்த்ராரூடாய தீமதே
        ஸ்ருதாநாம் கல்பவ்ருக்ஷாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம்
குஹாஸயாய குஹ்யாய குஹ்யவித்யாஸ்வரூபிணே
        குஹாந்தே விஹாராய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம்
ஸ்ரீபல்யத்ரிமத்யஸ்தாய நிதயே மதுராயச
        ஸுகப்ரதாய தேவாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம்
தாபநீயரஹஸ்யாய தாபத்ரயவிநாசிநே
        நதாநாம் பாரிஜா தாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம்
ராஜ்யலக்ஷ்ம்யா ஸமேதாய ராகத்வேஷவிநாசிநே
        மட்டபல்லி நிவாஸாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம்

(நிறைந்தது)



மீண்டும் பொடா கேட்கிறாரே ஜெ..?

● எம். பாஸ்கர்,
திண்டுக்கல்

? "விடுதலைப்புலிகளை ஆதரிப்பது தி.மு.கவின் தனி அடையாளம்" என்றாரே நாஞ்சில் சம்பத்?

! கோரைப் பல்லுக்குப் பெருமை ட்டுக் கொள்ளலாம் என்றால் இந்த அடையாளத்துக்கும்' பருமை பட்டுக் கொள்ள வண்டியதுதான்.

● எஸ். பாலசந்தர்,
திருவாரூர்

? உணவு அமைச்சர் வலு, ஓர் அரசு உயர் பெண்) அதிகாரியின் 'மூகை விமர்சித்தது பரிய குற்றமா?

! குற்றம் அல்ல. ஆனால் மக்கென்று பண்பாடு ன்று இருக்கிறதல்லவா!

● கோரும் கொடுஞ்சட்டம்!



● எஸ். சக்தி, வி.கே.புரம்

? பெற்றோரைத் தூக்கியெறிந்துவிட்டு தல் கிணற்றில் குழந்தைகள் விழு றார்களே, காரணம் என்ன... பெற் றார் உணர்வை இவர்கள் புரிந்து காள்ளாததா அல்லது பெற்றோருக்கு வர்களை வளர்க்கத் தெரியவில்லையா?

! வளர்ந்துவிட்ட, சுயசிந்தனை உள்ள வர்களுடைய உணர்வைப் பற்றோர் புரிந்துகொள் ாததாலும் இது நிகழ ம். அது சரி, காதல் என் ல் கிணற்றில் விழுகிற ரியம்தானா... என்ன...? ற்றில் ஏறி விண்ணைச் சாடு தாகவும் இருக்கலாமே!

● கங்கா சீதாராமன்,
மேடவாக்கம்

? நிதி நிறுவன மோசடியால் சென்ற சில ஆண்டுகளாக நிலைகுலைந்துள்ள எங்களைப் போன்ற இலட்சக்கணக்கான நடுத்தர வர்க்கத்தினருக்கு, இந்த வருட பட்ஜெட் மூலமாகத் தீர்வு பிறக்குமா?

! நிதி நிலை அறிக்கை மூலமாக உங்கள் நிலைமை சீர்பெற வழியில்லை. ஆனால், அரசு இது போன்ற மோசடிகள் மறுபடி நிகழாமல் பாதுகாக்கலாம். அதற்கு வழிகள் உண்டு.

● க.செல்வகுமார்,
சிங்கப்பூர்

? நாதுலா கணவாய் வழியாக இந்திய - சீனா வர்த்தகம் இரு நாடுகளிடையே நல்லுறவை வலுப்படுத்துமா?


! வர்த்தகம் மட்டுமே நல்லுறவை வளர்த்துவிடாது. இரு நாடுகளுக்கும் இடையே உள்ள பிரச்னைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வு ஏற்பட வேண்டும். அதற்கான முயற்சி இன்றி பாதையை மட்டும் திறப்பதால் வர்த்தகர்களோடு பயங்கரவாதிகளும் ஒற்றர்களும்,

● உலகுக்கு உதவி!



● கட்டாய சேவை!





• பறந்த பண்பாடு!



• அடையாளப் பெருமை!

வியாபாரிகள் உரு வில் நுழைய வாய்ப்பு உண்டு. எச்சரிக்கை தேவை.

● கே.என். பாலகிருஷ்ணன்,
கும்பகோணம்

? அ.தி.மு.க.வில் முதல்நிலை, இரண்டாம்நிலைத் தலைவர்கள் சிலரைக் குறிப்பிட்டுச் சொல்லுங்களேன்...

! முதல் நிலை: ஜெயலலிதா, புரட்சித்தலைவி, அம்மா. இரண்டாம் நிலை: அம்மா, புரட்சித்தலைவி, ஜெயலலிதா!

● நா. பத்மாவதி, ஜோலார்பேட்டை ★

? பொடா சட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்கிறாரே ஜெயலலிதா?

! அவர் எல்லை மீறி, அதை அரசியல் பழிவாங்கலுக்காக துஷ்பிரயோகம் செய்யாமல் இருந்திருந்தால், அது ரத்தாகியிருக்குமா என்பதே சந்தேகம்தான். அத்தகைய துஷ்பிரயோகத்துக்கு இனி யாருக்குமே வாய்ப்பளிக்க வேண்டாம். பொடா இல்லாமல் பயங்கரவாதத்தை ஒடுக்க முடியாது என்ற வாதம் ஏற்கத் தக்கதல்ல. பொடா இருந்தபோதும் பயங்கரவாதம் நிகழ்ந்தது சமீப சரித்திரம். எனவே, அதை எதிர்க்க வேறு வழிகளைத் தான் யோசிக்க வேண்டும்.

● பா. அச்சுதன்,
வயலூ

? சமீபத்தில் உங்கள் வருந்த வைத்த சம்பவம்?

! திருவாரூர் கல்கி முகவர் (ஏஜென்ட்) நடராஜ அய்யர் மறைவு. முகவர்களில் மூ தவர் - வயது 83. சுறுசுறுப்ப இளையவர் - சில வருடங்களு முன்பு வரை சைக்கிள் ஏறி லைனைச் சுற்றி வ கொண்டிருந்தவர். உழைப்பா உயர்ந்தவர்; தன்னோடு பழகிய களின் உள்ளங்களில் நிறை தவர்.

● எம். பாஸ்கர், திண்டுக்கல்

? 'துரோகம் என்பது தமிழக ச திரத்தில் இன்றுவரை தொடர்கிற என்று வேலூரில் நடந்த சிப்பாய் புர விழாவில் கருணாநிதி பேசியுள்ள பற்றி?

! ஆமாமாம். வாக்காளர்களு அரசியல்வாதிகள் இழைக்கும் துரோ உள்பட!

● எஸ். கௌரிலக்ஷ்மி, ஸ்ரீரங்கம்

? உள்ளாட்சித் தேர்தல்களி வாக்களித்தால்தான் டி.வி., இரண் ஏக்கர் நிலம் ஆகியவை தரப்படு என கிருஷ்ணராயபுரம் எம்.எல் கூறி யிருப்பது பற்றி...?

! அது பொதுத்தேர்தல் சமயத் ஆசை காட்டிய லஞ்ச ஊழல்; உள்ளாட்சித் தேர்தல் சமயத்தி மிரட்டும் ப்ளாக் மெயில்!

● பி. ராஜேஸ்வரி, மதுரை - 1

? இந்துக் கோயில்களைச் சீரமை பாக். அரசு ரூ. 150 கோடி செல வி றதாமே...?

! இந்தியாவிலுள்ள இந் கோயில்களில் குண்டு வைக்கவு இந்துக்களைத் தொடர் வெடிகுண் களால் கொல்லவும் எவ்வளவு செ வழிக்கிறது என்பதற்குக் கண தரட்டும்.

❑ ரூ. 100 பரிசு பெறுபவர்:

கு. செல்வகுமார்,
BLK 122, # 04 - 76,
Geylang East Central,
Singapore - 380 122

● அ. சுஹைல் ரஹ்மான்,
திருச்சி - 21

? "கிராமங்களில் டாக்டர்கள் ஓர் ஆண்டுகாலம் கண்டிப்பாக வேலை செய்ய வேண்டும் என்ற உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படும்" என்று அமைச்சர் அன்புமணி சொல்கிறாரே?

! கட்டாயத்தினால் இதைச் சாதிக்கும்போது நோயாளிகளுக்கு நன்மை விளையாது. ஆனால் கிராமப் பணியை டாக்டர்கள் விரும்பி ஏற்கக்கூடிய சூழ்நிலையை அரசு உருவாக்க முடியும்.



* சோர்விலா உழைப்பு



* சடங்குச் சட்டம்!

● சீர்காழி சாமி, சீர்காழி

? குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்த பிறகு மற்ற இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்துவது குறித்து?

! பக்கத்து வீட்டில் திருடன் நுழைந்தது தெரிந்த பிறகு நம் வீட்டுப் பூட்டை இழுத்துப் பார்த்துவிட்டுத் தூங்கச் செல்வதில்லையா...? அப்படித்தான் இதுவும்!

● உமரி பொ.கணேசன்,
மும்பை-37

? பால் தாக்கரேயுடைய மனைவி சிலை மீது சகதி பூசப்பட்டதால் தொண்டர்கள் பஸ்களை எரித்து விட்டார்களே... இது என்ன செயல்?

! ஒரு தவறை, அதைவிடப் பெரிய தவறால் திருத்திவிட முடியாது என்பதை உணராத மூர்க்கச் செயல்.

● க. வேடியப்பன்,
கும்முடிப்பூண்டி

? உலகில் தீவிரவாதம் பெருக பாகிஸ்தான் அதிபர் முஷாரஃப்தான் காரணம் என்று பேனசிர் புட்டோ கூறுகிறாரே?

! உண்மையல்ல என்று ஒதுக்கிவிட முடியாது. இந்தியாவில் பயங்கரவாதம் வெடிக்கிற கொடூரத்தைப் பார்க்க, அதன் உலகளாவிய பரவுதலுக்குப் பாகிஸ்தான் உறுதுணை என்பதற்கான வலுவான அடையாளங்களும் தெரிகின்றன. யுத்தத்தை விடவும் மிக மலிவான பழி வாங்கல் நடவடிக்கை பயங்கரவாதம்.

● எம். ஏழுமலை,
அக்ரஹாரம்

? காமராஜர் பிறந்த தினத்தை 'கல்வி வளர்ச்சி நாளாக' அறிவிக்க, அரசு ஒரு சட்டம் கொண்டு வருகிறதாமே?

! ஆரம்பப் பள்ளியிலிருந்து விலகும் குழந்தைகளின் எண்ணிக்கையை இந்தச் சட்டத்தால் குறைக்க முடியுமா?

ஆசிரியர்களின் தரத்தையும் மன வளத்தையும் இச்சட்டத்தால் உயர்த்த முடியுமா?

பள்ளியில் படித்து முடித்து வெளியேறும் மாணவர்கள் வெறும் ஏட்டறிவுடன் திகைத்து நிற்காமல் பிழைப்புக்கு வழி தேடிக்கொள்ள இச்சட்டம் வழி வகுக்குமா...? இவை நிறைவேறுமெனில் சட்டத்தால் பயனுண்டு.

● ஆர். நாகராஜன்,
சென்னை - 117

? கால்பந்து உலகக் கோப்பைப் போட்டியில் இத்தாலி வென்றதற்காக, காங்கிரஸ் தொண்டர்கள் சோனியா படத்தை வைத்துக் கொண்டாடியது சரியா?

! காங்கிரஸ் தலைவர்கள் அனைவருமே வெட்கித் தலைகுனிய வேண்டிய முட்டாள்தனம்!

★ ரூ. 50 பரிசு பெறுபவர்:

நா. பத்மாவதி,
6. முனுசாமி நாயுடு தெரு,
சந்தைக்கோடியூர்,
ஜோலார்பேட்டை - 635 851

அரவிந்திடமிருந்து போனை எதிர்பார்க்காத சண்முகம் வெலவெலத்துப் போய்விட்டார். பேச நா எழவில்லை. வார்த்தைகள் குழறிக் குழறி வெளிப்பட்டன.

"மாப்ள... நான் எதுவும்... தப்பு... செய்யல. என்னைப் பத்தி.... உங்களுக்குத் தெரியும்தானே?"

"ஏன் மாமா பதற்றப்படுறீங்க? நான் உங்கள ஒண்ணுமே சொல்லலையே...."

"இல்ல மாப்ள, கவிதா எல்லாத்தையும் சொல்லியிருப்பா..."

"சொன்னா. அதுக்காகத்தான் போன் பண்ணேன்."

"அப்ப நீங்களும் என்னைத் தப்பாத்தான் நெனச்சுட்டீங்க. ஏன் யாருமே என்னைப் புரிஞ்சுக்க மாட்றீங்க?"

காதல் சதுரங்கம்!

சண்முகத்தின் குரல் தழுதழுத்தது.

"ஏன் எல்லோருக்கும் புரிய வைக்க முயற்சி செய்றீங்க? புரிஞ்சவங்க புரிஞ்சுக்கட்டும். புரியாதவங்க புரியாமத்தான் போகட்டுமே..."

"மாப்ள..."

"ஆமா மாமா, கவிதாவ நான் பாத்துக்குறேன். நீங்க முதல்ல இஷ்டியா ஃபீல் பண்ணாம இருங்க"

"ரொம்ப தேங்ஸ் மாப்ள..." சண்முகம் மனத்தில் சட்டென்று நிம்மதி படர்ந்தது.

போனை வைத்த பிறகும் அரவிந்த் சொன்னது அவர் காதில் மறுபடி மறுபடி ஒலித்துக் கொண்டிருந்தது.

இது நடந்து இரண்டு நாட்கள் கழித்து சண்முகம் அந்தப் பிரபல மருத்துவமனைக்கு மல்லிகாவை அழைத்துச் சென்றபோது, மதியம் மூன்று மணி. கூடவே மல்லிகாவின் அம்மாவும் சென்றிருந்தார். மனநல மருத்துவர் டாக்டர் பிரகாஷிடம் 3.30-க்கு அப்பாயின்மெண்ட். வரவேற்பறையில் காத்திருந்தனர். சண்முகம் அமர்ந்திருந்த நாற்காலிக்குப் பக்கவாட்டில் உட்கார்ந்திருந்த சண்முகம் வயதையொத்த நபர், சட்டென்று கவனித்து,

"டேய் சண்முகம், எப்படிடா இருக்க?" என்றார் வியப்பாய்.

அவரைக் கூர்ந்து பார்த்த சண்முகம், "டேய் பரமு, என்ன இங்க?" என்றார்.

இருவரும் பரஸ்பரம் நலம் விசாரித்துக் கொண்டனர். பால்ய கால நண்பர்கள். மல்லிகாவைக் கவனித்த பரமு, "டேய், இது மல்லிகாதானே?" என்றார்.

"ஆமாடா."

"இவங்க எப்படி உன்னோட?"



பரமு முகத்தில் குழப்பம் கடை விரித்தது. சண்முகம் மெல்ல அவர் காதருகே குனிந்து எல்லாவற்றையும் சொன்னார். ஆச்சர்யத்தோடு கேட்ட பரமு.

"உன் பசங்க எப்படிடா இதுக்கு சம்மதிச்சாங்க?" என்றார்.

"அவங்க எங்க சம்மதிச்சாங்க?" சண்முகம் இரண்டாம் படலத்தையும் விவரித்தார்.

"தப்பு பண்ணிட்ட சண்முகம். மல்லிகா மேல இருக்குற உன் பாசம் நியாயமானதுதான். ஹெல்ப் பண்ற... எல்லாம் சரிதான். ஆனா ஒரு ஸ்டேட்டஸ்ல இருக்குற உம் பசங்கள பகைச்சுக்கிட்டு செய்யணுமா? அவங்க வீட்ல மல்லிகா இருக்கட்டும். அப்பப்ப போய்ப் பாரு. உதவு. இப்படி உன் வீட்ல கூட்டிட்டு வந்து வைச்சுப் பாக்கறது எல்லாம் கொஞ்சம்கூட நல்லா இல்ல. ரொம்பவே டுமச்டா!" சண்முகம் அவனை முறைத்தார்.

"என்னடா முறைக்கற. மனசுல பட்டத நான் எப்பவும் ஒப்பனா பேசிருவேன்னு உனக்குத் தெரியும்ல... உனக்கு நாளைக்கு ஒண்ணுன்னா உம் பொண்ணும், பையனும்தான்டா ஓடி வரணும். அவங்கள போய் இந்த விஷயத்துக்காக, அதுவும் இந்த வயசுல எதிர்த்துக்கிட்டு... நல்லா யோசிக்க செய்வியே எந்த விஷயத்தையும்.. நீயாடா இப்படி?"

சண்முகம் புழுவாய் நெளிந்தார்.

"அது யாரு அவங்க அம்மாவா? ஏம்மா. அவன்தான் துரோகம் பண்ணிட்டோம்னு ஏதோ உறுத்தல்ல கூப்பிட்டிருக்கான். நீங்களும் உடனே வந்துடுறதா? அவனுக்கும் ஒரு குடும்பம் இருக்கு... அதை நினைச்சுப் பார்த்தீங்களா?"

மல்லிகாவின் அம்மாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அதிர்ச்சியாக சண்முகத்தைப் பார்த்தார்.

"டேய் பரமு. அத்தோட நிறுத்திக்க உன் பிரசங்கத்த" சண்முகம் குரலில்

மு.மாறன்



கடுமையை ஏற்றினார்.

"என்னடா, உன் நல்லதுக்குப் பேசினா என்னையே அதட்டுற?"

"எது நல்லதுன்னு எனக்குத் தெரியும்.. நீ வாயை மூடு"

"ஆனாலும் இந்த வயசுக்கப்புறம் உன் மூளை இப்படி மழுங்கக்கூடாதுடா..." பரமு தன் ஆற்றாமையை வெளிப்படுத்திவிட்டு எழுந்து சென்றார்.

அவரையே பார்த்துக் கொண்டிருந்த மல்லிகாவின் அம்மா, அவரது தலை மறைந்ததும் மகளின் கையைப் பிடித்து எழுப்பி, தானும் எழுந்தாள்.

"எங்க?" என்றார் சண்முகம்.

"வீட்டுக்குப் போகலாம்."

"அப்பாயிண்ட்மெண்ட் வாங்கியிருக்கோம்..."

"இங்க மட்டும் என்ன பெருசா சொல்லிடப் போறாங்க... குணப்படுத்த முடியாதுன்னுட்டு உங்க பொண்டாட்டியான்னு கேட்பாங்க.. என் நெஞ்சு குமுறும்... உங்க தலை கவிழும்... எதுக்குங்க வீண் அவஸ்தை... வாங்க போகலாம்."

கிளம்பிவிட்டாள்...

சண்முகம் பின்னாலேயே பேசிக் கொண்டு வந்தார்.

"அவன் ஏதோ என்மேல அக்கறைல பேசிட்டான்... அதைப் போயி பெருசா எடுத்துக்கிட்டு..."

"எல்லாருக்கும் உங்க மேல அக்கறை உண்டு.. எங்களுக்குத்தான் இல்ல.."

"நீங்களா ஏன் எதெதுவோ நினைச்சுக்கறீங்க...?"

"நினைக்க வச்சுடறாங்களே...."

என்னென்னவோ சொன்னார். அந்தம்மா கேட்கும் மனநிலையில் இல்லை. ஆட்டோ பிடித்து மூவரும் தெருமுனையிலேயே இறங்கிக் கொண்டனர். இவர்கள் வருவதை வேலைக்காரி வசந்தா பார்த்துவிட்டாள். உடனே ஓடிச்சென்று சிவநேசன் மனைவி சுகந்தியிடம் காதைக் கடித்தாள்.


"அம்மா, ஜோடி போட்டுட்டு வர்றத பாருங்க."

சுகந்தியும் வசந்தாவும் வாசலுக்கு வந்து இவர்களையே வெறிக்கப் பார்த்து குசுகுசுவென பேசிக்கொண்டனர். சண்முகம் தலைகுனிந்து கொண்டார். மல்லிகாவின் அம்மா நடையை வேகப்படுத்தினார்.

வீட்டுக்குள் நுழைந்த கொஞ்ச நேரத்திலேயே காலிங்பெல் அழைத்தது. போய்த் திறந்த சண்முகம், கொஞ்சம் படபடப்பாகிவிட்டார். வந்திருந்தது அவர் மனைவியின் தம்பி சம்பத் குமார்.

"வா, வா.. சம்பத்..."

"எப்படி மாமா இருக்கீங்க? தனியா இருக்கறது போரடிக்குதா? நான்தான் வந்து எங்ககூட தங்குங்கன்னு சொன்ன கேக்க மாட்டீங்களே."



சோபாவில் அமர்ந்த சம்பத்துக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார் சண்முகம். "என்ன திடீர் விஜயம்?"

"சென்னைல பிஸினஸ் சம்பந்தமா ஒருத்தரப் பார்க்க வந்தேன். பார்த்துட்டேன். அப்படியே உங்களயும் பார்க்கலாம்னு வந்தேன்." சமையலறையில் பாத்திரம் உருட்டும் சத்தம் கேட்க "யாரிருக்கா உள்ளே?" என்றார் சம்பத்.

"அது... வந்து..." என்று சண்முகம் திணறிக் கொண்டிருக்கும்போதே

மல்லிகாவின் அம்மா கையில் துணிப் பையுடன் அவர்முன் வந்து நின்றார். கூடவே மல்லிகா.

"நாங்க கிளம்புறோம். எங்களால நீங்க படற அவஸ்தைய கண்கொண்டு பார்க்க முடியல. இப்பக்கூட அவர் கிட்ட எப்படித் தயங்கனீங்க. தடுமாறு நீங்க. தொடர்ந்து உங்களுக்கு சங்கடத்த கொடுக்க நாங்க விரும்பல. எங்கள மன்னிச்சிடுங்க."

சண்முகம் இருக்கையில் இருந்து எழுந்துவிட்டார்.

"அம்மா, இப்படி நீங்க புறப்படற துக்கா இத்தனை வலியையும் தாங்கிக்கிட்டேன்? எம் பொண்ணு, பையன், அக்கம் பக்கத்தாரு எல்லாரும் என்னைக் கேவலமாப் பார்த்தப்ப கூட 'நம்ம மனசுல களங்கம் இல்ல'ன்னு உறுதியா இருந்தேனே.. அதுக்கு நீங்க தர்ற வெகுமதி இதுதானா?"



"உங்க உறுதியைப் பாராட்டலாம்; ஆனா கூடவே வாழ்ந்துட முடியாதுங்க. ஒரு மனுஷனுக்கு உயிரே மானம்தான். அதுவே போகுதுன்னும்போது அப்புறம் நாங்க இருந்துதான் என்ன புண்ணியம்?"

"நான் அப்படி நினைச்சாத்தானே நீங்க கவலைப்படணும்?"

"நினைக்கலைன்னாலும் கவலைப் படறவதான் மல்லிகா. நான் அவ அம்மா."

"இதுதான் உங்க முடிவா?"

"ஆரம்பம். உங்களுக்கும் மல்லிகாவுக்குமான தோழமையை யார் புரிஞ்சுக் கிட்டாங்களோ இல்லையோ, நான் முழுசா உணர்ந்துட்டேன். என்ன, என்னால இப்ப உங்ககிட்ட மல்லிகாவ விட்டுட்டுப் போக முடியல. உங்க குடும்பமும் இந்த சமூகமும் புரிஞ்சுக்கற நாள் ஒண்ணு வரும். அப்ப நீங்கதான் பார்த்துக்கப் போறீங்க அவள. இனி நான் நிம்மதியா இருப்பேன். எனக்கப்புறம் என் பொண்ணு என்ன ஆவாளோங்கற கவலை இனி எனக்கு இருக்கப் போறதில்ல" பேசப் பேச அந்த அம்மாவுக்கு குரல் உடைந்தது. சண்முகமும் அமைதியாகிவிட்டார்.

"உங்க மாப்ள ஒருத்தர்தான் உங்க மனச புரிஞ்சு வச்சிருக்கார். எல்லாரும் உங்க நல்ல ஆத்மாவ புரிஞ்சுக்கணும். அதுக்கு ஒரு இடைவெளி தேவை. நாங்க இங்க இருந்தா உங்க மேல இன்னும் வெறுப்புதான் கூடிட்டுப் போகும்."

சம்பத்குமாருக்கு ஒன்றும் புரியவில்லை. சண்முகத்திடம், "யார் மாமா இவங்க, என்னென்னவமோ பேசறாங்க?" என்றார்.

"பதற்றப்படாதீங்க தம்பி, அவர் எல்லாத்தையும் உங்ககிட்ட சொல்லுவார். தயவுசெஞ்சு அவர தப்பா மட்டும் நினைச்சுடாதீங்க, அவரு தங்கம்" என்ற மல்லிகாவின் அம்மா,

"அப்ப நாங்க புறப்படட்டுமா... பஸ் ஏத்தக்கூட வரமாட்டீங்களா?" என்று பாவமாய்க் கேட்க, சண்முகம் மல்லிகாவைப் பார்த்தார். எந்த உணர்ச்சியுமே அந்த முகத்தில் இல்லை. கடந்து போன காதல் காலங்கள் எல்லாம் அவர் மனத்தில் நிழலாடின. பிரிவதற்கு முந்தைய தினம், பூங்கா ஒன்றில் மல்லிகா கூறிய கவிதை சட்டென்று ஞாபகத்துக்கு வந்தது.

'உனக்கும் எனக்குமான இடைவெளி
குறைந்து கொண்டேயிருக்கிறது
முற்றிலும் இடைவெளியற்ற
நெருக்கத்தை நோக்கி நாம்
நகர்ந்து கொண்டிருக்கிறோம்
காதலின் விரல் பிடித்து'

சண்முகம் மல்லிகாவின் விரல் பிடித்து வாசல் நோக்கி நடக்க ஆரம்பிக்க, அவளுடைய அம்மா பின் தொடர்ந்தார்.

(நிறைந்தது)

சக்ஸஸ் ஸ்டோரி

“இங்கேயும் ரஜினிதான்

சந்திரமோகனுக்கு அப்போது வயது இருபத்தெட்டுதான். ஹெச்.சி.எல் சாஃப்ட்வேர் கம்பெனியில் கை நிறையச் சம்பளம். வேலை நேரம் தவிர மத்த நேரங்களில் சினிமா மீதுதான் ஆர்வம். முக்கியமாக சினிமா சம்பந்தப்பட்ட செய்திகளைப் படிப்பதில். 'ஏகப்பட்ட சினிமா பத்திரிகைகள் சக்கைபோடு போடும்போது இணையத்தில் ஏன் சினிமா பத்திரிகை ஆரம்பிக்கக்கூடாது?' பளிச்சென்று வந்த ஐடியாவை பத்திரமாகப் பிடித்துக்கொண்டார்.

தொழில் திறமையும் தனிப்பட்ட ஆர்வமும் கூட்டணி போட்டன. ஆறு வருஷங்களுக்கு முன்பு தென்னிந்தியாவிலேயே முதல் முதலாக சினிமா செய்திகளுக்காக ஒரு இணையத்தளம் தயாரானது. அது www.cinesouth.com.

சினிமா செய்திகளை விரும்பிப் படிக்கும் வெளிநாட்டுத் தமிழர்கள் மத்தியில் சினிசவுத்துக்கு ஏகப்பட்ட வரவேற்பு. ஹிட் ரேட் எகிற ஆரம்பித்தது. ஆனால் வருமானம் என்பதே கிடையாது. ஸ்பான்ஸர்கள் தரும் சொற்ப தொகையில்தான் கொஞ்சம் மூச்சுவிட முடிந்தது. ஏகப்பட்ட தயக்கத்துக்குப் பின்னர்தான் சினிசவுத்தை பணம் கட்டிப் படிக்கும் பெய்டு சர்வீஸாக அறிவித்தார்கள்.


• சந்திரமோகன்

"இந்தளவுக்கு வரும்னு நான் நினைச்சுப் பார்க்கவே இல்லை. லட்சக்கணக்கான குடும்பங்களைத் தமிழ் சினிமா இன்னும் வாழ வைக்கிறதுங்கறது சத்தியமான உண்மை" என்று ஆச்சரியப்படும் சந்திரமோகன், சினிசவுத்தின் மேனேஜிங் டைரக்டர். இரண்டு பேரோடு ஆரம்பித்த நிறுவனத்தில் இன்று இருபது பேர் வரை வேலை பார்க்கிறார்கள். இன்றைக்கு தென்னிந்தியாவிலேயே சினிமா இணையதளங்களில் இரண்டாமிடத்தில் இருப்பது சினிசவுத்தானாம்.

தமிழ், தெலுங்கு, மலையாளம் என மூன்று மொழிகளிலும் சினிமா செய்திகளை சுடச்சுடத் தருகிறார்கள். "அப்போ தமிழ் எழுத்துரு பிரச்னை பெரிய தலைவலியா இருந்துச்சு. இப்போ யூனிகோட் வந்தப்புறம் தமிழில் படிக்கிறது சுலபம். என்னதான் இருந்தாலும் தமிழில் சினிமா நியூஸ் படிக்கிறதே தனி சுகம்தான். அதே சமயம் தமிழ் பேசத் தெரிந்தாலும் படிக்கத் தெரியாதவங்களுக்கு ஆங்கிலத்திலும் சினிமா செய்திகள் சினிசவுத்தில் உண்டு" என்கிறார் சந்திரமோகன்.

பத்திரிகைகளில் வருவது போலவே நடிகர், நடிகைகளின் பேட்டிகள், விமர்சனங்கள், கிசுகிசுக்கள் என்று களை கட்டுகிறது சினிசவுத். இணையத்தில் வெளியாகும் ஒவ்வொரு ஸ்டில்லுக்கும் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒரு சின்ன தொகையைக் கொடுத்துவிட்டே வெளியிடுகிறார்களாம். 'என்னதான் இருந்தாலும் சினிசவுத் பக்கம் அடிக்கடி வருவது வெளிநாட்டுவாழ் தமிழர்கள்தானே!' என்கிற கேள்வியை அவசரமாக மறுக்கிறார். "அப்படித்தான் நாங்களும் தப்பா நினைச்சுட்டிருந்தோம். இப்போ உள்ளூர்க்காரங்களும் நிறைய வர ஆரம்பிச்சுட்டாங்க. மாதம் 200 ரூபாய் கொடுத்து சினிமா செய்திகள் படிக்க நிறைய பேர் இன்னும் ஆர்வத்தோடு நம்மூரில் இருக்காங்கங்கிறதுதான் நிஜம்" என்கிறார்.

சினிமா ரசிகர்கள் மட்டுமல்ல, சினிமாவுலகத்தில் இருப்பவர்களும் அடிக்கடி வரும் இடமாகிவிட்டது சினிசவுத். படப்பிடிப்புக்கு



சூப்பர் ஸ்டார்!”

வெளிநாட்டுக்கு போன நடிகர் ஸ்ரீகாந்தை ஏர்போர்ட்டில் இமிக்ரேஷன் அதிகாரிகள் குடைய ஆரம்பிக்க, லேப்டாப்பை திறந்து சிஃபிசவுத்தில் இருந்த தன்னுடைய போட்டோவைக் காட்டிய பின்னரே ஸ்ரீகாந்தை நம்பி வெளியே விட்டார்களாம். கிட்டத்தட்ட தமிழ் சினிமாவின் எல்லா நடிகர்களுமே சிஃபிசவுத்துக்கு ரெகுலர் விசிட்டர்கள்தான். நமீதாவின் படங்களுக்கு நமீதாவே பெரிய ரசிகராம்!

எதிர்கால திட்டங்கள் பற்றி கேட்டால், தமிழ் சினிமா பற்றிய எல்லா குறிப்புகளையும் சேகரித்து ஓரிடத்தில் வைக்கும் திட்டத்தை கண்கள் விரிய விளக்கிச் சொல்கிறார் சந்திரமோகன். சம்பந்தப்பட்டவர்களின் அனுதியோடு படங்களின் பாடல் காட்சிகள், முக்கியமான காட்சிகள் சிஃபிசவுத்தில் வரவிருக்கின்றனவாம். சினிமா விமர்சனம், பாடல் வரிகளின் தொகுப்போடு சீரியஸ் சினிமாவுக்கும் தனியாக ஒரு செக்ஷன் வரவிருக்கிறதாம். சிஃபிசவுத் போலவே தமிழில் ஒரு டஜன் இணையத்தளங்கள் உண்டு. இருந்தாலும் கடுமையான போட்டி, குறைவான ஸ்பான்ஸர்கள் சகிதம் இன்றும் முன்னணியில் இருப்பதை சந்திரமோகன் பெருமையாக நினைக்கிறார்.

“தென்னிந்திய சினிமா தளங்களில் இரண்டாமிடம் சிஃபிசவுத்துக்குத்தான்!”

சிஃபிசவுத்தில் எந்த விஷயத்துக்கு வரவேற்பு அதிகமாக இருக்கிறது என்று கேட்டால் பளிச்சென்று பதில் வருகிறது. "ரஜினி, கமல் பத்தின செய்திகள்தான்" ரஜினி பற்றி செய்தி வெளியிட்டால் ஹிட் ரேட் இருபதாயிரத்துக்கு எகிறுகிறதாம். "ரஜினி படமே வரல்லைன்னாலும் ரஜினி பத்தின செய்தி போட்டாலே ஹிட் எங்கேயோ போய்டும். உங்களுக்குத் தெரியுமா, இங்கேயும் ரஜினிதான் சூப்பர் ஸ்டார்!" என்கிறார் சந்திரமோகன்.

- ஜெ.ராம்கி

கர்நாடக மாநில லஞ்ச ஒழிப்பு இலாகாவின் தலைமை அதிகாரியாகப் பணியாற்றி வந்தார்



* வெங்கடாசலா

முதலமைச்சர் வீட்டுக்குப் போகட்டும்!

வெங்கடாசலா (இந்தப் பதவியை 'லோக் அயுக்தா' என்கிறார்கள்). நேர்மையான அதிகாரி. பல அரசு அதிகாரிகளின் வீடுகளிலும் அலுவலகங்களிலும் திடீர்ச் சோதனைகள் நடத்தி பல ஊழல்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தவர். கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 901 வீடுகளிலும் அலுவலகங்களிலும் ரெய்டு! 55,000 வழக்குகள்! அவற்றில் 33,000 வழக்குகளில் தீர்ப்பு வழங்கப் பட்டுவிட்டது. பல அதிகாரிகள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார்கள்.

கடந்த ஜூலை முதல் தேதி வெங்கடாசலா தன் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். 'அவருக்குப் பதவி நீட்டிப்பு கொடுக்க வேண்டும்' என்று மக்கள் சொல்ல, எரிகிற தீயில் எண்ணெய் வார்த்ததுபோல், கர்நாடக முதலமைச்சர் குமாரசாமி "லஞ்ச ஒழிப்பு இலாகாவுக்கு அதிக அதிகாரம் கொடுக்கக்கூடாது" என்று சொல்லி வைத்தார்.

இந்தச் சூழ்நிலையில் பெங்களூரிலிருந்து வரும் 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' நாளிதழ் ஒரு கேள்வியை மக்கள் முன் வைத்தது. 'லஞ்ச ஒழிப்புத் துறைக்கே லஞ்ச ஊழல் வழக்குகளை விசாரிக்கவும், குற்றம் சாட்டவும் அதிகாரம் கொடுக்கலாமா?' என்ற கேள்விதான் அது. மக்களிடமிருந்து வந்த பதில் கடிதங்களில் 46 கடிதங்கள் 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' நாளிதழில் பிரசுரமாயின. அவற்றில் ஒன்று 'எல்லா அதிகாரங்களும் 'லோக் அயுக்தா'வுக்கே கொடுக்கப்பட வேண்டும். அரசே வேண்டாம். முதலமைச்சர் வீட்டுக்குப் போகட்டும். அவருடைய வீட்டுக்கு மட்டும் அவர் முதலமைச்சராக இருக்கட்டும்' என்று தாக்கியது.

'முதல்வரைவிட அதிகமாகவும் கவர்னரைவிட குறைவாகவும் 'லோக் அயுக்தா'வுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். ஏனெனில் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் அவரைத் தட்டிக் கேட்க முடியும்.'


'லஞ்ச ஊழல் ஆரம்பமாவது கர்நாடக தலைமைச் செயலகமான 'விதான் சௌதா'வில்தான். நம் முதல்வரை 'லஞ்ச ஊழல் ஆதரவாளர்' என்று சொல்லலாம்...!' என்றெல்லாம் கடிதத்தில் போட்டுத் தாக்கியுள்ள மக்கள்,

'குற்றவாளிகளை விசாரிக்கவும் தண்டனை கொடுக்கவும் 'லோக் அயுக்தா'வுக்கு சக்திமிக்க அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும்' என்று வலியுறுத்தி வருகிறார்கள்.

அரசு செய்ய முடியாததை வெங்கடாசலா செய்து காட்டியிருக்கிறார்!

- அனிதா ராமச்சந்திரன்

காங்கிரஸுக்கு அழகே கோஷ்டிதான்!



காமராஜர் பிறந்ததின விழாவில் காங்கிரஸ் கட்சியின் சர்வகோஷ்டிகளும் கலந்து கொண்டாலும், ஜி.கே. வாசன் மட்டும் கலந்து கொள்ளவில்லை என்ற செய்தியைப் பேப்பரில் படித்துத் தெரிந்து கொள்கிறார் கிராமத்தில் இருக்கும் மூத்த காங்கிரஸ்காரர் ஒருவர். இவர் ஒரு சுதந்திரப் போராட்ட தியாகியும் கூட. தற்போது காங்கிரஸில் நிலவும் பிரச்னைகளைத் தீர்க்க, அதன் கோஷ்டித் தலைவர்கள் எல்லோரையும் நேரில் சந்தித்துப் பேசிவிடுவதென முடிவெடுக்கிறார். (அவ்ளோ பேரையும் சந்திக்கமுடியுமா... பேராசை பிடிச்ச ஆளா இருப்பார் போல..) சென்னைக்கு பஸ் பிடித்து அவர் நேராக வந்தது ஆழ்வார் பேட்டை அசோகா தெருவில் இருக்கும் வாசன் வீட்டுக்கு. எல்லாக் கெடுபிடிகளையும் தாண்டி வாசனைச் சந்திக்கிறார். சமாதானப் படலம் ஆரம்பமாகிறது.

"ஏந்தம்பி... இப்படி பொசுக்குன்னு காமராசரைக் கயட்டி வுட்டிட்டியேய்யா... சின்னப்புள்ளத்தனமால்ல இருக்கு" என்று தொடங்குகிறார்...

"அய்யா... முன்னால நாங்க த.மா.கா.-ன்ற பேர்ல வெளில இருந்தோம். ஆனா இப்போ உள்ளே வந்துட்டோம்ல. அதுக்கு ஏத்த மாதிரி எங்களுக்குரிய சீட்டைப் பிச்சிப் பிராண்டி தந்தரணும்ல... அதைத் தராம நேத்து வந்த கிருஷ்ணசாமி என்னா சலம்பு சலம்பறாரு... அப்போ எனக்கு எவ்ளோ கெத்து இருக்கும். அதான் என் பங்குக்கு நானும் கொஞ்சம் சலம்புனேன்..." என்கிறார் வாசன். சூடு பிடிக்கிறது சம்பாஷணை.

"அதெல்லாம் சரிதான் தம்பி... என்னதான் இருந்தாலும் அவரு வயசுல மூத்தவரு... ஏன் ஒரு எட்டு கிருஷ்ணசாமியைப் போய்ப் பார்த்து நீங்க பேசக் கூடாது..."

டென்ஷனான வாசன் பிராண்டுகிறார். "அய்யா... வயசாச்சே தவிர உங்களுக்கு விவரம் பத்தல. நான் தெரியாமத்தான் கேட்கறேன். சாதாரணமா எனக்குப் பேச்சே சரளமா வராது. பக்கத்துல கோபண்ணா, பீட்டர் அல்போன்ஸ் மாதிரி 'ஒத்த கருத்துடைய' ஆளுங்க இருந்தாத்தான் தைரியமா பேசுவேன். அப்படிப்பட்ட எனக்கு இந்தப் புள்ளியியல் துறைய வாங்கிக் கொடுத்துட்டாங்களே, இது சரியா? வேற வழியில்லாம நான் அதை வச்சுக்கிட்டு அல்லாடிக்கிட்டு இருக்கேன். இதுல இளங்கோவன் ஆளுங்க என்னடான்னா, என்னை மேடைக்கு மேடை புள்ளி ராஜான்னு வேற நக்கல் விடுறானுங்க... உண்மையைச் சொல்லணும்னா எனக்கு அன்னிக்கு வயிறு சரியில்ல... அதான் நெஜம்."

"ஆனா, நீங்க ஸ்டாலினோட ஒரு விழாவுல கலந்துக்கிட்டதா பேசிக்கிட்டாங்களே! தம்பி..."

"அய்யா... இதுக்கு மேல பேசறதுக்கு என்கிட்ட மேட்டர் கிடையாது. இனிமே தமிழருவி மணியன் எதுனா எழுதிக் கொடுத்தாத்தான் பேச முடியும். பையனை அனுப்பியிருக்கேன். அவன் வர்றதுக்குள்ளாற இளங்கோவன் வீடு பக்கத்துலதான்... போய் அவர்கிட்ட





"பேசிடுங்க... அப்புறம் நாம விரிவா பேசுவோம்..." என்று சொல்லிவிட்டு வாசன் நகர, தியாகி நேராக இளங்கோவன் வீட்டுக்கு வருகிறார். அங்கே இளங்கோவன் முண்டா பனியனோடு அமர்ந்தபடி, 'மாநிலத்தில் கூட்டாட்சி' என்ற பெயரில் புத்தகம் எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். தியாகியைப் பார்த்த அடுத்த நிமிடமே முகம் சுண்டிவிடுகிறது. அவரை வேண்டா வெறுப்பாக வரவேற்கிறார்.

"ஏன் தம்பி... இப்படி ஒருத்தருக்கொருத்தரு அடிச்சிக்கிட்டியன்னா எப்படி தம்பி காங்கிரஸ் வளரும்...?" என்று நேராக மேட்டருக்கு வருகிறார் தியாகி.

"அய்யய்யோ... எதுக்குப் பெருசு நீ இப்படி அவசரப்படுற... இந்தப் பெருசுங்க தொல்லை தாங்க முடியலப்பா... அப்பப்போ கூட்டாட்சி, பொரியல் ஆட்சின்னு சவுண்டு விடறோம்... உடனே எல்லாப் பத்திரிகைலயும் கவர் ஸ்டோரில எங்க பேட்டி வருது – சும்மா கும்முன்னு தலைப்பு போட்டு. இதுக்குமேல எப்படி காங்கிரஸ் வளர முடியும்னு நினைக்கறீங்க..."

"அதுக்கில்ல தம்பி... எத்தனை நாளுக்குத்தான் பேட்டி கொடுத்தே வளர முடியும்.... வோட்டு வேணும்ல..." என்று தியாகி முடிப்பதற்குள், "எதுக்கு ஓட்டு... அப்புறம் திமுகவும், அதிமுகவும் எதுக்கு இங்க கட்சி நடத்தறாங்க... நாங்க இப்படியே ஆளுக்கொரு மந்திரி பதவி வாங்கி ஜமாய்ச்சுடுவோம்... அப்புறம் பெருசு... எனக்கு நிறைய வேலை இருக்கு. மயிலாப்பூர்ல ஒருத்தரு சும்மா ஊஞ்சல்ல குந்திக்கினு போட்டோவுக்கு போஸ் கொடுத்துக்கிட்டு இருப்பாரு... அவர்கிட்ட போய் பேசிப்பாரு..." என்கிறார் இளங்கோவன். வேறு வழியின்றி நேராக கிருஷ்ணசாமி வீட்டுக்குச் செல்கிறார் தியாகி.

"அட... ஒண்ணுமில்ல பெரியவரே... எப்போ பார்த்தாலும் மீடியாவுல, காங்கிரஸ்ல கோஷ்டின்னா இளங்கோவன், வாசன் ரெண்டுபேருந்தான் பெரிய ஆளுங்கற மாதிரி ஒரு பில்டப் கொடுக்கறாங்க. இது காங்கிரசைக் குறைச்சு மதிப்பிடறா மாதிரி. அதனாலதான் நானும் ஒரு பக்கம் களத்துல குதிச்சுட்டேன். பாருங்க இனிமே... கட்சியே கலை கட்டப் போகுது..." என்கிறார் கிருஷ்ணசாமி.

"கலை கட்டறதுல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். உங்களை சீக்கிரமே தூக்கப் போறதா சொல்றாங்களே அது நெசந்தானா?"

"வழக்கமா தலைவர் பதவியை மாத்தணும்னு அப்பப்போ கொரலு குடுக்குற ஜெயந்தி, நாச்சியப்பன் மாதிரி ஆளுங்க வேலையா இருக்கும். நீங்க வேணும்னா ஜெயந்தி கிட்ட போய் பேசுங்களேன்" என்று அவர் வீட்டுக்கு வழிகாட்டுகிறார் கிருஷ்ணசாமி.

எல்லாவற்றையும் கேட்ட தியாகிக்கு கோஷ்டிப் பூசல்தான் காங்கிரசின் அழகு என்பது புரியவர, புல்லரித்துப் போகிறார். இனி யாரையும் பார்க்க வேண்டாமென முடிவெடுத்து, தானே ஒரு கோஷ்டி ஆரம்பித்து கானம் பாடினால், நாளை தானும் தமிழக காங்கிரஸ் தலைவராவதற்கு வாய்ப்பிருப்பதை உத்தேசித்து, ஆள் சேர்க்கும் ஆர்வத்தில் அடுத்த பஸ்சில் ஊருக்குப் புறப்பட்டு விடுகிறார்.



கற்பனை: **முராரி**

புரியும் பொய்கள்!


அந்தப் பூங்காவின் பெஞ்சில் உட்கார்ந்தபடி சுற்றுமுற்றும் பார்த்தார் சுந்தரம். கொஞ்சம் கொஞ்சமாய் இந்தப் பூங்கா வயதானவர்களுக்கென்றே ஒதுக்கப்பட்டுவிட்டதாகத் தோன்றியது. எல்லா வகை நோய்க்காரர்களும் அங்கே நடந்தார்கள். பணிக்கால நிகழ்வுகள், இப்போதைய அவமானங்கள், அரசியல் நிலவரம் எல்லாம் பேசினார்கள். மூக்குக் கண்ணாடி ஃப்ரேமில் நூல் கட்டினார்கள். வயதான செருப்பில் ஊக்கு மாட்டினார்கள். காற்றுக்கு எதிராக லாகவமாய் மூக்குப்பொடி போட்டுத் தும்மினார்கள். வெற்றிலை மென்று செடிகளின் வேர்களைச் சிவப்பாக்கினார்கள்.

சுந்தரம், கனகத்தின் வரவை எதிர்பார்த்திருந்தார். அவர் பெரிய மகன் வீட்டிலும், கனகம் சின்னவன் வீட்டிலும் இருக்கிறார்கள். பாகப் பிரிவினை. மாதம் ஒருமுறை இந்தப் பூங்காவில் சந்தித்துப் பேசிக்கொள்வது ஆறுமாத கால வழக்கம். இன்றைக்கு கனகத்துக்குப் பிடித்த கைச்சுற்று முறுக்கு ஆறு வாங்கினார். மேல் துண்டால் பார்க் பெஞ்சை துடைத்தார். ஒரு கருங்கல்லை எடுத்து முறுக்குடன் சீனியைச் சேர்த்துப் பொடி செய்து பிளாஸ்டிக் டப்பாவில் எடுத்து வைத்துக் கொண்டார். அவருக்குப் பல் போய் முறுக்கு, சீடை சாப்பிட முடியாமல் போனபின் கனகம் இப்படித்தான் பொடிசெய்து தருவாள். அம்மியில் வைத்துப் பொடித்து ஒரு கிண்ணத்தில் போட்டு ஸ்பூனுடன் கொடுத்து விடுவாள். தூள் வாயில் கரையும்போது தனி ஆனந்தம். வயசானாலே குழந்தைகள் சாப்பிடுவதைப் பார்த்து மகிழ்ந்தாகிவிட்டது. இப்போதுதான் தன்னைப் பற்றி நினைப்பு வருகிறது.

தூரத்தில் கனகம் வருவது தெரிந்தது. உள்ளங்கையை சன்ஷேடாக்கிப் பார்த்தார். அவள்தான். அருகில் வந்தவுடன் அவர் கையைப் பிடித்துக் கொண்டாள். நடுங்கும் கைகள். பொங்கும் விழிகள். உதடுகள் துடிக்கின்றன. இருவருக்குமே பேச்சு வரவில்லை. 'எப்படி இருக்கீங்க?' என்று கேட்க, தலையாட்டினார்.

மஞ்சள் துணிப்பையிலிருந்து ஒரு பேரீச்சம் பழ பாக்கெட், நாலு கடலை மிட்டாய் எடுத்துக் கொடுத்தாள். அவர் முறுக்குப் பொடியை நீட்டினார். "மூணு வேளையும் சாப்பிட்ட பிறகு நொறுக்குத் தீனி வேணுமே உங்களுக்கு?"

"அதெல்லாம் குறை சொல்லவே முடியாது உன் மருமகளை. மாமா மாமான்னு உயிரை விடுவா. ஈறுக்கு இதமா வேகாத முறுக்கு, பிரட்டுன்னு ஏதானும் தருவா. அது சரி... நீ எப்படி இருக்கே? சின்ன மருமகளுக்கு யாரையுமே பிடிக்



அருள்மொழிவர்மன்

காதே. மகனுக்கும் அவ பேச்சுதான் வேதவாக்கு" என்றார்.

"இப்போ அப்படி இல்லீங்க. உமா என்னை ஒரு வேலையும் செய்யவிட மாட்டா. வாய்க்கு ருசியா சமைச்சுப் போடுறா. பிரியமா இருக்கா. அவனும் அப்படித்தான். அப்பாவைப் பார்க்கப் போறேன்னேன். ஏதாவது வாங்கிட்டுப் போன்னு பணம் கொடுத்தான். சீக்கிரமே அப்பாவை இங்கே கூப்பிட்டு வச்சுக் கணும்னு சொல்றான்" என்றாள்.

பேச்சு நீள்கிறது. கைக்கடிகாரத்தைப் பார்க்கிறார் சுந்தரம். "இரண்டு மணி நேரம் போனதே தெரியலியே. இனிமே அடுத்த மாசம் பார்க்கலாம். எனக்கு இரண்டு பஸ் ஏறி வரணும். பஸ்ஸில் ஏறவும் இறங்கவும் பெரிய பாடா இருக்கு. "ஏன்யா, பெருசு... பேசாம வீட்டில் கிடந்தா என்னங்கிறான் கண்டக்டரு" என்றார் சிரிப்புடன்.

அவர் சொன்னதில் பாதிக்குமேல் பொய் என்பது அவளுக்கும் அவள் சொன்னதில் நிறையவே பொய் என்பது அவருக்கும் நன்றாகத் தெரிந்துள்ளது. என்றாலும் அந்த வார்த்தைகளை நம்புவதாகத் தலையாட்டிக் கொண்டால் ஓர் ஆனந்தம். இருவரும் பூங்காவை விட்டு வெளியேறி வெவ்வேறு திசையில் நடக்கிறார்கள். ●



யுகா

ஆடி மாசம் பொறந்திடுச்சே, இனிமே திரும்பின பக்கமெல்லாம் வேப்பிலையும், பக்திப் பாடலுமா இருக்குமே, கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிட்டு வரலாம்னு 'யுகா'வைப் பார்க்கப் போனா, அவங்க கம்ப்யூட்டர் வேப்பிலையால அடி அடின்னு அடிச்சுப்புட்டாய்ங்கப்பா.

நாசர் வான்வெளி நட்சத்திரங்களை ஆராய்ச்சி பண்ற விஞ்ஞானி. ஒரு நியூ இயர் தினத்துல வானத்தைப் பார்த்துப் பதறிப் போறவர், தன்னோட உதவியாளினி சொர்ணமால்யாகிட்டே ஒரு ரகசியத்தைச் சொல்றாரு. ஒரு வால் நட்சத்திரம் பூமியைத் தாக்கி உலகமே அழியப் போகுதாம்!

'அடடா'ன்னு நிமிர்ந்து உட்காரும்போதே கதை சடார்னு ரூட் மாறுது. சொர்ணமால்யாவோட அப்பா தற்கொலை செய்துக்கறார். அவரோட ஆவி 'அகோரர்'ங்கற அமானுஷ்ய மனுஷங்களைப் பத்தி ஆராய்ச்சி செய்யற ஒரு பெண்ணைக் கொல்லுது.

அதாவது மனுஷங்ககிட்டே சுயநலமும் அழுக்கும் கூடிப்போச்சாம். அதனால ஒட்டுமொத்தமா மனுஷகுலத்தையே அழிச்சுட்டு பூமியைப் புனிதமாக்க ஒரு கும்பல் புறப்படுது. இவங்க கூட்டா தற்கொலை செய்துக்கிட்டு ஆவியா வந்து மக்களைக் கும்பல் கும்பலா கொல்லப் போறாங்களாம்!

நாசர், சொர்ணமால்யா இவங்களோடு ரிச்சர்ட் டீம் எப்படி இதைத் தடுத்து ஜனங்களைக் காப்பாத்துதுங்கறதுதான் மிச்சக் கதை.


விஞ்ஞான விஷயத்தோடு அமானுஷ்யத்தைச் சேர்க்க நினைச்சிருக்கார் டைரக்டர். ஆனா சரியா முடிச்சுப் போடாததால விஞ்ஞானம் ஆரம்பத்துலயே 'அப்பீட்' ஆயுடுது.

நடிச்சிருக்கிற ஆட்களைப் பத்திப் பேச பெருசா ஒண்ணும் விஷயம் இல்ல.

சத்தமே இல்லாம திகில் காட்சிகளைக் காட்ற காலத்துல 'டமால் டுமால்'னு போட்டு அடிச்சிருக்கார் தினா. மனுஷங்களோட மனசுல இருக்கிற அழுக்குப் போகணும்னு படத்துல ஒரு டயலாக் வருது. இந்தப் படத்துல வர்ற நாலுப் பாட்டையும் குலுக்கலையும் பார்த்தா கூடுமே தவிர குறையாது.

- லஜ்ஜாவதி





Supreme
SUN FLOWER OIL
Naturally healthy
Tasty
Non greasy
Re usable
4 side sealed printed laminated pouch
Anti-leaching Anti-odour
Supreme
SUNFLOWER OIL
100%
egetarian
FREE Gift with every pack
Stocks are available without this offer also
First Edible Oil Company to receive ISO 9001: 2000 Certification in South India



பரிசு பொருட்களை அள்ளிடவே
இதயம் குஷியில் துள்ளிடுமே!
லப் டப்
ஆடி '06
தள்ளுபடி
10% முதல் 50% வரை
அல்லது
தள்ளுபடி தொகையை விட அதிக மதிப்புடைய
பரிசுப்பொருட்கள்
ஜுலை 1 முதல் ஆகஸ்ட் 16 வரை
தி சென்னை சில்க்ஸ்
தமிழகத்தின் மாபெரும் ஜவுளி சாம்ராஜ்யம்
சென்னை • கோயமுத்தூர் • திருப்பூர் • ஈரோடு • திருச்சி
Shop online at www.thechennaisilks.com
ISO